மாலை 48 மணி 9 செப்டம்பர் 2006 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## கோபுரம் காத்த கோமான்
-காலச்சுவடுகள்

## கண்ணகியும் மாரியம்மனும்
-சிறப்புக்கட்டுரை



## கல்யாணத் தடைநீக்கும் கல்யாண விநாயகர்

## விநாயகர் 108 போற்றி

## திருமணவரம் நல்கும் திருமணஞ்சேரி

# ஸ்ரீகாமாக்ஷி அம்மன்
# மற்றும் ஸ்ரீவைகுண்டபெருமாள் வகையறா

## தேவஸ்தானம், மாங்காடு 602 101



ஸ்ரீவெள்ளீஸ்வர



அர்த்தமேருஸ்ரீகாமாக்ஷி

இத்திருக்கோயிலின் உப திருக்கோயிலான மாங்காடு, ஸ்ரீவெள்ளீஸ்வரர் திருக்கோயிலின் அஷ்டபந்தன ரஜதபந்தன மஹா கும்பாபிஷேகம் 31.08.2006 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

1.09.2006 முதல் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது அதற்கான கட்டணம் ரூ. 751/–

மாங்காடு ஸ்ரீகாமாக்ஷி அம்மன் திருக்கோயிலில் வருகின்ற 22.09.2006 முதல் 02.10.2006 வரை நவராத்திரிப்பெருவிழா சிறப்பாக நடைபெற உள்ளது.

அனைவரும் வருக வருக! திருவருள் பெறுக!!

**மா.கவிதா, பி.எல்**
துணை ஆணையர் / செயல் அலுவலர்
கூடுதல் பொறுப்பு

**டாக்டர் மணலி ஆர்.சீனிவாசன், எம்.டி.எஸ்**
பரம்பரை தர்மகர்த்தா



திருக்கோயில்

| திருவள்ளுவர் | ஆண்டு 2037 | விய- புரட்டாசி |
| --- | --- | --- |
| மாலை 48 | மணி 9 | செப்டம்பர் 2006 |


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

**''தமிழர் என்றோர் இனமுண்டு**
**தனியே அவர்க்கோர் குணமுண்டு''**

என்று பெருமிதத்தோடு தமிழ்க் கவிஞர்கள் பாராட்டும் தமிழர்தம் குணங்களில் தலைசிறந்த ஒன்றுதான் நன்றியுடைமை எனும் குணமாகும்.

**''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்பு பாராட்டும் உலகு''**

என்று திருவள்ளுவப் பெருந்தகையும் இதனை நன்கு தெளிவுப்படுத்தியிருக்கக் காணுகின்றோம்.

தமிழக வரலாற்று ஆதாரங்களாகத் திகழும் கல்வெட்டுக்களிலும் தமிழர்தம் விழுமிய நன்றியுணர்வு காணக் கிடைக்கின்றது என்பதனை விவரிக்கும் வகையில் நம் **மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்''** டாக்டர் கலைஞர் அவர்கள் வடித்துள்ள அருமையான கட்டுரை ஒன்று இத் ''திருக்கோயில்'' இதழில் வெளியிடப்பட்டிருப்பது வாசகர்களுக்குத் தமிழ்ப் பெருவிருந்தாய் அமையும் என்று நான் நம்புகின்றேன்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை மிக்க ஆலயங்களால் சிறப்புற்று விளங்கும் நம் அருமைத் தமிழகத்தில், இறை வழிபாட்டிற்குரிய உயர்தனிச் செம்மொழியாகவும் நம் தெய்வத்தமிழ் மொழியே சிறப்புற்று விளங்கிய பான்மையைத் திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம் முதலான சங்க இலக்கியங்களும், தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட பன்னிரு திருமுறைகள் மற்றும் நாலயிரத் திவ்விய பிரபந்த நூல்களும் நமக்கு நன்கு தெளிவுபடுத்துகின்றன.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மணிவாசகரும், பன்னிரு ஆழ்வார்ப் பெருமக்களும் விரும்பிப் போற்றிய தெய்வத் தமிழ் வழிபாட்டைச் சிறப்புறச் செயற்படுத்தி **''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்''** எனும் முழக்கத்தை உருவாக்குவதே நம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் உயர் - உயிர்க் கடமையும் ஆகும்.

இதற்காகவே 1996-2001 ஆம்ஆண்டுகளில் **''தமிழ் அர்ச்சனை மேம்பாட்டுக் குழு''** அமைத்துத் தமிழ்ச் சான்றோர்கள் வாயிலாகத் தமிழில் போற்றி நூல்கள் அச்சிட்டு அவற்றை அர்ச்சகர்களின் பயன்பாட்டிற்காக இலவசமாக வழங்கினோம்.

மீண்டும் தமிழில் போற்றி நூல்களை அச்சிட்டுத் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு இலவசமாக வழங்குதல், எதிர்வரும் 2007ஆம் ஆண்டிற்குள் 500 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து திருக்குட நீராட்டு விழா நடத்துதல், திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காகப் பல்வேறு நலப்பணிகள் செயற்படுத்துதல் போன்ற 41 முக்கிய அறிவிப்புகளை நம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறநிலையத் துறையின் மானிய கோரிக்கையில் வெளியிட்டார்கள்.

அவை யாவும் நம் மக்கள் அறிந்து மகிழ்வுறும் வகையில் இந்தத் ''திருக்கோயில்'' இதழில் வெளியிட்டுள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவகெங்கைச் சீமையில் காளையார் கோயிலில் விண்முட்ட கோபுரம் அமைத்தும், ஆலயத் திருப்பணிகள் நித்தமும் புரிந்தும் சிவநேசச் செல்வர்களாய் சீரிய முறையில் ஆட்சி செய்த மருது பாண்டியர்கள் தாம் கட்டிய கோயில் கோபுரத்தைக் காத்திட தம்முயிரும் தியாகம் செய்து புகழ் கொண்ட சிறப்பைக் **''கோபுரம் காத்த கோமான்''** கட்டுரை சிறப்புறத் தெளிவுபடுத்துகின்றது.

இந்தத் திருக்கோயில் இதழில் வெளியாகியுள்ள அனைத்துக் கட்டுரைகளும் சிறப்பான கட்டுரைகளே. படித்துப் பயன்பெற்றிட அன்புடன் வேண்டுகின்றேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,**
**119, உத்தமர் காந்தி சாலை,**
**சென்னை - 600 034.**

# என்னைக் கவர்ந்த கல்வெட்டு

## மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்




செங்கத்தில் உள்ள சிலையின் வடிவமொன்று என்னை மிகவும் கவர்ந்தது. வீரனொருவன் நிற்கின்றான். அவன் பின்னால் ஒரு நாய் நிற்கிறது. இதுதான் அந்தச் சிலையின் அமைப்பு. பல்லவர்களிலே பெரும் புகழ் பெற்ற மன்னன் மகேந்திரவர்மன் காலத்தியது அது.

எருமைப் பண்ணையின் காவலன் அவன். அவனைக் கள்ளர்கள் வீழ்த்தி விடுகிறார்கள். வீரனுக்குத் துணையாக நின்ற நாய் அந்த அடிபட்ட வீரன் விழுந்து கிடந்த இடத்திலேயே, அவனை அடித்து வீழ்த்திய கள்ளர்களோடு போரிட்டு அந்தக் கள்ளர்களை வீழ்த்தி வெற்றி கண்டது. இதைக் கல்வெட்டாக ஆக்கி யிருக்கின்றார்கள்.

இன்றைக்குச் சிலை வைத்து, சிலைக்குக் கீழே யார் தலைவர், யார் திறப்பாளர் என்று எழுதினால் கூடக் கோபித்துக் கொள்ளுகின்ற புண்ணியவான்கள் எல்லாம் நாட்டிலே இருக்கின்றார்கள். அன்றைக்கு ஒரு நாய் இரண்டு பேரை அடித்துக் கடித்துக் கொன்றது. அதற்கு, ஒரு கல்வெட்டு எடுத்தான். நன்றி மறவாதது நாய் மாத்திரமல்ல. அந்தக் காலத்துத் தமிழனும் நன்றி மறவாதவனாக இருந்தான் என்பதைக் காட்டிக் கொண்டான், அந்தக் கல்வெட்டின் மூலமாக.



எவ்வளவு அழகான கல்வெட்டு!.



## இதழின் உள்ளே ....


| | | |
|---|---|---|
| 1. | என்னைக் கவர்ந்த கல்வெட்டு - மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் | 2 |
| 2. | இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் அறிவித்த முக்கிய அறிவிப்புகள் | 4 |
| 3. | கோபுரம் காத்த கோமான் - அனுமந்தபுரம் ராமசாமி | 8 |
| 4. | கண்ணகியும் மாரியம்மனும் - முனைவர் டி.செல்வராசு | 10 |
| 5. | இன்னல்கள் தீர்க்கும் இருக்கங்குடி மாரியம்மன் | 13 |
| 6. | அருள்தரும் அய்யாவாடி பிரத்தியங்கராதேவி - பொன்கண்ணபுரம் சுப்பிரமணியன் | 15 |
| 7. | அம்பிகை அருள் வெள்ளம் - பருத்தியூர் டாக்டர் கே.சந்தானராமன் | 16 |
| 8. | குலசேகரப் பட்டினம் அறம் வளர்த்த நாயகி - பா.குபேந்திரபாபு | 17 |
| 9. | நாடிய வரம் நல்கும் நாகராஜர் ஆலயம் - திருமதி மீனாட்சி கோகுலவாசன் | 19 |
| 10. | திருமணவரம் அளிக்கும் திருமணஞ்சேரி | 20 |
| 11. | கேள்வி-பதில் - "அருளரசு" திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமி | 22 |
| 12. | திருமந்திர உபதேசம் - திருமந்திரச் செல்வர் டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப.(ஓய்வு) | 24 |
| 13. | வெற்றியைத் தரும் வீரபத்திரர் வழிபாடு - முனைவர் த.அமிர்தலிங்கம் | 27 |
| 14. | உயிர் ஒளி - முனைவர் அ.அறிவொளி | 28 |
| 15. | தமிழ்நாட்டுச் சித்தர் - போகர் - முனைவர் இரா.செல்வக்கணபதி | 30 |
| 16. | குணசீலம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி | 32 |
| 17. | மண்ணுலகை வாழ்விக்க வந்த விண்ணுலக விளக்கு - தெ.முருகசாமி | 35 |
| 18. | விநாயகர் 108 போற்றி | 37 |
| 19. | அரங்கர் கலைக்கூடம் | 39 |

# சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா



சென்னை நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் மற்றும் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் 15.8.06 அன்று நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

''கோவிசைய மயீந்திர பருமற்கு''

அவர்கள் மகேந்திரபர்மன் என்று எழுதினார்களோ அல்லது மகேந்திரவர்மன் என்று எழுதினார்களோ, கல்வெட்டிலே இருப்பது.

''கோவிசைய மயீந்திர பருமற்கு முப்பத்து நான்காவது; வாணகோ அரைசரு மருமக்கள் பொற்றொக்கையார் இளமகன் கருந்தேவக் கத்தி''

காவல் காத்த அந்த வீரனுடைய பெயர் கருந்தேவக்கத்தி என்பதாகும்.

மகேந்திர வர்மனுடைய காலத்தில், 34-வது ஆண்டில் வாணகோ என்கின்ற அரசருடைய மருமக்களான பொற்றொக்கையாருடைய இளமகன் கருந்தேவக்கத்தி.

''தன் எருமைப் புறத்தே வாடிப்பட்டான்கல்''

எருமைகளைக் காப்பாற்றுகின்ற அந்தக் காவல் கூடத்தில் அவன் கொல்லப்பட்டான். அந்த இடத்தில் கோவிவன் என்னும் நாய்; நாயினுடைய பெயரே கோவிவன்!.

இப்பொழுது ஏதேதோ பெயர்கள் வைக்கிறோமே ஆங்கிலப் பெயர்களை நாடி- அப்பொழுது!.

''கோவிவன் என்னும் நாய் இரு கள்ளரைக் கடித்துக் காத்திருந்தவாறு'' - இப்படி அந்தக் கல்வெட்டிலே எழுதப்பட்டுள்ள ஒரு நாயினுடைய வீரச் செயல்; அதற்கு முந்தித் தான் எடுத்துக் கொண்ட பொறுப்பைக் கடமை உணர்வோடு செய்து, அங்கே கொல்லப்பட்ட ஒரு வீரனுடைய வாழ்க்கையை இந்த கல்வெட்டிலே அன்றைக்குக் காண்பித்திருக்கின்றார்கள் என்றால் இது நம்முடைய பழங்கால மன்னர்களால், பழங்காலத் தமிழர்களால், தமிழ்நாட்டு மக்களால் எவ்வளவு போற்றப் பட்டிருக்கிறது என்பதனை நாம் அறிந்து கொள்ள முடியும்.

(ஆகஸ்ட் 1974 ''திருக்கோயில்'' இதழில் இருந்து இக்கட்டுரை எடுத்து வெளியிட்டுள்ளோம் என்பதனை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.)

## என்னைக் கவர்ந்த கோயில் சிற்பங்கள்

தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களில் உள்ள சிற்பங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. குறிப்பாக மதுரைக்கு அருகிலே உள்ள அழகர் கோவில் சிற்பங்களைப் பற்றி நான் பல நண்பர்களிடம் பேசி மகிழ்ந்திருக்கின்றேன். நெல்லை மாவட்டம் கிருஷ்ணாபுரம் என்கிற ஊரிலே உள்ள கோயில் சிற்பங்களை நான் பலமுறை சென்று பார்த்துப் பரவசப் பட்டிருக்கின்றேன். அந்த அளவிற்கு தமிழகத்தின் திருக்கோயில்களிலே உள்ள சிற்பக்கலை என்னைக் கவர்ந்திருக்கின்றது.



- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்

# இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் திருமிகு கே.ஆர். பெரிய கருப்பன் அவர்கள் அறிவித்த முக்கிய அறிவிப்புகள்



1. பழனிமலை அடிவாரத்திலிருந்து மலைமேல் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் செல்ல தற்போது உள்ள ஒரு கம்பி வட ஊர்தி திருவிழாக் காலங்களில் போதுமானதாக இல்லாததால் பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருக்க நேர்கிறது. இதனைத் தவிர்க்க மேலும் ஒரு கம்பிவட ஊர்தி ரூ. 6 கோடி செலவில் அமைக்கப்படும்.
2. இத்திருக்கோயிலில் தற்போது இயங்கி வரும் கம்பி வட ஊர்தியில் பயணியர் அமர்ந்து செல்லும் பெட்டிகள் பழுதடைந்து விட்டமையால் அவை சுமார் ரூ.3.5 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.
3. பழனி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக பழனி நகரில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான தங்கும் விடுதிகளும், மருத்துவமனையும் ரூ. 1 கோடி செலவில் சீரமைக்கப்படும்.
4. பழனி மலைக் கோயிலுக்கு யானைப் பாதை வழியாகச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக நிழல் மண்டபத் தொடரும், கழிப்பறை வசதியும் அமைக்கப்படும்.
5. பழனி என்றாலே பஞ்சாமிர்தம் தான் நினைவுக்கு வரும். இந்த பஞ்சாமிர்தத்தை மிக்க சுகாதாரமான முறையில் தயார் செய்து, நவீன தானியங்கி இயந்திரம் மூலம் டப்பாக்களில் அடைத்துப் பக்தர்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
6. பக்தர்களுக்குச் சுத்தமான விபூதியும், குங்குமமும் இத்திருக்கோயிலிலேயே தரமாகத் தயாரித்து அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## திருக்குவளையும் திருவாரூரும்

நான் பிறந்த ஊர் திருக்குவளையே பெரிய பாடல் பெற்ற தலம், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தலம் திருக்குவளை. அந்தத் திருக்குவளையிலே உள்ள கடவுளுக்குச் சரியான மிகத் தூய்மையான தமிழ்ப் பெயர் - அந்த அம்மனை ''வண்டமரும் பூங்குழலாள்'' என்று அழகிய தமிழிலேதான் அழைப்பார்கள். எவ்வளவு அழகான தமிழ் நயத்தோடு வைக்கப்பட்ட பெயர் அது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்தக் கோவிலைச் சார்ந்துள்ள வீதியில் ஒரு குடும்பத்தில் பிறர்தவன் நான். அதற்குப்பிறகு நான் படிக்கவந்த இடம் திருவாரூர் - அதுவும் பாடல் பெற்ற ஆலயங்களில் ஒன்று.

பிறந்த ஊரிலே திருக்குவளையிலே உள்ள ஆலயத்திற்கும் நான் சென்றிருக்கிறேன். பிறகு நான் வளர்ந்த ஊரான திருவாரூரிலே உள்ள ஆலயத்திற்கும் நான் சென்றிருக்கிறேன்.

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்



## சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழா

சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் 15.8.06 அன்று நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.ஆர்.பெரிய கருப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

7. பக்தர்களின் வசதிக்காக இடும்பன் மலையில் ரூ.12 லட்சம் செலவில் நான்கு நிழல் மண்டபங்கள் அமைக்கப்படும்.

8. பழனி திருக்கோயில் நிர்வாகத்தால் நடத்தப்படும் ஆடவர் கல்லூரி, மகளிர் கல்லூரி, பல்தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பள்ளிகள் ஆகியவற்றிற்குத் தேவையான கலைக்கூடம், நூலகங்கள், ஆய்வகங்கள், ஆய்வக உபகரணங்கள், வகுப்பறைகள், கணினிகள் மற்றும தேவையான அடிப்படை வசதிகள் சுமார் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் அமைத்துத் தரப்படும்.

9. மலை மீது அமைந்துள்ள சோளிங்கர் அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்கள் சென்று வர மலை அடிவாரத்திலிருந்து சுமார் ரூ. 5 கோடி செலவில் கம்பிவட ஊர்தி அமைக்கப்படும்.

10. பெரம்பலூர் அருகே உள்ள திருவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும்பக்தர்களின் வசதிக்காக ரூ. 26 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஓய்வு இல்லமும், ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திருமண மண்டபமும் கட்டப்படும்.

11. நாமக்கல் நகரில் அமைந்துள்ள அருள்மிகு நரசிம்மசுவாமி மற்றும் ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக சுமார் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தங்கும்விடுதி கட்டப்படும்.

12. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும்பக்தர்களின் வசதிக்காக கட்டப்பட்டுள்ள அறைகள், குடில்கள் முதலியன மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளன. இவற்றை ரூ. 1.48 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் முழுமையாகப் பழுது பார்த்து புதுப்பிக்கப்படும்.

13. இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள கிரிப்பிரகார தளம் பக்தர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு ரூ. 46 இல்ட்சம் மதிப்பீட்டில் கருங்கல் தளமாக மாற்றி அமைக்கப்படும்.



14. திருவில்லிப்புத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருப்பாற்கடல் பகுதியில் உள்ள சுமார் 9 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் பக்தர்களின் வசதிக்காகவும், அப்பகுதி வாழ்மக்களின் நன்மைக்காகவும் பத்தாயிரம் சதுரஅடி பரப்பளவுள்ள ஒரு திருமண மண்டபம் சுமார் ரூ. 70 இலட்சம் மதிப்பீட்டில்கட்டப்படும்.

## இராமானுஜர் செய்த புரட்சி



இவர் இயற்றிய
சமயப் புரட்சி - ஓர்
இமயப் புரட்சி !
அரிசனம்
அயல்சனம்இரண்டும்
சரிசனம் என
சாதித்தது இவர் தராசு.

- கவிஞர் வாலி அவர்களின்
''இராமானுஜ காவியம்''

15. திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் பயன்பாட்டுக்காக, அங்கு தங்கும் விடுதிகள், குடில்கள், உணவகம் போன்ற கூடுதல் வசதிகள் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

16. திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபம்ஆண்டுக்கு இரண்டு முறை மட்டுமே அருள்மிகு நடராஜர் எழுந்தருளுவதற்காகப் பயன்படுத்தப் படுகிறது. இதர நாட்களில் பயன்பாடற்ற நிலையில் உள்ள இவ்வாயிரங்கால் மண்டபத்தை நல்ல முறையில் பயன்படுத்தும் வகையில் அப்பகுதியில் உள்ள திருக்கோயில்களின் பயன்பாடற்ற அருங்கலைப் பொருட்களைக் கொண்ட அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்.

17. திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் நிர்வாகத்தில் உள்ள இராமானுஜர் திருமடத்திற்கென திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தின் மூலம் திருமலையில் 5000 சதுரஅடியில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

## சிலம்பு காட்டும் சமத்துவம்

சேரன் செங்குட்டுவன் சிறந்த சிவபக்தன். அம்மன்னன் ''காவாநாவின் கனகவிசயர்'' ஆணவத்தை அழிக்கவும், கற்புத் தெய்வமாகிய கண்ணகிக்குச் சிலை எடுக்கவும் எண்ணம் கொண்டு போர்க்கோலம் பூண்டான்.

அப்போது திருமால்அடியார்சிலர் திருமாலின் பிரசாதத்தைக் கொண்டுவந்து சேரன் செங்குட்டுவனிடம் வழங்கச் சிவபெருமானுக்கு அல்லாமல் வேறெவர்க்கும் தலை வணங்காத சேரன் செங்குட்டுவன் திருமால் பிரசாதத்தை விருப்போடு வாங்கித் தன் அழகிய திருக்கரத்தில் உவகையோடு அணிந்து கொண்டுள்ளான்.

இதனை இளங்கோ அடிகள்

''தெண்ணீர் கரந்தசெஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கினன்''

(கால்கோள்காதை)

என்று பாடியுள்ள அருமை எண்ணி மகிழ்தற்குரியதாகும்.

அவ்விடத்தில் சுமார் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டி அதில் இராமாநுஜர் திருமடமும், தமிழகத் திருக்கோயில்களின் தகவல் அறிய தகவல் மையமும் அமைக்கப்படும்.

18. திருவரங்கத்தில் திருக்கோயில் பணியாளர்களுக்கென ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்புக் கட்டப்படும்.

19. திருவரங்கத்தில் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்கென சுமார் ரூ. 27 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தங்கும் விடுதி அமைக்கப்படும்.

20 சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குப் பெருந்திரளாக பக்தர்கள் வருவதைக் கருத்தில் கொண்டு சுமார் ரூ. 10 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். திருக்கோயில் பிரகாரத்தை விரிவாக்கி ஒரே மண்டபமாக அமைத்தல், பல்வேறு வசதிகள் அடங்கிய பேருந்து நிலையம் அமைத்தல், ஓய்வு இல்லம், தங்கும் குடில்கள் கட்டுதல், குடிநீர் வசதி, குளியல் மற்றும் கழிப்பறை வசதிகள் போன்றவை இந்தத் திட்டத்தில் அடங்கும்.

21 பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக ரூ. 1.1 கோடி மதிப்பீட்டில் வெளிப்பிரகார மண்டபம்அமைக்கப்படும்.

22. கோயம்புத்தூர் நகரில் உள்ள அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலில் ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் 7 நிலை இராஜகோபுரம் அமைக்கப்படும்.

23. கோயம்புத்தூர் நகரில் உள்ள ராம்நகர், அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலில் ரூ. 32 இலட்சம் மதிப்பீட்டில் 5 நிலை இராஜகோபுரம் அமைக்கப்படும்.

24. சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், அருள்மிகு திருத்தளிநாதசுவாமி திருக்கோயிலிலுள்ள தேர்கள் ரூ. 12.6 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்து சீரமைக்கப்படும்.

25. குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதர் திருக்கோயிலுள்ள தேர்கள் ரூ. 7 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்துச் சீரமைக்கப்படும்.

26. பிரான்மலை அருள்மிகு மங்கைபாகநாத சுவாமி திருக்கோயிலிலுள்ள தேர்கள் ரூ. 12.48 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்துச் சீரமைக்கப்படும்.

27. தாயமங்கலம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலின் நுழைவு வாயிலில் சுமார் ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் நிழல் மண்டபம் அமைக்கப்படும்.

28. திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவிக்க 1996-2001 ஆம் ஆண்டுகளில் தமிழில் போற்றி நூல்கள் இத்துறையால் அச்சிடப்பட்டு அர்ச்சகர்களின் பயன்பாட்டுக்காக இலவசமாக வழங்கப் பட்டன. அப்போற்றி நூல்களை மீண்டும் அச்சிட்டு அனைத்துத் திருக்கோயில்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர் களுக்கும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

29. தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரும் முக்கிய வழிபாட்டு மற்றும் சுற்றுலாத் தலங்களான பழனி மற்றும் கொடைக்கானல் நகரங்களிடையே பழனி திருக்கோயில் நிர்வாகத்தால் கம்பி வட ஊர்தி (Rope Car) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட ஆய்வு மேற்கொள்ளப்படும்.

30. தமிழகத்தில் மொத்தம் 22 நிர்வாக உதவி ஆணையர்கள் பணியிடங்கள் உள்ளன. ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்டமும் ஓர் உதவி ஆணையர் பொறுப்பில் வரும் வகையில் திருவாரூர், திண்டுக்கல், கரூர், நாமக்கல், திருவள்ளூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உதவி ஆணையர் பணியிடம்

ஏற்படுத்தப்படும்.

31. வேலூர் அருகே உள்ள விரிஞ்சிபுரம், அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சுமார் ரூ. 65.7 இலட்சம் மதிப்பீட்டில் 5 நிலை இராஜகோபுரம் நன்கொடையாளர்கள் மூலம் கட்டப்படும்.



32. அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டப்படும்.

33. இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் புதிதாகத் தெற்கு மற்றும் வடக்கு இராஜகோபுரங்களை நன்கொடையாளர் மூலம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, கல்காரம் வரை பணி நிறைவேறி, அதற்குமேல் கடந்த மூன்றாண்டுகளாகப் பணி நடைபெறாமல் உள்ளது. நின்று போன இராஜகோபுரத் திருப்பணியை விரைவில் துவக்கிட நடவடிக்கைஎடுக்கப்படும்.

34. பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை அருள்மிகு மாசானியம்மன் திருக்கோயில் பிரகார மண்டபம் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும்.

35. மேட்டுப்பாளையம் அருகே உள்ள தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ. 20.7 இலட்சம் மதிப்பீட்டில் பிரகார மண்டபம் அமைக்கப்படும்.

36. சென்னை, அரும்பாக்கம், அருள்மிகு சத்திய வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சுமார் ரூ. 22.5 இலட்சம் மதிப்பீட்டில் 3 நிலை இராஜ கோபுரம் நன்கொடையாளர்கள் மூலம் அமைக்கப்படும்.

37. திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 100 ஆண்டுகளுக்கு மேலாக அம்மன் தேர் இன்றிச் சப்பரத்தில் தேரோட்டம் நடைபெற்று வருகிறது. ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் அம்மன் திருத்தேர் புதியதாகச்செய்யப்படும்.

38. இந்த நிதியாண்டில், ஆதிதிராவிடர்கள் வாழும் 2000 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு அவை ஒவ்வொன்றிலும் ஒரு திருக்கோயிலைப் பழுது பார்க்கவோ அல்லது புதிதாக கட்டுவதற்கோ ரூ. 25,000/- நிதி உதவி அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

39. ஒரு கால பூசைகூட செய்ய இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களில் ஒரு கால பூசை நடைபெறுவதற்கு உதவும்வகையில் ''ஒரு காலப் பூசைதிட்டம்'' செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 10,447 திருக்கோயில்கள் பயன் அடைந்து வருகின்றன. இந்த நிதியாண்டில் மேலும் 500 திருக்கோயில்களில் ஒருகால பூசைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

40. திருக்கோயில்களின் சார்பில் ஐந்து கலைக் கல்லூரிகளும், ஒரு பல்தொழில்நுட்ப கல்லூரியும் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் கன்னியாகுமரியில் உள்ள தேவி குமரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், குற்றாலம் பராசக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், பூம்புகாரிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் நிதி வசதி இன்றி மிகவும் இடர்ப்பாட்டில் உள்ளன. சாதி, மத வேறுபாடின்றி மாணவ, மாணவியர் சேர்க்கப் பட்டு கல்வி கற்பிக்கப்படும் இக்கல்லூரிகளில் போதிய ஆசிரியர்களை நியமித்தல், தேவையான கட்டடங்கள், நூலகங்கள், ஆய்வுக்கூடங்கள் கட்டுதல் போன்றவற்றிற்கு அரசின் நிதி உதவியைப் பெறுவதற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

41. எதிர் வரும் 2007-ஆம் ஆண்டில் 500 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்தப்படும். குறிப்பாக,

1. மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.
2. அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்.
3. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்.
4. சங்கரன்கோயில் அருள்மிகு சங்கர நாராயணசுவாமி திருக்கோயில்.
5. திருவலஞ்சுழி அருள்மிகு சுவேத விநாயகர் மற்றும் கபர்தீஸ்வரர் திருக்கோயில்.
6. வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர்திருக்கோயில்.
7. சென்னை இராயப்பேட்டை அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.

ஆகிய முக்கியத் திருக்கோயில்களும் இதில் இடம் பெறுகின்றன.

காலச்சுவடுகள்

# கோபுரம் காத்த கோமான்

கவிஞர் அனுமந்தபுரம் ராமசாமி



சுதந்திர வேட்கை மிகுதியால் சுற்றம் துறந்து, சுகம் மறந்து, உயிரையே தியாகம் செய்து, தமிழ் மண்ணைக் காத்தவர்கள் தமிழர்கள்! சீரும் சிறப்புமிகு சிங்கத் தமிழர்களில், சிவகெங்கைச் சீமையை சிறப்போடு 1780 முதல் 1801 வரை அரசாண்ட அண்ணன் தம்பிகள் தான் பெரிய மருது! சின்ன மருது!

இவர்களை மருதுபாண்டியர்கள் எனப் பரிவோடு அழைத்தனர். சிறப்போடு கோலோச்சி சிறந்த நல்லாட்சி நடத்தியவர்கள் மருதிருவர்கள். சிவகெங்கைச் சீமையின் முதல் தலைமுறையினர் இவர்கள்.

முக்குளம் என்னும் மூதூரில் மொக்கம் பழனியப்பன் சேர்வைக்கும், ஆனந்தாயி அம்மைக்கும் அருமை மைந்தர்களாய் அவதரித்தாகள்! ஆண்டு 1748ல்! ஆதவன் அஸ்தமிக்கா ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சிம்மக்குரல் கொடுத்த சிறப்பினைப் பெற்றவர்கள் பெரிய மருது சின்ன மருது ஆவர்!

வரிவசூல் காரணமாக ஆண்டு 1772இல் இராமநாதபுரம் மீது ஆங்கிலக் கர்னல் ஸ்மித் படையெடுத்தான். அப்போது சிவகெங்கைச் சீமை மன்னர் முத்துவடுகரும் வேலுநாச்சியும் வீரமுடன் எதிர்த்தனர். அப்போரில் மருதிருவரும் படைத்தலைவர்களாய் இருந்தனர். அப்போரில் முத்துவடுகர் கொல்லப்பட்டார்.

கணவனை இழந்த வேலுநாச்சியார் வீரமுடன் ஆங்கிலப் படையை எதிர்க்க ஆர்வம் உடையவராய் திப்புவிடம் படை உதவி கேட்டார். திப்பு ஏற்றுக் கொண்டார்.

பெரிய மருதுவை, வேலுநாச்சி நாட்டின் நலன் கருதி தனது கணவராக மனமுவந்து ஏற்றுக்கொண்டார்! அதனால் சிவகெங்கைச் சீமையின் ஆட்சி மருது பாண்டியர் கைக்கு மாறியது. அவர்களுடைய ஆட்சியில் குளங்கள் வெட்டப்பட்டன. அன்ன சத்திரம் அனேகம் ஆக்கப்பட்டன! மதுரை மீனாட்சி கோவில் புதுப்பிக்கப்பட்டது! காளையார் கோவில் கோபுரமும் கட்டப்பட்டது.

பாஞ்சாலங்குறிச்சியை ஆங்கில தளபதி பானர்மன் படைகொண்டு தாக்கிக் கோட்டையை தரைமட்டம் ஆக்கினான்! கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்! தம்பி ஊமைத்துரை தப்பி மருதுபாண்டியரிடம் சரண் அடைந்தார்.



## மருதுபாண்டியர் புகழ்

தெய்வங்களுக்கெல்லாம் கோயில் கட்டியும், கட்டிய கோயில்களைப் புதுப்பித்தும் வந்த மருதுபாண்டியர்களுக்கு மக்கள் தங்கள் மனத்தையே கோயிலாகக் கட்டிக் கொடுத்தனர். ஆம்! மக்களின் உள்ளமே மருது பாண்டியர்க்கான கோயில்.

அவர்கள் நாட்டு ஆண்களும், பெண்களும் மகிழ்ச்சியோடு பாடும் பாடல்களே மருது பாண்டியர்களின் புகழ்பரப்பும் காவியம்.

''சாந்னப்பொட்டு தளதளங்க
சந்தப்பொட்டு கமகமங்க
மருதைக் கோபுரம் தெரியக் கட்டின
மருது வாரதைப் பாருங்கடி!''

பேராசிரியர்
முனைவர் ந.சஞ்சீவி அவர்கள்
''மானங்காத்த மருது பாண்டியர்'' நூலில்

ஆங்கில தளபதி பானர்மன் ஊமைத்துரையைத் தங்களிடம் ஒப்படைக்கக் கோரினான். அதற்கு மருதிருவர் மறுத்து விட்டனர். அதனால் ஆங்கிலப்படை 'மருது பாண்டியரின் சிவகெங்கைச் சீமையை தாக்கிக் கைப்பற்றியது! மருதிருவரும் தப்பிவிட்டார்கள். இருவரையும் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு அதிக வெகுமதி அளிப்பதாக அறிவித்தது ஆங்கில ஆடசி!

மருதுபாண்டியரின் காவலர்களில் ஒருவன் கறுத்தான் என்பவன், சின்ன மருதுவைப் பிடித்து ஆங்கிலேயரிடம் கொடுத்துவிட்டான். பெரிய மருதுவைப் பிடிக்க தந்திரம் செய்தனர் ஆங்கிலேயர்!

''பெரிய மருது இன்னும் பத்து நாட்களுக்குள், தானே வந்து தங்களிடம் சரண் அடைய வேண்டும்! இல்லை என்றால் பெரியமருது கட்டிய காளையார் கோவில் கோபுரம் இடித்துத் தரைமட்டம் ஆக்கப்படும்'' என்று பறைசாற்றினர்.

தெய்வபக்தி மிக்க பெரியமருது காளையார் கோவில் இடிக்கப்படும் என்ற அறிவிப்பைக் கேட்டுப் பயந்து தன்னுயிரை ஈந்து காளையார் கோவிலைக் காக்க எண்ணி ஆங்கிலேயரிடம் தானே வந்து அடைக்கலம் புகுந்தார்! இருவரையும் ஒரு இடத்தில் தூக்கில் இட்டபின்பு இருவர் தலைகளையம் காளையார் கோவில் முன் சமாதிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் பெரியமருது! முதலில் சின்னமருதும், மூன்றாம் நாள் பெரிய மருதும் திருப்பத்தூரில் தூக்கில் இடப்பட்டு அவர்தம் தலைகளைக் காளையார் கோயில் முன் சமாதி வைக்கப்பட்டது.

அன்னைத் திருநாட்டில் அன்னிய ஆட்சியை எதிர்த்து இன்னுயிர் ஈந்த இரு சகோதரர்களும் வரலாற்றில் அழியாது சிறப்பிடம் பெற்றனர்,

காளையார் கோவில் கோபுரம் இடிக்கப்படக் கூடாது என்பது பெரிய மருதுவின் பேரவா! ஆங்கிலேயர்களுக்கு வேண்டியது பெரியமருதுவின் உயிர். எனவே தனது உயிரைக் கொடுத்துக் காளையார் கோவில் கோபுரத்தைக் காத்தார் பெரிய மருது! அந்த பெருமை பெரிய மருதுவைச் சார்ந்தது.

## மணிமேகலை வாழ்ந்த தெரு



மாதவியின் மகளான மணிமேகலை பிறந்த ஊர் பூம்புகார். அவர் தம் இறுதிக் காலத்தைக் கழித்த ஊர் காஞ்சிபுரம். காஞ்சிபுரத்தில் அவர் வாழ்ந்திருந்த தெரு ''அறப்பெருஞ்செல்வித்தெரு'' என்று இன்றும் வழங்கி வருகின்றது.

- ஆதாரம்: இராமானந்த சுவாமிகள் எழுதியுள்ள ''திருத்தலங்கள்'' நூல்

வெளியீடு: வள்ளுவர் பண்ணை, சி.ஐ.டி.நகர், சென்னை 600035


# கண்ணகியும் மாரியம்மனும்

டாக்டர் டி. செல்வராஜ்

''பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்''

(சிலம்பு, காட்சிக்காதை 114)

''பத்தினிக் கடவுளான கண்ணகியை அனைவரும் வழிபடவேண்டும்'' என்பது சேரன் செங்குட்டுவனின் கூற்று. இளங்கோவடிகளின் ஆணை.



கர்ணிகா = தாமரைக் பொகுட்டில் வீற்றிருக்கின்ற இலக்குமி; செங்கமலவல்லி. கர்ணிகா என்ற பெயர் கண்ணகி என்று திரிந்தது. பத்தினிக்கடவுள், வீரபத்தினி, திருமாபத்தினி, திருமாமணி முதலிய பல பெயர்கள் கண்ணகியைக் குறிக்கின்றன.

கண்ணகி மனித குலத்தில் பிறந்தாள்; தெய்வத் தன்மையுடையவளாக உயர்ந்தாள். அவளைப் பத்தினிக் கடவுளாக அனைவரும் வழிபடலாயினர்.

**கண்ணகி - பத்தினிக் கடவுள்**

காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த மாநாய்க்கனின் மகள் கண்ணகி. இவள் மாசாத்துவானின் மகன் கோவலனை மணந்தாள். சிலகாலம் கடந்தது.

கோவலன் மாதவியை இணைந்தான். கணவனைப் பிரிந்த கண்ணகி மிகவும் துன்பமுற்றாள்.

ஒருநாள் மாதவியைப் பிரிந்த கோவலன், கண்ணகியிடம் மீண்டும் வந்தான். கண்ணகியின் காற்சிலம்பை விற்றுப் புதுவாழ்வு தொடங்க இருவரும் மதுரை மாநகருக்குச் சென்றனர். அங்கே பொற்கொல்லனின் வஞ்சனையால் கோவலன் கொலைக்களப்பட்டான்,

கண்ணகி பாண்டியனின் முன் வழக்குரைத்தாள், கோவலன் கள்வன் அல்லன் என்று நிலை நாட்டினாள். அறம் சிதைந்ததால்ஃ செங்கோல் வளைந்ததால். பாண்டியன் உயிர் நீத்தான்ஃ கோப்பெருந்தேவியும் மடிந்தாள். அப்போதும் கண்ணகியின் ஆவேசவெறியும் சினமும் தணியவில்லை. மதுரை மாநகரை எரித்தாள். அங்கிருந்து புறப்பட்டாள்.

கண்ணகி சேர நாட்டிற்குச் சென்றாள். ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நின்றாள், கோவலன் புட்பக விமானத்தில் வானோர்களுடன் வந்து அவளை அழைத்துச் சென்றான்,

மேற்கண்ட வரலாற்றைச் சேரன் செங்குட்டுவன் கேட்டறிந்து வியந்தான். தனது நாடு புகுந்து தெய்வ நிலைக்கு உயர்ந்த பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும் என்று முடிவெடுத்தான். இமைய மலையிலிருந்து கல்லைக் கொணர்ந்து. கண்ணகியின் திருமேனியை வடித்து, வஞ்சிமாநகரில் ஒரு கோயிலைக் கட்டி, அத்திருமேனியைப் பிரதிட்டை செய்தான், வழிபட்டான்,

சேர நாட்டில், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு முதன் முதல் கோயிலை அமைத்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்போது முதல் பத்தினிக்கடவுள் வழிபாடு தமிழகமெங்கும் பரவியது.

**சேர நாட்டில் பத்தினிக் கடவுள் வழிபாடு:**

கேரளத்தில், பகவதி அம்மனின் அவதாரமாகக் கண்ணகியை வழிபடுகின்றனர். பகவதி அம்மனின் கோயில்களுடன் கண்ணகியின் வரலாற்றைத் தொடர்பு படுத்துகின்றனர். சில எடுத்துக்காட்டுகள் வருமாறுஃ

**1,செங்கன்னூர் பகவதியம்மன்**

மாவேலிக்கரையிலிருந்து வடகிழக்கே 24கி,மீ. தூரத்திலும், கோட்டயத்திலிருந்து தெற்கே



# கண்ணகி! உன்னை எங்கள் கண்ணெதிரே நிலைநாட்டி விட்டோம்

காவிய நாயகி என்றும், நம்முடைய கலாச்சாரப் பொக்கிஷம் என்றும், கருவூலம் என்றும் போற்றப்பட்ட ஒரு பெண், வீரப்பெண்மணி, நீதிகேட்ட பெண்மணி, நீதிகேட்டு நெடுஞ்செழியப் பாண்டியனுடைய தலையையே கவிழ வைத்த பெண்மணி; தன் செங்கோல் வளைந்தது என்பதற்காக தன்னுடைய உயிரையே கொடுத்து அந்தச் செங்கோலை நிமிர்த்துவதற்காகப் பாடுபட்டானே அந்த பாண்டிய மன்னனைக் கொலு மண்டபத்திலே, ''கொற்றவனே, குற்றம் புரிந்தவன் நீ'' என்று சுட்டிக்காட்டிய வீரம் செறிந்த தீரப் பெண்மணி நம் கண்ணகி.

– மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்.

33 கி.மீ. தூரத்திலும் செங்குன்றூர் உள்ளது செங்குன்றூர் என்ற பெயர் செங்கன்றூர் என மாறி, செங்கன்னூர் என மருவியது.

கண்ணகி மதுரையை எரித்த பின்னர்ச் செங்கன்னூர் வந்தாள்; தவம் புரிந்தாள்; புட்பக விமானத்தில் ஏறி விண்ணுலகடைந்தாள்.

சேரன் செங்குட்டுவன் செங்கன்னூரில் ஒரு கோயிலைக் கட்டி, செங்கமல வல்லி என்ற பெயருடன் பத்தினிக் கடவுளின் சிலையை நிலைநாட்டினான். இவளே செங்கன்னூர் பகவதி அம்மன் என்று பலர் கருதுகின்றனர்.

**2, ஆற்றுக்கால் பகவதி அம்மன்**

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த மணக்காடு என்ற பகுதியில் ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயில் இருக்கிறது. புராண மரபின்படி இக்கோயிலும் கண்ணகியின் வரலாற்றுடன் தொடர்புடையது.

மதுரையை எரித்து ஆவேசத்துடன் வந்த கண்ணகி இக்கோயிலின் மண்டபத்தில் சற்று நேரம் தங்கி ஓய்வெடுத்துச் சினம் தணிந்தாளாம்.

கோயிலில் கண்ணகியின் வரலாற்றை விளக்கும் சுதைச் சிற்பங்கள் பல காணப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட நாளில் பெண்கள் பெருந்திரளாகத் திரண்டு, பொங்கலைப் பொங்கிப் படைத்து அம்மனை வழிபடுகின்றனர்.

**3, சித்தூர் பகவதி**

பாலக்காட்டுச் சித்தூரிலும் கண்ணகியைப் பகவதி அம்மனாகக் கருதி வழிபடுகின்றனர். இக்கோயிலுக்கு ஆண்கள் போவதில்லை.

**கண்ணகியும் மாரியம்மனும்**

(1) மாரியம்மன் வழிபாடு சக்தி வழிபாட்டின் ஓர் அங்கம் என்பது ஒரு கருத்து. (2)அவள் பராசக்தியின் ஓர் அம்சம் என்பது மற்றொரு கருத்து (3) கிராமப்புற மக்கள், அம்மை நோய் வராமலும், வந்தால் பரவாமலும் தடுக்க, அச்சத்தால் வழிபட்ட அவள் ஒரு சிறு தெய்வம் என்பது இன்னுமொரு கருத்து (4)கண்ணகியே மாரியம்மன் என்ற கருத்தும் ஏற்புடையதே. இக்கருத்தை நிலை நாட்டுவதற்குரிய சான்றுகள் சிலவற்றைக் காணலாம்.

**1, மாரியம்மன்**

பாண்டிய அரசன் அறநிலை பிறழ்ந்ததால் பன்னிரண்டு ஆண்டுகள் மழை பொழியவில்லை. பஞ்சம் நிலைத்தது. காரணம் உணர்ந்த மக்கள் கண்ணகியின் ஆவேசவெறி அடங்கச் சாந்தி வழிபாடுகளைச் செய்தனர். அவள் பேரருள் சுரந்ததால் மழை பொழிந்தது. இவ்வாறு மழையருளிய அம்மனே 'மாரியம்மன்' என்ற திருப் பெயரைப் பெற்றாள். அப்பெயர் நிலைத்து இப்போதும் வழங்கப்படுகிறது,

**2, ஆடிமாதம்**

மாரியம்மனை மிகச் சிறப்பாக வழிபடத் தகுந்த மாதம் ஆடி மாதமே.

ஆடி மாதத்தில் மதுரை எரிந்தது. கண்ணகி தெய்வ நிலைக்கு உயர்ந்தாள். எனவே இவளை ஆடிமாதத்தில் வழிபடுவதே பொருத்தம்.

**3, தோற்றப் பொலிவு**

மாரியம்மனின் தோற்றம் மிக உக்கிரமானது. பக்தியோடு வழிபடாதவரைப் பயமுறுத்துவாள்; ஆவேசமான நோக்குடன் தலைமட்டுமே கருவறையில் இருக்கத் தரிசிக்கலாம். தலை தனித்திருக்க இந்த உலகமே அவளுக்கு உடம்பு. இத்தகைய தோற்றப் பொலிவு ஆவேசமான கண்ணகியை நினைவுறுத்துகிறது. ஆவேசம் அடங்கிய சாந்தமான முழுத்திரு மேனியும் இவளுக்கு உண்டு.

**4, நிவேதனம்**

கூழும், முருங்கைக் கீரையும் மாரியம்மனுக்குப் பிடித்தமான தலைமையான நிவேதனப் பொருள்களாம்.

பாண்டிய நாட்டைப் பஞ்சம் தாக்கிய போது, மக்கள் கூழ், முருங்கைக் கீரை முதலிய எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களை உண்டனர். அவர்கள் வழிபட்ட தெய்வத்திற்கும் அவற்றையே படைத்தனர். இப்படையல் இப்போதும் தொடர்கிறது.

5. அம்மை நோய்

வெப்பம் நிறைந்த காலத்தில் பரவுவது வெப்பு நோய். இந்த வைசூரி என்ற அம்மை நோயை அருளுபவளும்,, அகற்றுபவளும் மாரியம்மனே. இவளது அருளைத் தவிர உலகில் வேறு மருந்தில்லை.

பஞ்சகாலத்தில் பரவிய அம்மை நோயைத் தனது அருளால் அழித்தவள் கண்ணகியம்மன்ஃ மாரியம்மன்.

6. வேம்பு

வெப்பு நோயைத் தணிக்கும் ஆற்றல் உடையது வேம்பு. இது மாரியம்மன் கோயிலின் தலமரம்ஃ மூலிகை மரம்.

கண்ணகியின் பூத உடம்புக்குத் தந்தை மாநாய்க்கன்ஃ புகழுடம்புக்குத் தந்தை பாண்டியன். கண்ணகி தெய்வ நிலை எய்துவதற்கு முக்கியக் காரணமாக விளங்குபவன் இவனே. வேம்பு இவனது அடையாள மரம்.

7. பத்தினிப் பெண்டிர் வழிபாடு

பழந்தமிழர் பத்தினிப் பெண்டிரைத் தெய்வங்களாகப் போற்றி வழிபட்டனர். இத்தகைய பத்தினிப் பெண்டிர் எழுவரது வரலாறு சிலப்பதிகார வஞ்சினமாலையின் தொடக்கத்தில் (அடிகள் 1- 35) உள்ளன.

மாரியம்மன் கோயில்களில் அண்ணன்மார் சன்னிதி என்ற பெயருடன் ஒரு தனிச் சன்னிதி இருக்கக் காணலாம். அண்ணன் = நெருங்கிய உறவுடையவன்ஃ கணவன், இச்சொல் இதே பொருளுடன் இப்போதும் வழக்காற்றில் இருக்கிறது. பத்தினிப் பெண்டிர் எழுவரது 'கணவன்மார்களை' 'அண்ணன்மார்கள்' என்று வழிபடுகின்றனர்.

8. கோவலன் கதை

மாரியம்மன் கோயில்களில் திருவிழா நடைபெறுகின்றபோது, இரவு நேரங்களில், கோவலன் கதை நடிக்கப்படுகிறது. படிக்கப்படுகிறது. கோவிலன் கதை என்ற நாடோடி இலக்கியமும் ஒன்று உண்டு. இக்கதை இசைத்தட்டுகளிலும் பதிவாகிப் புகழ் மிகப் பெற்றது. மாரியம்மன் கோயில்களைத் தவிர வேறு கோயில்களில் கோவலன் கதையை நடிப்பதோ படிப்பதோ இல்லை.

## ஆயிரம் கண்ணுடையாள்



மாரியம்மன் ஆயிரம் கண்களைக் கொண்டவள். அவளுக்குரிய பெயர்களும் ஓராயிரமாம். 1. கருமாரி 2. முத்துமாரி. 3.செல்லியம்மன் 4.எல்லையம்மன். 5.பவானி யம்மன். 6,பொன்னியம்மன் 7.துலுக்கானத் தம்மன் (துளிர்கானத்து அம்மன்) 8.முண்டகக் கண்ணியம்மன். 9.வெங்காளம்மன். 10.அங்காளம்மன். 11. சீதளாதேவி. 12. ரேணுகா தேவி முதலியன.

மாரியம்மன் பவனியுலா வருகின்ற போது, உடுக்கை, உருமி முதலிய பல இசைக்கருவிகள் முழங்கும். அந்த இசைக்குத் தகுந்தபடி, கால்களில் சலங்கை அணிந்து, கைகளில் சிலம்புகள் ஏந்திய இருவர் சுழன்று சுழன்று நடம்புரிகின்றனர். சிலம்புடன் தொடர்புடைய ஒரே தெய்வம் கண்ணகி. இவள் ஒற்றைச் சிலம்பால் தெய்வமானவள்.

ஆகவே, கண்ணகி மாரியம்மனே என்று கருதலாம்.

திருச்சி மாவட்டம், திருவாச்சூரில் மதுர காளியம்மன் கோயில் உள்ளது. இதைக் கண்ணகிக் கோயில் என்று கூறுகின்றனர். இங்கே திங்கள் வெள்ளிக் கிழமைகளில் மட்டும் வழிபாடுகள் நடைபெறுகின்றன. இதனால் காளியம்மன் முதலிய பல பெயர்களால் இப்போதும் எப்போதும் கண்ணகியை வழிபடுகின்றனர் என்பது புலனாகிறது.

# இன்னல்கள் தீர்க்கும் இருக்கன்குடி மாரியம்மன்

இரு கங்கைகள் இடையே அன்னையாய் வீற்றிருந்து அருளாட்சி செய்பவர் இருக்கங்குடி மாரியம்மன்.

தென் தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற இத்திருத்தலம் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் இருக்கன்குடியாகும். சாத்தூருக்கு நேர்கிழக்கே விளாத்திகுளம் வழியே திருச்செந்தூர் செல்லும் நெடுஞ்சாலையில் 8 கி.மீ தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. இச்சிற்றூரின் தெற்கே பாயும் வைப்பாறு மற்றும் அர்ச்சுனா நதிகள் சூழ அன்னை குடிகொண்டுள்ள திருக்கோயில் அமைந்துள்ளது. இரு கங்கைகள் கூடுவதால் இருக்கங்குடி, இருக்கன்குடி என இவ்வூர் போற்றப்படுகிறது. இவ்வூரில் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக துஷ்டநிக்ரகம் செய்து அடியாருக்கு அருள்பாலித்து அன்னை விளங்குகிறாள்.

அன்னையின் திருக்கோயிலுக்கு வடக்கே தவழும் அர்ச்சுனா நதி, மேற்கே வத்திராயிருப்பு மலை எனப்படும் மகாலிங்க மலையிலே உற்பத்தியாகிறது. முன் காலத்திலே பஞ்சபாண்டவர்கள் காடுகளில் திரிந்து கொண்டு இம்மலையடிவாரத்திற்கு வந்த போது நீராடுவதற்கு இடம் இல்லாமையால் அர்ச்சுனன் கங்கையை வணங்கி வருணக் கணையால் பூமியைப் பிளக்க, அப்பிளவிலிருந்து தோன்றிப் பெருக்கெடுத்த ஆற்றில் பஞ்சபாண்டவர்கள் திரௌபதியுடன் நீராடி மகிழ்ந்தார்கள். அவ்வாறு தோன்றிய ஆறே அர்ச்சுனன் ஆறு என்று பெயர் பெறுவதாயிற்று. இவ்வரலாறு திருத்தண்கால் தல புராணத்தில் கூறப்படுகிறது.

திருக்கோயிலுக்கு தென்புறத்தில் தவழுவது வைப்பாறு.

பொதிய மலையின் அடிவாரத்தில் சிவசைலத்துக்கு வடப்புறம் சம்புகன் என்ற வேடன் தீயின் நடுவிலிருந்து கடுந்தவம் புரிந்தான். அதனால் அயோத்தியில் பிராமணப் பிள்ளை ஒருவன் இறந்து போனான். அப்போது அயோத்தி மன்னனாக இருந்த இராமன் சேனைகள் புடை சூழ வந்து சம்புகனைக் கொன்று இறந்த பிள்ளையை எழுப்பிவிட்டான். (இவ்வரலாறு இராமாயண உத்தரகாண்டத்தில் விளக்கப்பட்டுள்ளது). தவம் செய்த சம்புகனைக் கொன்ற பாவத்தால் பிடிக்கப்பெற்ற இராமன் பாவ விமோசனம் பெற்றான். அதன் பின் இராமன் தன் பரிவாரத்துடன் புளியவனமாக இருந்த புளியங்குடி வாசுதேவநல்லூர்களுக்கு இடையே உள்ளமேற்கு தொடர்ச்சி மலையினை வந்தடைந்தான். மாலைக்



கடன் முடிக்கும் பொருட்டுத் தண்ணீர் தேடியும் கிடைக்காததால் வருந்தினான். உடனிருந்த சாம்பவன் அவ்விடத்திலே, உலகிலுள்ள புண்ணிய தீர்த்தங்கள் கலந்த நீர்க்குடத்தை அகத்திய மாமுனிவர் புதைத்து வைத்திருக்கும் விபரத்தைக் கூறி, அம்பெய்து அக்குடத்தை உடைக்க ஆறு தோன்றியது. வைப்பி (புதையலி)லிருந்து ஆறுதோன்றியதால் அது வைப்பாறு என்று பெயர் பெற்றது. இவ்வாறு கரிவலம் வந்தநல்லூர், சாத்தூர், கொல்லப்பட்டி வழியாக பாய்ந்து இருக்கன்குடி அடைந்து அர்ச்சுனா நதியுடன் கலந்து முத்தலாபுரம், விளாத்திகுளம் வழியாகச் சென்று கடலில் கலக்கின்றது.

வைப்பாறும், அர்ச்சுனா ஆறும், அர்ச்சுனனாலும், திருஅவதாரமாகிய இராமபிரானாலும் தோற்றுவிக்கப்பட்டதால் அன்னையின் திருத்தலத்தின் புண்ணிய தீர்த்தங்களாகும்.

சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் இப்பக்கத்தில் சாணி பொறுக்குவதற்காக வந்த ஒரு பூசாரிப்பெண் தற்போது அம்மன் இருக்கும் இடத்தில் வைத்த கூடையை எடுக்க முடியாது

திண்டாடினாள். கூட்டம் கூடியது, அப்போது அப்பெண் அருள்கொண்டு ஆடினாள். அவள் ''நான் மாரியம்மை, எனது திருமேனி சிலை இங்கே மணலில் புதைந்து கிடைக்கின்றது, என்னை எடுத்து இந்த இடத்தில் நிலைநாட்டி வழிபடுங்கள் என்று வாக்கருளினாள். அங்ஙனமே பூசாரிகள் மணலைத் தோண்டி அம்மை திரு உருவத்தைக் கண்டெடுத்து சேவல் கூவாததாலும், கழச்சிச் செடி முளைக்காததாலும் அவ்விடத்திலேயே அன்னை கட்டளையிட்டபடி கோவிலிலே நிலை நிறுத்தி வழிபடுவாராயினர். அன்று முதல் நாடி வரும் பக்தர்களுக்கு வேண்டும் வரம் கொடுத்து அருளாட்சி செய்து வருகிறாள்.

ஆறுகள் புடை சூழ நடுவே உள்ள ஆற்றுத் திட்டில் அமைந்துள்ள இத்திருக்கோயிலின் கிழ்மேல் அளவு 178 அடி, தென்வடல் அளவு 149 அடி.

அழகிய விமானத்துடன் கூடிய கர்ப்பக் கிரகத்தில் அருட்கடலாகிய மாரியம்மன் எழுந்தருளியிருக்கிறாள்.

கர்ப்பக்கிரகத்தை ஒட்டி அர்த்த மண்டபமும், அதனையடுத்து மகாமண்டபமும் இருக்கின்றன. மகாமண்டபத்தின் முன் கொடி மர மண்டபம் அமைந்துள்ளது. அதில் நந்தீஸ்வரரும், கொடிமரமும், பலிபீடமும் வரிசையாக இருக்கின்றன. கொடி மர மண்டபத்தின் முன்னால் முன் மண்டபம் அமைந்துள்ளது.

தெற்குச் சுற்றின் நடுப்பகுதியில் அருள்தரும் விநாயகர் அரசமரத்தடியில் வீற்றிருக்க அருகே வாழவந்த அம்மனும் அதற்குச் சிறிது மேற்கில் இராக்காச்சி அம்மனும் இருக்கின்றனர். வடமேற்குப் பகுதியில் பேச்சியம்மனும் முப்பிடாரியம்மனும் இருக்கிறார்கள். அதற்கும் கிழக்கே வீரபத்திரரும், அவருக்குக் கிழக்கே வயிரவமூர்த்தியும், அவருக்கும் கிழககே காத்தவராய சுவாமியும் எழுந்தருளியிருக்கின்றனர். இவருக்கடுதத வடபுறம் திருவிழாவில் அன்னை வந்திறங்கும் திருமண்டபம் உள்ளது. வடகிழக்கு மூலையில் திருக்கோயில் வேலை அறை உள்ளது. கோவிலின் வெளிச்சுற்றுத் தென்கிழக்கு மூலையில் கருப்பசாமி கிழக்குப் பார்க்க கோவில் கொண்டுள்ளார்.

அன்னை மாரியின் அழகிய உற்சவத் திருமேனி ஊருக்குள் கர்ப்பகிரகம் அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்ட சிறிய உற்சவர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்றது.

அன்னை மாரிக்கு காலசந்தி, உச்சிக்காலம், மாலைப் பூசைஆகிய மூன்று காலப் பூசைகளும், அம்மூன்று காலங்களிலும் அன்னைக்குத் திருமுழுக்கு செய்து நடத்தப்படுகிறது. பூஜை நடைபெறும் காலங்களில் கோயிலின் உள்ளே பக்தர்கள் எழுப்பும் பக்தி முழக்கங்களும், நகரா மற்றும் மணி ஓசைநாதமும் பக்தி பரவசம் எழுப்ப அன்னை அருள் பாலிக்கிறாள்.

கோயிற்பூசைபின்வருமாறு நிகழ்த்தப்படுகின்றது.

நடை திறப்பு காலை 6.30 மணி

கால சந்தி காலை 8.00 மணி

உச்சிக்காலம் 1 மணி (பிற்பகல்)

சாயரட்சை6 மணி

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை, செவ்வாய்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயம் பக்தர்களின் வசதிக்காக காலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

இடுக்கண் களையும் இருக்கன்குடியாளுக்கு ஆடி கடைசி வெள்ளிக்கு முன்வெள்ளி கொடியேற்றம் செய்து கடைசி வெள்ளி அன்று உற்சவர் கோயிலில் இருந்து அன்னையின் உற்சவர்திருமேனி இடப வாகனத்தில் எழுந்தருளச் செய்து அர்ச்சுனா நதியில் உலாவித் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்யப்படுகிறாள். இப் பெருவிழாவிலே லட்சக்கணக்கான பக்தகோடிகள் அம்மனைத் தரிசித்து அருள் பெறுகின்றார்கள்.

தை கடைசி வெள்ளியிலும், பங்குனி கடைசி வெள்ளியிலும் பெருந்திராளான மக்கள் அம்மன் அருள் பெறக் கூடுவது கண்கொள்ளாக் காட்சியாகும். விழாக்காலங்களிலே அம்மன் அருள் பெற அர்ச்சுனா நதியிலும், வைப்பாறு நதியிலும் கூடும் மக்கள் வெள்ளம் வண்டிகளிலும், பிற வாகனங்களிலும் வந்து கூடி நேர்த்திக்கடன் செலுத்துவது மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சியாகும். அம்மனுக்கு அக்னிச் சட்டியும், ஆயிரங்கண்பானையும் எடுத்து அருளோடு வலம் வந்து வாயார வேண்டிச் சென்று வாழ்க்கையில் வளம் பெறுவது இத்திருக்கோயிலின் சிறப்பாகும்.

## தீராத நோய் தீர்ப்பாள் இருக்கன்குடி மாரியம்மன்

குறை நிவர்த்தி வேண்டி திருக்கோயிலில் தங்கி விரதம் காக்கும் பார்வையற்றோர்க்குப் பார்வையளித்தும், தீராத நோய்களைத் தீர்த்து வைத்தும், மக்கள்பேறு அளித்தும், மாங்கல்ய பாக்கியம் அளித்தும், திருமண பாக்கியம் வேண்டியோருக்கு வரம் அளித்தும் அருளாட்சி செய்யும் அம்மனைத் தரிசித்து அருள்பெற்று உய்வோமாக.



# அருள் வழங்கும் அய்யாவாடி மகா பிரத்தியங்கராதேவி

புலவர் பொன் சுப்பிரமணியன், திருவாரூர்



குடந்தையில் இருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் தென்கிழக்கே திருநாகேஸ்வரம் இராகுதலத்தில் இருந்து 2 கிலோ மீட்டர் தூரம் தெற்கில் அமைந்துள்ளது அய்யாவாடி என்றழைக்கப்படும் ஐவர்பாடி திருத்தலம் ஆகும்.

இங்குக் கோயிலில் எழுந்தருளியுள்ள பெண் தெய்வம் அதர்வண பத்திரகாளி என்று அழைக்கப்படும் பிரத்தியங்கரா தேவி ஆகும். ரிக், யசுர், சாமவேத வழிபாடுகளைப் போன்று அதர்வண வேத அடிப்படையில் மந்திர சாஸ்திர முறைப்படி ஹோ மங்கள் செய்வது பிடித்தமானது ஆகையால் இந்த அம்மனை அதர்வண பத்திரகாளி என்றழைக்கின்றனர்.

பிரத்தியங்கராதேவி சரபேஸ்வரரின் நெற்றிக் கண்ணில் தோன்றியவள். நரசிம்ம அவதாரம் எடுத்த விஷ்ணு கோபாக்கினியால் தன்னையே மறந்து அழிவுப் பாதையை நோக்கியதால் கோபவெறி கொண்ட நரசிம்மாவதாரத்தை அடக்கவே அவதரித்தவள் இந்த தேவி.

நல்ல காரியத்திற்காக விஷ்ணு நரசிம்மர் அவதாரம் எடுத்தபின்பு அதே அவதாரம் தீமை செய்ய தொடங்கிய போது நரசிம்மத்தை அடக்க சரபத்தின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய பிரத்தியங்கார தேவி, தீயவர்களுக்கு உதவ மாட்டார் என்பது அருள் வரலாறு.

இத்தேவி அவதரித்தபோது ஆயிரம் முகங்கள், 2ஆயிரம் கைகள், சிவப்பேறிய மூன்று கண்கள், கருப்புநிறம், மிகவும் பருத்த சரீரம், பெரும் கழுத்து நீல வண்ண ஆடை, முண்ட (கழுத்துள் மனிதத் தலைமகள்) மாலை, கைகளில் நீண்ட (புலிநகம் போன்ற) நகம் ஆகிய தோற்றங்களுடன் போர் செய்து நரசிம்மாவதாரத்தை விழுங்கினாள்.

அப்பொழுது இத்தேவிக்கு வக்கிர பிரத்தியங்கரா என்பது பெயர். தேவி சாந்தம் அடைய சரபேஸ்வரரும், தேவர்களும் ரிஷிகளும் வழிபட்டு அவளது விஸ்வரூபத்தை விட்டு அகன்று சாந்தமாகி பிரத்தியங்கார தேவியாக மாறினாள் என்பது தலபுராணம்.

சித்தர்கள், பஞ்சபாண்டவர்கள், இராமன், இலக்குமணன், இந்திரசித் ஆகியோர் வழிபட்டுள்ளனர். இராமபிரானை அழிக்க இங்கு வந்து இந்திரசித் வழிபாடு நடத்தி எட்டுத்திக்கிலும் சுடுகாடுகளும் பிரேதங்களும் சூழ வழிபாடு செய்து யாகம் தொடங்கினான். ஆனால் இராமபிரானோ தீயவனுக்கும் தீய சக்திகளுக்கும் அம்பிகை அருள் செய்து விடக் கூடாது என்பதற்காக அய்யாவாடிக்கு வந்து அம்பிகையை வழிபட்டார். இராமபிரானுக்கு அருள் பொழிந்து விட்டு பிரத்தியங்கராதேவி மறைந்தாள். தீயவை துணைக் கொண்டு யாகம் செய்த இந்திரசித்துக்கு அம்பிகை கண்ணில் தெரியாமல் மறைத்தாள். அதனால் இந்திரசித்து தோற்றான்.

இந்திரசித்து மரணம் அடையும் தருவாயில் அம்பிகை வழிபட அவன் முன்பு தோன்றிய பிரத்தியங்கரா தேவி தர்மமே வெல்லும் என்று அறிவுறுத்தினாள். இந்திரசித்து ''நான் உன் திருவடியை அடைய வேண்டும்'' என்று வரம் கேட்டு அம்மன் திருவடியை அடைந்தான்.

தீயவன் இந்திரசித்து இராமபிரானை அழிக்க வேண்டிய பொழுது தோன்றாத அன்னை. தீயவனின் உடல் அழிந்தபோது அந்த ஆத்மாவுக்கு தேவியின் திருவடியில் இடம் கிடைத்தது. எனவே இந்திரசித் வரம் பல பெற்ற தலம் என்பது அருள் வரலாறு.

இத்திருக்கோயிலுக்கு மற்றொரு சிறப்பு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அரசமரம் ஒன்று கோவிலின் கீழ்புறத்தில் உள்ளது. பஞ்சபாண்டவர்கள் ஐவரும் ஐந்து வித பத்திரங்களால் (இலை) வழிபட்டதால் அரசமரத்தின் இலைகள் 5 விதமாக இருப்பதாக அம்மன் அடியார்கள் அருள்கின்றனர்.

அறுபத்து நான்கு விதமான சாபம் நீங்கும்; ரோகம் எதிரிபயம் நீங்கும், நவக்கிரக தோஷங்கள் நீங்கும், 16 வித செல்வங்களையும் அடையலாம் என்பது தலபுராணக் கருத்தாகும்.

இத்திருக்கோயிலில் அமாவாசைமற்றும் பௌர்ணமி நாட்களில் இரவு 10 மணிக்கு மேல் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஓம குண்டத்தில் பெரும் அளவு மிளகாய் வற்றல் கொட்டப்படுகிறது. நெருப்பில் எரிந்து சாம்பலாகும் மிளகாய் நெடி வெளியேறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பிகை அருள் வெள்ளம்

பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன், M.A. D.Litt. Ph.D

''அருளது சக்தியாகும் அரன் தனக்கு'' என்று சிவஞான சித்தியார் என்ற சைவ சிந்தாந்த சாத்திர நூல் உரைக்கிறது. அதாவது, இறைவனின் அருளாற்றலே சக்திதான் என்று கூறுகிறது. ஈசனின் அருள் வெளிப்பாடு சக்தியின் வழியே நடைபெறுகிறது என்பது சைவ நெறிக் கொள்கை.

அம்பிகையின் அருள் வெள்ளம் பெருக்கெடுத்து அருட்கடலாய் நிறைந்துள்ளது. எனவே, ''அருட்கடலே!'' என்று அம்பிகையை அழைத்தார் அபிராமி பட்டர். அருள் வெள்ளம் நிறைந்த பெருங்கடல் என்ற பொருளில் இலலிதா சகஸ்ரநாமம், ''கருணாரஸ சாகரா'' என்று போற்றுகிறது. அவளது அருள் வெள்ளத்தில் மூழ்கிய அடியவர்களின் வரலாறுகள் பல உள்ளன.



**கண்ணீர் வடித்துத் தண்ணீர் தந்தவள்:**

இரண்யாட்சனின் வம்சத்தில் தோன்றிய துர்க்கமன் என்னும் அசுரன் பிரமனை நோக்கித் தவம் புரிந்தான். பிரமன் அவன் முன் தோன்றி, காட்சியளித்தான். முனிவர்களும், அந்தணர்களும் பெற்றிருந்த மந்திரசக்தியும், வேத ஆகமங்களின் அனைத்துச் சக்திகளும் ஒருங்கே தன்னை வந்தடைய வேண்டுமெனத் துர்க்கமன் வரங்கேட்டான். பின் விளைவுகளை எண்ணிப் பார்க்காத பிரமதேவனும் துர்க்கமன் கேட்ட வரத்தை அப்படியே அளித்து விட்டான்.

உடனே வேத மந்திரங்களும், தெய்வீக சாத்திரங்களும் துர்க்கமனிடம் சென்று சேர்ந்து விட்டன. அசுரனின் கொற்றம் ஓங்கியது. அகிலமே அதைக் கண்டு அஞ்சி நடுங்கியது. இறைவழிபாடும், ஏனைய நற்செயல்களும் குன்றின. தொடர்ந்து பருவமழை பொய்த்தது. பூமியெங்கும் பசுமை நீங்கி, வயல்வெளிகள் தரிசு நிலமாயிற்று. வெப்பமும், வறுமையும், நோயும், சாவும் உலகை வாட்டின. மக்கள் பலவகையாலும் துன்பம் எய்தினர்.

அக்கொடிய வறட்சி நூறு ஆண்டுகள் நீடித்ததாம். சாந்த மனங் கொண்ட சான்றோர்கள் இமயமலைச் சாரலில் ஒன்று கூடினர். இமவான் மகளாகத் தோன்றிய உலகநாயகியை நோக்கித் தியானமும், தவமும் இயற்றினர்.

''மகேஸ்வரி ! மக்களிடம் நீகருணை காட்ட வேண்டும். அவர்கள் எக்குற்றம் புரிந்திருப்பினும், அவர்களை நீஇங்ஙனம் வாட்டுதல் கூடாது. ஏனெனில், பாமரரும் உன் குழந்தைகள் அல்லவா? அனைவருள்ளும் அந்தர்யாமியாக இருக்கும் உனது தூண்டுதலாலேயே அவர்கள் செயற்படுகின்றனர். எனவே, நீசினத்தை விடுத்துக் கருணை புரிய வேண்டும். பாமர மக்களுக்கு உன்னையன்றி வேறு கதியும் உண்டோ?''

இவ்வாறு அம்மகான்கள் பிரார்த்தனை செய்தனர் என்று தேவி பாகவதம் கூறுகிறது. ஏழை எளிய, பாமர மக்கள்பால் அவர்கள் கொண்டிருந்த உண்மையான அன்பும், நல்லெண்ணமும் இதனால் விளங்குகிறது அல்லவா?

தேவியும் மனமிரங்கிக் காட்சி தந்தாள் அம்புகள், தாமரை மலர்கள் தளிர், கிழங்கு, காய்கறிகள் பழங்கள், வி(தைகள்) ஆகியவற்றைத் தனது கரங்களில் ஏந்திய திருக்கோலத்துடன் அவள் தோன்றினாள். அவளுடைய கருணை மிக்க கண்களிலிருந்து நீர் பெருகியது. அது வெள்ளப் பெருக்காகி ஆறு, குளங்களைச் சென்றடைந்தது. அத்துடன் ஒன்பது நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. எங்கும் பசுமை மீண்டது.

இச்செய்தியை அறிந்த துர்க்கமன் சினங் கொண்டு, தேவியுடன் போர் புரியப் புறப்பட்டு வந்தான். தேவர்களும், சாதுக்களும் அஞ்சி நடுங்கினர். அம்பிகையைச் சரண் புகுந்தனர். அம்பிகை துர்க்கமனை வதைத்து உலகத்தைக் காத்தாள்.

திருக்கோயிலெங்கும் பசுமையான காய்கறிகளையும், கனிவகைகளையும் கொண்டு அலங்கரிக்கின்ற நிறைமணி விழா புரட்டாசி மாத பௌர்ணமி நாளில் நடைபெறும்.

''சாகம்'' என்றால் காய்கறி என்று பொருள். அவற்றை ஏந்திய தேவியைச் சாகம்பரி என்றனர். பசுமைத் தெய்வம் சாகம்பரி பூமியெங்கும் வளமையை அருளிச் செழிப்பை ஏற்படுத்த இறைஞ்சுவோம்.

**ஆங்கிலேயருக்கு அருள்:**

காவிரியும், பவானியும் கலக்கும் கூடுதுறை. தமிழ்நாட்டில், ''தட்சிண திரிவேணி'' என்ற புகழுடன் திகழ்கிறது. இங்கு, அமுத நதி என்ற மூன்றாவது ஆறு உள்முகமாகக் கூடுகிறது என்பது ஐதீகம். கூடுதுறையில் உள்ள அமுதலிங்கம் என்ற சிவலிங்கத்திற்கு அடியிலிருந்து அமுதப் பெருக்கு ஏற்பட்டு, பவானி சங்கமத்தில் கலக்கிறது என்பர்.

இந்தப் பவானி கூடுதுறையில் மூழ்கி நீராடியவரை, பாவம் எதுவும் வந்து சேராது. அதாவது, தூய தமிழில் சொன்னால் வினைகள் எதுவும் வந்து நண்ணாது. அக்காரணத்தால், முற்காலத்தில் பவானியை, 'நண்ணாவூர்' என்று

# குலசேகரப் பட்டினம் அறம் வளர்த்த நாயகி

- பா. குபேந்திரபாபு.

காஞ்சி காமாட்சி சிவபெருமான் அளித்த இருநாழிநெல் கொண்டு 32 அறம் வளர்த்த காரணத்தால் அறம் வளர் நாயகி என்று அழைக்கப் படுகின்றார்.



காஞ்சி ஏகாம்பரேஸ்வரையும் அன்னையும் தவறாமல் தரிசித்து வந்த குலசேகரப்பட்டினத்தைச் சேர்ந்த முற்கால வணிகர் ஒருவர், முதுமையில் காஞ்சிக்கு செல்ல இயலாத நிலை ஏற்பட்ட போது, அவரது வேண்டுகோளுக்கு இரங்கிய அன்னை அவ்வருள் அன்பருக்கு குலசேகரப் பட்டினத்தில் அறம் வளர்த்த அன்னையாக காட்சி தந்தாள். ஏகாம்பரேஸ்வரர் இங்கு அருள்மிகு கச்சிகொண்ட பாண்டீஸ்வரராக அருள்பாலித்தார். அதனால் காஞ்சி ஏகாம்பரேஸ்வர் ஆலயம் போன்ற ஆலயத்தை அவ்வணிகர் குலசேகரப் பட்டினத்தில் தோற்றுவித்தார். அவர் அமைத்த இத்திருக்கோவிலின் வடக்குப் பகுதியில் காஞ்சியைப் போன்றே தவமிருந்த மாவடி அம்மன் சந்நிதி உள்ளது.

இங்கு அபூர்வமாக நவக்கிரக சன்னதியில் சூரியனின் மனைவியரான சாயாதேவி, சமிக்ஞா தேவி சிலைகளும் சூரியனில் இடம்பெற்றுள்ளன. சனீஸ்வர பகவான் தாய் சாயாதேவி தந்தை சூரிய பகவானின் நடுவில் காட்சிதருகிறார்.

இத்திருக்கோயில் உற்சவ காலங்களில் காளை வாகனத்தில் அருள்மிகு கச்சியப்பர் அறம்வளர்த்த அம்மையுடன் நடுவே சோமாஸ்கந்தர் உலா வருவது கண் கொள்ளாக் காட்சியாகும்.

இத்திருக்கோவிலிலும் திருச்செந்தூர் முருகன் கோவிலில் வழங்கப்படுதல் போலவே பன்னீர் இலைகளினுள் விபூதி மடித்துத் தரப்படுகிறது. திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு அம்மையின் நந்தவனத்துப் பன்னீர் இலைகள் தினசரி வழங்கப்படுகிறது.

---

அழைத்து வந்தனர். அது சற்றே குறுகி 'நணா' என்றே வழங்கியது. தேவாரத்தில் பவானி, 'திருநணா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் பவானியே சேலம் மற்றும் கோவை மாவட்டங்களின் தலைநகரமாக விளங்கியது.

மாவட்டக் 'கலெக்டர்' பவானியில்தான் வசித்து வந்தார். வில்லியம் காரோ என்ற ஆங்கிலேயர் சமயப்பொறை மிக்க துரைமகனாவார். அவர் ஆட்சியராக இருந்த பொழுது கூடுதுறையில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் சங்கமேஸ்வரைப் பற்றியும், அம்பிகை வேதநாயகியைப் பற்றியும் கேள்விப்பட்டார்.

வேதநாயகியின் அருளாற்றலைப் பற்றி அறிந்த வில்லியம் காரோ அவளிடம் பெரும் பக்தி கொண்டு விட்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைச் சேர்ந்தவர்களிடமும், தாசில்தார்களிடமும் தான் வேதநாயகியைத் தரிசிக்க விரும்புவதாகக் கூறினார். அவர் வேற்று நாட்டினர். மற்றும் வேற்று மதத்தவர் என்ற காரணத்தினால், அந்தக் காலத்தில், அவரால் திருக்கோயிலுக்குள் செல்ல இயலவில்லை. எனினும் தாசில்தார் ஒருவர் ஓர் இடைநிலை ஏற்பாட்டைச்செய்தார்.

சங்கமேஸ்வரர் திருக்கோயிலின் கிழக்குப் பக்க மதில் சுவரில் அம்பிகை சன்னதிக்கு நேரே மூன்று பெரிய துளைகளைப் போடச் செய்தார் தாசில்தார். அவற்றின் வழியே எட்ட இருந்தபடியே கலெக்டர் காரோ வேதநாயகியைத் தரிசித்து மகிழ்ந்தார். அவளது திருவுருவம் காரோவின் மனதில் நன்கு பதிந்து விட்டது. ஒரு நாள் கூடத் தவறாது அம்பிகையைத் தரிசித்து வந்தார். அதனால் தமக்கு மன அமைதியும், நல்வாழ்வும் அமைவதாக உணர்ந்தார்.

ஒரு நாள் இரவு, வில்லியம் காரோ அயர்ந்து தூங்கி கொண்டிருந்தார். அன்றாடம் தரிசிக்கும் வேதநாயகி கனவில் தோன்றினாள். ''இதோ உன்னை ஆபத்து நெருங்குகிறது ! உடனே எழுந்து வெளியே வா!'' என்று கூறியபடி அவரைப் பிடித்து இழுப்பது போல் தோன்றியது ! திடுக்கிட்டு எழுந்த வில்லியம் காரோ, தனது குடும்பத்தினருடன் வெளியே வந்து விட்டார்.

அவர்கள் வீட்டிற்கு வெளியே வந்து சில வினாடிகள்தான் ஆகியிருக்கும் ! அவர்களது வீட்டின் மேல்தளம் இடிந்து விழுந்து விட்டது. கனவில் வந்து, கருணை செய்து காப்பாற்றிய அன்னையின் அருளை எண்ணி எண்ணி வியந்தார் வில்லியம் காரோ!

தன்னைக் குடும்பத்துடன் காத்த வேதநாயகிக்குத் தக்க காணிக்கை செலுத்த விரும்பினார். முழுவதும் யானைத் தந்தத்தால் செய்த கட்டில் ஒன்றைக் காணிக்கையாக வழங்கினார்.

**''1804-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், பதினோராம் நாள் வில்லியம் காரோ, அன்னை வேதநாயகிக்கு வழங்கிய காணிக்கை''** என்று அந்தக் கட்டிலில் செதுக்கிச் சரித்திரச் சான்றாகவே வைத்து விட்டார் வில்லியம் காரோ!

**சாட்சியுரைத்த சந்தனமாரி**

திருவாரூர் மாவட்டம் பருத்தியூர் கிராமத்தின் காவல் தெய்வமாக விளங்குபவள் சந்தன மாரியம்மன். ஊர்ப் பஞ்சாயத்து முதலான அனைத்தும் சந்தனமாரியம்மன் சன்னதியில் தான் அலசப்படும். சந்தனமாரியம்மன் நிகழ்த்திய அற்புதங்கள் பலவாகும்.

குடமுருட்டி ஆற்றின் வடகரையில் மரகதப் பச்சைவயல்களின் நடுவே அன்னை சந்தனமாரியின்

திருக்கோயில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய சன்னதியில் கருணை பொழியும் முகத்துடன் கம்பீரமாக வீற்றிருக்கிறாள்!

பாவாடை என்பவர் படிப்பறிவில்லாத ஓர் ஏழை விவசாயி. அவர் பணக்காரர் ஒருவரிடம் கடன் வாங்கிவிட்டார். கடன் பத்திரம் எழுதி, பாவாடையின் இடதுகைப் பெருவிரல் குறியைப் பதிக்கச் செய்தார் பணக்காரர். தன்னிடமிருந்த ஆடுமாடுகளை விற்று, பாவாடை உரிய நேரத்தில் கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். கடன் கொடுத்தவர் பத்திரத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. அத்துடன், ''பாவாடை பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை'' என்று வழக்கும் தொடுத்துவிட்டார். ஆங்கிலேய நீதிபதி ஒருவர் முன்னால் வழக்கு விசாரணைக்கு வந்தது.

''நீர் கடனைத் திருப்பிக் கொடுத்தற்கு எவரேனும் சாட்சி சொல்லுவார்களா?'' என்று நீதிபதி கேட்டார். ''நமக்குச் சந்தனமாரி தான் சாட்சி!'' என்றார் பாவாடை. அவரது பாமரத் தனத்தைக் கண்டு அனைவரும் சிரித்தனர். நீதிமன்றமும் கலைந்தது.

அன்று இரவு, அந்த ஆங்கிலேய நீதிபதியின் கனவில் ஒரு நீதிமன்றக் காட்சி தோன்றுகிறது! விசாரணைக் கூண்டில், மஞ்சள் நிறத்தில் பட்டுப் பாவாடை உடுத்திய ஒரு சிறுமி நிற்கிறாள்! ''நீயாரம்மா?'' என்ற நீதிபதி கேட்டார். ''நான்தான் பருத்தியூர் சந்தனமாரி ! நிரபராதியான பாவாடைக்குச் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன்!'' என்றாள்.

'' நான் எதனை ஆதாரமாகக் கொண்டு பாவாடை நிரபராதி என்று தீர்மானிப்பது?'' என்று நீதிபதி கேட்டார். சில நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, ''அவர்களையும் அழைத்து விசாரித்து, நீதி வழங்கு!'' என்ற சிறுமி புன்னகை பூத்து மறைந்தாள்!

கனவு கலைந்து, விழித்து எழுந்த நீதிபதி, சிறுமி கனவில் குறிப்பிட்ட பெயர்களை எழுதி வைத்துக் கொண்டார். சந்தனமாரி கனவில் குறிப்பிட்ட பெயருள்ள நபர்கள் யாரும் உண்மையில் இருக்கிறார்களா என்பதை உறுதி செய்துகொள்வதற்காக, நீதிபதி கிராம அதிகாரிகளை அழைத்து விசாரித்தார்.

அவ்வதிகாரிகள், அம்பிகை குறிப்பிட்டவர்கள் இருப்பதை உறுதி செய்தவுடன் அந்த நபர்களுக்கும், 'சம்மன்' அனுப்பப்பட்டது. அவர்கள், பாவாடை, தன்னிடமிருந்த ஆடுமாடுகளை விற்றுக் கடனைத் தீர்த்துவிட்டார் என்பதை நீதிமன்றத்தில் கூறினார்கள். ''சந்தனமாரி சாட்சி கூறியபடி, பாவாடை நிரபராதி எனத் தீர்ப்பளிக்கிறேன்!'' என்று அந்த ஆங்கிலேய நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**கல்லில் அடித்த கம்சனுக்கும் கருணை!**

தேவகி-வசுதேவர் தம்பதியரின் எட்டாவது குழந்தையால் தனக்கு இறுதி ஏற்படும் என அறிந்த கம்சன் அவர்களைச் சிறையில் அடைத்திருந்தான். சிறையில் அவர்களுக்கு ஏழு ஆண்குழந்தைகள் பிறந்தன. அக்குழந்தைகள் ஏழையும் கம்சன் இரக்கமில்லாமல், கருங்கல் பாறையில் அடித்துக் கொடூரமாகக் கொன்றான்.

எட்டாவது ஆண்குழந்தையாகக் கண்ணன் பிறந்தான். அதே நேரத்தில் கோகுலத்தில் மகாமாயையாகிய அம்பிகை தோன்றினாள். கண்ணன் கோகுலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டான். அங்கிருந்த பெண் குழந்தை சிறைக்குக் கொண்டு வரப்பட்டது. அந்தப் பெண்குழந்தையையும் இரக்கமில்லாமல் கொல்ல நினைத்தான் கம்சன். குழந்தையின் கால்களைப் பிடித்துப் பாறையில் அடிக்க முற்பட்டான் கம்சன்.

கம்சனின் பிடியிலிருந்து விடுபட்டு மேலே வானில் சென்றது அப் பெண்குழந்தை! ''கம்சனே! உன்னைக் கொல்லப் போகிற குழந்தை வேறு இடத்தில் வளர்கிறது! உனக்கு அழிவு உறுதியாகிவிட்டது! நான் இப்போதே உன்னை வதைத்திருப்பேன்! ஆனால், நீஎனது காலைப் பிடித்துவிட்டாய்! என் பாதங்களைப் பற்றியவர்களை நான் வதைக்க மாட்டேன்!'' என்று வானத்திலிருந்து மகாமாயையாகிய அம்பிகை உரைத்தாள்.

தன் பாதங்களைப் பற்றியவர் கொலையிற் கொடியவர் எனினும் அம்பிகை அவர்களுக்குப் பெருங்கருணை செய்கிறாள்.

ஆகவேதான் அண்மைக்கால மகாகவி பாரதியாரும், ''**அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்!**'' என்று நம்மை ஆற்றுப்படுத்துகிறார். அம்பிகையைச் சரண் அடைவோம்! அருள் வெள்ளத்தில் மூழ்குவோம்!

## நவராத்திரி பூஜையினால் பெறத்தக்க பலன்கள்



வறுமை நீங்கி ஐஸ்வரியம் பெறலாம். வியாதி நீங்கி ஆரோக்கியம் பெறலாம். அறியாமை நீங்கிப் பேரறிஞர் ஆகலாம். சகலரும் மதிக்கும் சகல சௌபாக்கியங்கள் முப்பெருந்தேவியர் வழிபாட்டால் நவராத்திரி பூஜையால் யாவரும் பெற்று உய்யலாம்.

# நாடிய வரம் அளிக்கும் நாகர்கோயில் ஸ்ரீ நாகராஜர் ஆலயம்



திருமதி மீனாட்சி கோகுலவாசன்

புராண வரலாற்றுச் சிறப்புகள் மிக்க நாகராஜர் கோயில் பாரத நாட்டின் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரியிலிருந்து, வடக்கே சுமார் பத்து மைல் தொலைவில் நாகர்கோயில் என்னும் நகரம் உள்ளது. இக்கோயிலின் பெயரால் ஊர் நாகர்கோயில் என்று வழங்கப்படுகிறது.

நாகராஜர்கோயில் ஏற்பட்டதற்குப் பல கர்ணபரம்பரைக் கதைகள் கூறப்படுகின்றன. புல், புதர்களுடன், செடி, கொடிகள் செறிந்திருந்த இந்தக்காட்டில் புல் அறுக்கும் பெண் ஒருத்தி மாட்டிற்குப்புல் அறுக்கும் போது அவள் கையிலிருந்த அரிவாள், ஐந்து தலைநாகம் ஒன்றின் தலையில் பட்டு இரத்தம் பீறிட்டது. இதைக் கண்டு, பயந்து நடுங்கிய அப்பெண், பக்கத்தில் உள்ள கிராம மக்களை அழைத்து வந்தாள்.

அவர்கள் கூட்டமாக வந்து பார்க்கும் போது அந்த ஐந்து தலை நாகம் நிலையாகக் காணப்பட்டது. கிராம மக்கள் ஒரு சிறிய தென்னங்கீற்றால் வேயப்பட்ட கூரைக்கோயில் கட்டி வழிபட்டு வந்தனர். நாளடைவில் அக்கம் பக்கத்து கிராம மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து நாகராஜரைத்தரிசித்துச் சென்றதில் ஆலயம் மிகப் பிரபலமாயிற்று.

தமிழகத்துக் கோயில்களில் வேறெங்கும் காணப்படாத தனிச் சிறப்பு, இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தின் மேல் கூரைதென்னை ஓலையால் வேயப்பட்டதாகும்.

உதய மார்த்தாண்டவர்மா மன்னர் இக்கோயிலைப் புதுப்பித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் அவர் கனவில் நாகராஜா தோன்றி ''ஓலைக் கூரையாலான இருப்பிடத்தையே நான் மிகவும் விரும்புகிறேன். முதல் முதலில் அக்கூரையினடியில்தான் வாசம் செய்தேன், ஆதலால் அதை மாற்ற வேண்டாம்'' என்று கூறினார். அத்தெய்வத்தின் கட்டளைக்கிணங்கவே மூலஸ்தானம் அமைக்கப்பட்டது என்பர்.

அக்கூரையில் எப்போதுமே ஒரு நாகப்பாம்பு காவல் புரிகிறது என்றும், வருடந்தோறும் கூரை வேயப்படும்போது ஒரு பாம்பு வருவது வழக்கம் என்றும் கூறப்படுகிறது. இக்கோயிலின் அர்ச்சகர்கள் கேரளாவிலுள்ள ''பாம்பே காட்டு இல்லம்'' என்ற குடும்பத்தினர், பரம்பரை பரம்பரையாகவே நாகத்தை வழிபடுபவர்கள், பாம்புகளைக் குழந்தைகளைப் போல் வளர்ப்பவர்கள் என்பதுமாகும்.

ஓலையாலான மூலஸ்தானத்தில் நாகராஜா அமைந்துள்ள இடம் எப்போதும் ஈரமாகவே இருக்கின்றது, அங்கிருந்து எடுக்கப்படும் மண்ணே இக்கோயிலின் முக்கிய பிரசாதமாகும். இம்மண் ஆறுமாத காலம் கறுப்பு நிறமாகவும், மீதமுள்ள நாட்களில் வெள்ளை நிறமாகவும் இருந்து வருகிறதாம். எவ்வளவோ காலமாக எடுத்தும் அம்மண் குறையாமல் இருப்பது நாகராஜனின் ஒப்பற்ற அருளைக் குறிக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

கூரை வேயப்பட்டிருக்கும் மூலஸ்தானத்திற்குப் பின்னால் தொழுநோய் போன்ற பதினெட்டு நோய்களைக் குணப்படுத்தும் ஓடவள்ளி என்ற ஒரு பச்சிலைக்கொடி படர்ந்திருந்ததாகவும் அதனடியில் தன் இனத்துடன் குட்டி குஞ்சுகளுடன் நாகங்கள் குடியிருந்தனவாம். அதனைப் பக்தர்களின் பயத்தினால் அகற்றிவிட்டார்களாம். அக்காலத்தில் பிரசாதத்தை 'ஓடவள்ளி' இலையில் கொடுப்பார்களாம். ஒவ்வொரு 'ஓடவள்ளி' இலையும் ஒவ்வொரு சுவையுடன் இருக்குமாம்.

இப்பொழுது பிரசாதம் 'புற்று மண்ணும்' 'சந்தனமும்' வாழை இலையில் கொடுத்து வருகிறார்கள். அம்மன் கோயிலில் மட்டும் குங்குமம் பிரசாதம் கொடுக்கப்படுகிறது. தேவைப்பட்டவர்களுக்குக் கிலோ கணக்கில் புற்று மண்ணை விலைக்குத் தருகிறார்கள்.

ஆண்டு தோறும் இவ்வாலயத்தில் 'தை' மாதத்தில் ஆனந்த கிருஷ்ணன் முன்னுள்ள கொடிமரத்தில் கொடி ஏற்றி, பத்து நாட்கள் திருவிழா கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். ஆவணி மாதம் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிறப்பாகத் திருவிழா நடைபெறுகிறது. என்றாலும் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று கொண்டாடப்படும் திருவிழா மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறுகின்றனர். அதுசமயம் பக்தர்கள் கூடி, உப்பு, மிளகு, பசும்பால், மரத்தினாலான மரப்பொம்மைகள் எனக் காணிக்கைகளைச் செலுத்தி, நாகராஜனைத் தரிசித்து அருள்பெறுகின்றனர்.

நாகதோஷங்களை ஒழிக்க இது ஒரு புண்ணியஸ்தலமாக விளங்குகிறது என்றும், பிள்ளைப்பேறு வேண்டுவோர் நாகச்சிலைகளால் சூழப்பட்ட இந்த அரசமரங்களைச் சுற்றி வலம் வந்தால் பலனடைவர் என்ற நம்பிக்கையும் உள்ளது.

# திருமண வரம் அளிக்கும் திருமணஞ்சேரி

வளம் கொழிக்கும், தமிழ் மணக்கும் தஞ்சைத் தரணியில் மாயவரத்தை அடுத்த குத்தாலம் நகரின் வடபால், சுமார் மூன்று கல் தொலைவில் அமையப்பெற்றது திருமணஞ்சேரி எனும் சிற்றூர்.

நற்றவப் பேறுபெற்ற நாயன்மார் பலரும் போற்றிப்பாடியுள்ள அருள்வள்ளநாதர் திருக்கோயில் கொண்டு மங்காப் புகழுடன் ஒளிவீசிக் காட்சிதரும் சைவப் பெருந்தலம். கல்யாணசுந்தர மூர்த்தி திருவுளம் கொண்டு கோகிலாம்பாள் அம்பிகை தன்னைக் கைப்பிடித்து இங்குத் திருமணம் செய்து கொண்ட காரணத்தால் அந்தப் பெயர் கொண்ட நற்றலம்.

எம்பெருமான் திருக்கல்யாண வைபவத்திற்காக சப்த சாகரங்களும் மாலையாக மாறி வந்ததாக ஐதீகம். சப்தசாகர தீர்த்தங்களும் திருக்கோயிலைச் சுற்றிலும் அகழியாகக் காட்சி தருகின்றன. தலப்பெருமைகள் பலவும் தன்னகத்தே கொண்டது இத்திருமணஞ்சேரி எனும் சிற்றூர். அப்பர் பெருமானாலும் திருஞானசம்பந்தராலும் போற்றிப் புகழ்ந்து பாடல் பெற்றது இப்புண்ணியத்தலம்.

அறியாமை மேலீட்டால் மன்மதன் சர்வேசுவரன் மீது தன் கணைகளைத் தொடுக்க, அதனால் அவரது நெற்றிக்கண்ணுக்கு இலக்காயினன். தன் தவறு உணர்ந்த அக்காமவேள் மனம் நொந்து, திருந்தி ஈசனைத் துதிக்க எம்பெருமானும் மனமிரங்கி மன்மதன் பேறு பெற வரமருளியது இத்தலத்தில்தான்.

வணிகப் பெண்டிர் இருவர் தங்கள் சந்ததிகளுக்குள் கொண்டும் கொடுத்தும்சம்பந்தம் செய்து கொள்ள விரும்பி வாக்களித்துக் கொண்டனர். பின்னர், ஒருத்தி வயிற்றில் பிறந்த குழந்தை ஆமையாக இருக்கக் கண்டு திகைத்தனர். இத்தலத்து ஆண்டவனிடத்தில் தங்கள் குறைகளை இவர்கள் முறையிட்டுக் கொள்ளவே எம்பெருமானும் அருள் கூர்ந்து ஆமையுருவை மாற்றி, மனித உருக்கொள்ளச் செய்து திருமணம் நடந்தேறச் செய்ததாக வரலாறு கூறுகிறது.

திருமணம் கைகூடாது தடைப்பட்டு நிற்பவர்கள் இத்தல ஈசன் கல்யாணசுந்தரப் பெருமானுக்கு மாலை சாற்றி அர்ச்சனையும் செய்து வழிபட்டால் வெகுவிரைவிலேயே திருமணமாகப் பெறுவர் என்பது இத்தல ஈசன் மகிமைகளுள் மிகப் பிரச்சித்தமானது.

ராகு கிரகதோஷ நிவர்த்திக்கும் இந்தத் தலம் சாலச் சிறப்புடையது. ராகு தோஷத்தினால் பீடிக்கப்பட்டு. புத்திரபாக்கியம் கிட்டாத தம்பதியர் இங்குள்ள சப்தசாகர தீர்த்ததில் நீராடி இங்குக் கோயில் கொண்டருளியுள்ள ராகு பகவானுக்குப் பால் அபிஷேகமும், பால் பொங்கல் நிவேதனமும் செய்து சாப்பிட்டால் தமது ராகுதோஷம் நீங்கப் பெற்றுப் புத்திரப்பேறு பெறுவர் என்பது அனுபவ உண்மை.



காரண ஆகம முறைப்படி அமையப்பெற்றுள்ள இவ்வாலயத்தின் மூலவர் ஸ்ரீ உத்வாகநாதர் (அருள் வள்ளநாதர்). அம்பிகை கோகிலாம்பாள் (யாழினும் மென்மொழியாள்). திருமணவரம் அருளும் அனுக்கிரக மூர்த்தியான கல்யாணசுந்தரர் திருமணக்கோலத்துடன் காட்சி தருகிறார்.

செம்பியன் மாதேவியாரால் இந்த ஆலயம் திருப்பணி செய்யப்பட்டதாகக் கல்வெட்டு களினின்றும் அறியக் கிடக்கிறது. ராஜ கோபுரம் மல்லப்ப நாயக்கரால் செய்விக்கப்பட்டது.

வருடந்தோறும் சித்திரை மாதம் பூசநட்சத்திரத்தில் ஈசன் திருக்கல்யாண மகோற்சவம் மூன்று தினங்கள் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நாட்களில் ஊரே மணக்கோலத்துடன் காட்சி தருகின்றது.

தினசரி பூஜைகள் முறையாகவும், செம்மையாகவும் நடத்தப்பட்டு வருகின்றன. திருவனந்தல், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்த ஜாமம் ஆக ஐந்து காலப் பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கீழ்த்திசைநோக்கியிருக்கும் ஆலயத்தினுள் நுழையும்போது ராஜகோபுரத்தைத் தாண்டியதும் கணபதி காட்சி தருகின்றார். அடுத்து முறையே துவஜஸ்தம்பம், பலிபீடம், மகாநந்தி மண்டபம் அமையப்பெற்றுள்ளன.

கட்ட கோபுரத்தைத் தாண்டியதும் விநாயகர் சோபன மண்டபத்தின் முன்புற வாசலில் வரசித்தி விநாயகராகக் கோயில் கொண்டுள்ளார்.

கோயிலின் உட்புறம் துவார மண்டபத்தில் துவாரபாலக நந்தியுடன் கர்ப்பக்கிரஹத்தில் ஸ்ரீ உத்வாகநாதர் (அருள்வள்ளநாதர்) அழகுறக் காட்சி தருகிறார். நிருத்தமண்டபத்தில் ஸ்ரீநடராஜர் நடனமாடிக் கொண்டே பக்தர்களுக்கருள் பாலிக்கிறார். அவருக்கு எதிர்ப்புறத்தில் கிழக்கு முகமாக கல்யாணசுந்தரர் கல்யாண கோலத்தில்

காட்சியளிக்கிறார். இவர் இவ்வாலயத்தில் தனிப்பெரும் நாயகராவார்.

இவர்களின் அருளைப் பெற்றுக்கொண்டு வரும்போது ஸ்ரீ கோகிலாம்பாள் அம்பிகை (யாழினும் மென்மொழியாள்) மணமேடையில் மணப்பெண் இருக்க வேண்டிய முறையில் சுகாசனத்தில் காட்சி தருவது கண்களுக்கும் கருத்துக்கும் தனிப் பெரும் விருந்தாகும். அம்மன் சந்நிதியின் மேற்புறம் சயன ஆலயம் அமையப்பெற்றுள்ளது.

பிறகு உட்பிரகாரத்தில் வரும் போது, நடராஜர் சபையின் நேர்எதிர்ப்புறம், சமயம் பரப்பிய தனிப்பெரும் குரவர் நால்வர் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தேவகோஷ்டத்தில் தென்புறம் பிட்சாடனர், பால கணபதி, நடராசர், யோக வடிவில் தட்சிணாமூர்த்தி, மேற்புறம் லிங்கோத்பவர், வடபுறம் பிரம்மா, ராகுபகவான், துர்க்கை இருக்கின்றார்கள். ஆலயத்தின் கன்னி மூலையில் அழகு விநாயகரின் சந்நிதியும், திருமாலைப் பத்தியில் சுப்பிரமணியர் சந்நிதியும், சுவாமியின் கருவறையின் மேற்புறம் உபய நாச்சியாருடன் மகாவிஷ்ணு சந்நிதி. லட்சுமி சந்நிதி, பரத மகரிஷி, செம்பியன் மகாதேவி மல்லப்ப நாயக்கர் ஆகியோர் சவாமியின் கருவறையின் நான்கு புறங்களிலும் இருக்கின்றார்கள்.

பைரவர், சூரியன், சனீஸ்வரபகவான், பச்சையப்பநாதர் (ருத்ரவனேசுவரர்) பச்சையம்மை நாயகி (ருத்ரவனேசுவரி) இவர்கள் கீழ்த்திருமாலைப்பத்தியில் இருக்கின்றார்கள்.

பொதுவில் இவ்வாலயம் பற்பல அரிய திருவுருவங்களைத் தன்னகத்தே கொண்டு ஆலய வழிபாட்டுக்குச் சிறந்ததோர் இடமாக உளமும் மனமும் நிறைந்து வழிபட ஏற்றதாக அமைந்துள்ளது.

உமா தேவியார் கயிலையில் ஒருநாள் ஈசனை வணங்கி, 'மற்றுமொருமுறை தங்களை மணந்து இன்புற வேண்டுமென' வரங்கேட்க, சிவபிரானும் கருணைகொண்டு 'வரும் பிரம்மகற்பத்தில் நின்னை மணம் புரிந்தருள்வேன்' என்றார்.

தன் விருப்பம் ஈடேற வெகுகாலம் தள்ளி ஈசன் நாள் குறிப்பதைக் கேட்டு வருத்தமுற்ற உமையவளும் எம்பெருமானிடம் சற்று அலட்சியமாக நடக்கத் தலைப்பட்டார். இதனால் சிவபெருமான் சினங்கொண்டு உமாதேவியாரைப் பூவுலகில் பசுவாகி வாழப் பணித்தார்.

கோ உருக்கொண்ட உமையாள் தன் செயல் நினைந்து வருந்தி எம்பெருமானிடம் சாபவிமோசனம் கேட்டு மன்றாடவே எம்பெருமான் சினந்தணிந்து அருளியவாறு திருமகள், கலைமகள், இந்திராணி ஆகிய அமர மாதர் பலரும் கோ உருக்கொண்டு, உமாதேவியருடன் பூவுலகில் அசுக்காடு அரங்காடு ஆகிய இடங்களில் உலவி வந்தனர். திருமால் பசு மேய்ப்பவனாக உருவெடுத்து அப்பசுக்களைப் பராமரித்து வரலானார்.

அம்பிகை பொழிந்த பாலால் தன் திருமேனி குளிரப்பெற்றும், குளம்பின் ஸ்பரிசத் தழும்பும் பெற்று மகிழ்ந்த சிவபெருமான், உளம் கனிந்து அம்பிகை விரும்பியவாறு திருமணம் புரிந்து கொள்ளத் திருவுளங்கொண்டு பரத மகரிஷி நடத்திய யாக வேள்விக் குண்டத்தில் தோன்றிய உமையாளைத் திருமணஞ்சேரியில் திருமணம் புரிந்து அருளினார் என்பது தலவரலாறு.

தேரழுந்தூரில் அம்பிகைக்குப் பசு சாபம் கொடுக்கப்பட்டது. அசுக்காட்டில் அம்பிகை பசு உரு ஏற்றும், கோமலில் திருமால் பசு மேய்ப்போனாக உருவெடுத்துப் பசுக்களை பராமரித்து வந்ததாகவும், திருக்குளம்பத்தில் ஈசன் பசுவின் குளம்புத் தழும்பை ஏற்றதாகவும், திருவாவடுதுறையில் பசுவுக்கு முக்தி கொடுக்கப்பட்டதாகவும், திருத்துருத்தி என்னும் குத்தாலத்தில் பரத மகிரிஷி நடத்திய யாக வேள்வியில் உமை மங்கை தோன்றினார் எனவும் அறியக்கிடக்கின்றன.

திருவேள்விக்குடியில் திருமணத்திற்கான கங்கணதாரணமும் மங்கள ஸ்நானமும் செய்து, குறுமுலைப்பாளையில் பாலிகை ஸ்தாபனம் செய்தும், எதிர்கொள்பாடியில் இறைவனை எதிர் கொண்டழைத்தும், திருமணஞ்சேரியில் எம்பெருமான் உமைமங்கை தேவியாரைக் கரம்பற்றித் திருமணம் செய்து கொண்டார். இத்தல வரலாற்றுப் பெருமைக்கு ஈடும் இணையுமற்ற சிறப்பாக இது அமைந்துள்ளது.

# விபூதிப் பிரகாரம்

திருவானைக்கா அருள்மிகு ஜம்புகேஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஐந்தாம்பிரகாரம் விபூதிப் பிரகாரம் என வழங்கப்பட்டு வருகின்றது.

சிவபெருமானே ஒரு சித்தராகத் தோன்றி வேலைக்கு வந்த அத்தனைபேரிடம்வேலைக்குக் கூலியாக விபூதி கொடுத்திருக்கின்றார்.

பணியாட்கள் வீடு திரும்பும்போது விபூதி, பணமாக மாறிய அற்புதம் நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு சிவபெருமான் விபூதி தந்து கட்டிய பிரகாரம் விபூதிப்பிரகாரம் என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.



# ? பதில்





(தொண்டை மண்டலத்தில் காங்கேய நல்லூரில் சிவத்திரு மல்லையதாஸ் - கனகவல்லி அம்மை தம்பதியர்க்கு அருந்தவப் புதல்வராக 25-8-2006 அன்று தோன்றிய நம் வாரியார் சுவாமிகளின் நூற்றாண்டு விழா மகத்தான வைபவமாக இம்மண்ணுலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த இனிய வேளையில் நம் வாரியார் சுவாமிகளின் திருவாக்கிலிருந்து மலர்ந்த பொன்மொழிகள், நம் வாசகர்கள் வினவிய வினாக்களுக்கு விடையாக வழங்கப்பட்டுள்ளன என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்)




★ ★ ★

**த. சத்தியநாராயணன், அயனாவரம்.**

கேள்வி : குடும்பத்தில் ஆதிபராசக்தி அல்லது மகிஷாசுரமர்த்தினி திருவுருவப் படங்களை வைத்து வணங்கலாமா? சிலர் வேண்டாம் என்கிறார்கள். தாங்கள் கூறும் வழி என்ன?

பதில் : ஆதிபராசக்தி, மகிஷாசுரமர்த்தினி, காளிதேவி என்ற மூர்த்திகளை இல்லறத்தார் வைத்து வணங்கலாம். பிழையில்லை. சர்க்கரை மிட்டாய் விற்பவன் கத்திரிக்காய் வடிவிலும், பாகற்காய் வடிவிலும், கரும்பு வடிவிலும், மிளகாய் வடிவிலும் செய்து விற்பான்.

கரும்பு மிட்டாய் இனிக்கும், பாகற்காய் மிட்டாய் கசக்கும், மிளகாய் மிட்டாய் உறைக்குமே என்று கருதலாமா? எல்லாம் சர்க்கரை தானே ! வடிவில் தானே வேறுபாடு?

அது போல காளி, மகிஷாசுரமர்த்தினி என்ற வடிவங்கள் அம்பிகை எடுத்துக் கொண்ட மிளகாய் மிட்டாய் வடிவம். அவள் கருணாம்பிகை. ஆதலால் வீட்டில் வைத்து வழிபடுவதால் குறைவு உண்டாகாது.

★★★ **ப.சிவானந்தம், சிதம்பரம்.**

கேள்வி : தெய்வங்கள் மக்களைக் காப்பாற்றும் என்று கூறுகின்றார்கள். ஆனால் தெய்வங்களின் சிலைகளைத் திருடிக் கொண்டு சென்று விடுகின்றனர். அவ்வாறு தங்களையே காத்துக் கொள்ள முடியாத தெய்வங்கள் எவ்வாறு மக்களைக் காப்பாற்றும்?

பதில் : சிலைகளே கடவுள் அல்ல. மூர்த்தி வேறு, மூர்த்திமான் வேறு. மூர்த்தி என்பது சிலை. மூர்த்திமான் அந்தச் சிலையில் நாம் ஆவாகனம் செய்கின்ற தெய்வம்.

மின்சாரம் வேறு, மின்சாரபல்புகள் வேறு. பல்பில் ஷாக் அடிப்பதில்லை. ஆகவே பல்புகளைத் திருடுகிற போது ஏன் ஷாக் அடிப்பதில்லை என்று கேட்பது போலிருக்கிறது இந்த வினா.

சிலைகளைத் திருடுகின்றபோது ஆண்டவன் ஏன் அவனுக்குத் தண்டனை கொடுக்கவில்லை என்ற வினாவும் எழக்கூடும்.

கடவுள் கருணைக் கடல். தாய் திருடுகிற மகனுக்கும் உதவி செய்வது போல் கடவுள் கள்ளனுக்கும் கருணை காட்டுவார்.

''நல்லார்க்கும்,
பொல்லார்க்கும்
நடுவில் நின்ற நடு''

என்கின்றார் இராமலிங்க வள்ளலார்.

★★★ **பா. கமலா, மந்தைவெளி.**

கேள்வி : ஆண்டிக் கோலத்தில் காட்சி தரும் பழநிஆண்டவரின் திருவுருவப் படத்தை வீட்டில் வைத்து வழிபடக் கூடாது என்று பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. தங்கள் அபிப்ராயம் என்ன?

பதில் : பழநிஆண்டவன் ஆண்டியல்லன். பழனிப்பனுக்குச் சிகையுண்டு. அது ஞானஸ்கந்தர் வடிவமாகும். ஆதலால் பழநியாண்டவனை வீட்டில் வைத்து வழிபடலாம். ஒரு குறையும் வராது. எல்லா நலன்களும் உண்டாகும்.

★★★ அ.சுப்பிரமணி, ஆத்தூர்.

கேள்வி : கோயிலுக்குச் சென்று தான் கடவுளை வணங்க வேண்டுமா?

பதில் : இருந்த இடத்திலேயே இறைவனை வணங்கலாம். ஆனால் ஞானிகளால் நிறுவப் பட்ட ஆலயங்களில் வழிபடுவதற்குப் பயன் அதிகம்.

பசுவின் உடம்பு முழுவதும் பால் நிறைந்து பரவியிருக்கிறது. பாலைப் பெற விரும்புகிறவன் கொம்பையோ, வாலையோ பிடித்திழுத்தால் பால் கிடைப்பதில்லை. மடியை வருடினால் தான் பால் கிடைக்கிறது. அது போல் ஆலயத்திலுள்ள தெய்வத் திருவுருவங்கள் பசுவின் மடி போன்றவை. அங்கே சென்று உள்ளம் உருகி வழிபடுகின்றவர்கள் தெய்வத் திருவருளாகிய பாலைப் பெறுகின்றனர்.

★★★ வி.சரோஜினி, சேலம்.

கேள்வி : இறைவனைத் தினசரி வணங்கும் பொழுது நமக்கு வேண்டியதை நல்குமாறு வேண்டுவது தவறா? தவறு என்றால் ஏன்?

பதில் : இறைவனை வழிபடும் போது நமக்கு வேண்டியதைத் தருமாறு பிரார்த்திப்பது பிழையன்று. அது குழந்தை தந்தையிடம் கேட்பது போலாகும். ஆனால் மேல் நிலையில் இது நின்று விடும்.

''கூடும் அன்பினில் கும்பிடவே அன்றி

வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''

என்ற பெரிய புராணத் திருவாக்கின்படி ஒன்றனையும் விரும்பாத நிஷ்காம்ய பக்தி உண்டாகும்.

★★★ சுசீலா, திருவல்லிக்கேணி.

கேள்வி : ''வங்கக் கடல் கடைந்த மாதவனை'' என்று ஆண்டாள் பாடுகின்றாரே ! நமது வங்காள விரிகுடாவைக் கடைந்தா அமிர்தம் எடுத்தனர்?

பதில் : வங்கம் என்பது கப்பல்.

கப்பல்கள் ஓடுகின்ற கடல் என்பது அதற்குப் பொருள். திருமால் கடைந்தது பாற்கடல்.

அங்கே எம்பெருமானது திருவடி வங்கமாக-கப்பலாக நின்று அடியவர்களைப் பிறவிக் கடலைக் கடக்கச் செய்கின்றது.

ஆதலால் வங்கக்கடல் என்றான் ஆண்டாள்.

★★★ திருவேங்கடம், திருச்சி.

கேள்வி : நான் பார்த்த அளவில் பாவம் செய்கின்றவர்கள்தான் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிகிறது. பாவம் செய்கிறவர்கள் மகிழ்ச்சியாக இருப்பது போல், செய்யாதவர்களால் ஏன் இருக்க முடிவதில்லை?

பதில் : பாவமும் புண்ணியமும் செய்கின்றவர்கட்கு உடனே பயன் தரமாட்டா. விதையிட்டுப் பயிர் செய்தால் அவை காலத்தில்தானே பயன் தரும். அது போல், இப்போது பாவம் புரிபவர் மகிழ்ச்சியாக இருப்பது அவர்கள் முன் செய்த நல்வினை காரணமாகும். ஆதலால் செய்கின்ற அன்றே சுகதுக்கங்களை எதிர்பார்ப்பது சரியன்று.


★★★ குமாரசாமி, மதுரை.

கேள்வி : தாங்கள் மலையாளியா? அல்லது தமிழரா? மலையாளத்தில் தானே ''வாரியார்'' என்ற பெயர் கொண்டவர்கள் அதிகம்?

பதில் : நான் தமிழன்தான் ! சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவன். என் பிதா சிறந்த தமிழ்ப் புலவர். சுவாதி நட்சத்திர எழுத்துக்கள் ரு, ரெ, ரொ, த,. கிருபானந்தவாரி என்று பெயர் சூட்டினார்.

மலையாளத்தில் இருப்பவர் வாரியர் எனப் பெறுவார். அது குலப் பெயர்.

## நூல் மதிப்புரை




நூல் பெயர் - முத்தமிழ் வித்தகர் முப்பத்து மூவர்

நூலாசிரியர் - சுடர்மணிக்கவிஞர் வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள்

வெளியீடு - சுடர்மணி பதிப்பகம்
19, பஜனைக் கோயில் தெரு,
சூளைமேடு, சென்னை - 94.

விலை - ரூ. 35.

பக்கங்கள் - 128

அருளரசு டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ''வேலை வணங்குவதே வேலை'' என வாழ்ந்து நம் தமிழ்கூறு நல்லுலகம் உய்ய வந்த 64வது நாயனார்தம் விரிவான வாழ்க்கைச் சிறப்புக்களை இந்நூல் அருமையாக விளக்குகின்றது.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, மறைமலை அடிகள், ரா.இராகவையங்கார், ஞானியாரடிகள் முதலாகத் தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர் வரலாறுகளும் சுருக்கமான முறையில் தொகுத்துக் கூறும் இந்நூல் யாவரும் படித்துப் பயன் பெற வேண்டிய பயனுள்ள நூலாகும்.





# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

''வேயின் எழுங் கனல்போலே இம்மெய்யெனுங்
கோயிலிருந்து குடிகொண்ட கோன் நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்
தோயமதாய் எழுஞ் சூரியனாமே''

*(திருமந்திரம் 116)*

இறைவன் உடலை இடமாகக் கொள்கிறான். உயிருக்கு உயிராக இருக்கின்றான் என்று அருளாளர்கள் நமக்குச் சொல்வது அவர்களுடைய உணர்வு நிலை அனுபவத்தையே யாகும். திருவருட்சக்தியினால் இந்த விளக்கம் கிடைக்கப்பெறுகிறது.

இத்தகைய பேறு தனக்குக் கிடைத்ததைப் பற்றி எண்ணி எண்ணி வியப்படைகின்றார் மாணிக்கவாசகப் பெருமான். திருவருள் பெற்றவுடனேயே, பெருமான், தன்னை, தனது உடலை, உடமையை, ஆவியை இறைவனுக்குப் பரிபூர்ணமாக அர்ப்பணித்து விடுகின்றார். அன்றே அவர் இறைவனுக்கு ஆளானார். அன்றே இறைவன் அவர் உள்ளத்தில் புகுந்து கொண்டான். அவன் என்றுமே அங்கே இருப்பவன்தான். ஆனால், அன்று தான் மணிவாசகர் திருவருள் துணையோடு, இதை அறிந்து கொள்கிறார். ''நானோ நாயிலும் கடையவன். நீயோ எல்லாவற்றிற்கும் மேலானவன். என்னை நான் உனக்குத் தந்து விடுவது ஒரு சிறிய காரியம். நீயோ, உன்னையே எனக்குத் தந்து விட்டாயே? இந்த வாணிபத்தில் யார் சாமார்த்தியசாலி ! நீயா, நானா?'' என்று கேட்டு மகிழ்ந்து கொள்கிறார். நிகரற்ற இன்பத்தை இறைவன் அவருக்குக் கொடுத்தான். அவரிடமிருந்து இறைவனுக்கு என்ன கிடைத்திருக்கும்?. இவ்வாறு, தன்னை இறைவன் ஆட்கொண்ட முறையைக் கண்டு நெகிழ்கின்றார் மணிவாசகப் பெருமான். இதற்குக் கைம்மாறாக ஒன்றைச்செய்ய முடியுமா?

''தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீபெற்றதொன்றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே''

*(திருவாசகம் - கோயில் திருப்பதிகம்)*

அவ்வாறு உடலிடம்கொண்ட சிவபெருமான் செய்யும் பணி யாது? மும்மலம் மாற்றுவதே அவன் பணி என்பது அருளாளர்களின் வாக்கு.

ஆணவம், கன்மம், மாயை என்பவை மும்மலங்கள். ஆணவத்தின் வலிமையைக் குறைப்பதற்கும், உயிர் வினைப்பயன்களை அனுபவித்து, அவற்றிலிருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொள்வதற்கும், மாயையாகிய பொருள்களைச் சடம்என்று உணர்ந்து கொள்வதற்கும் திருவருள் துணை புரிகிறது; வழிவகை செய்கிறது.

இறைவன் இதற்காக படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் இதற்காக நடத்துகிறான். அதுவே அவனுடைய திருவிளையாடல். இந்த விளையாட்டு நிகழும் இடம் சடமாகிய மாயையின் பொருள்கள். இவற்றைத் தனு, கரண, புவன, போகம் என்பார்கள். உடலும் அதன் கருவிகளும் இதில் அடங்கியிருக்கின்றன.

இந்த விளையாட்டின் நோக்கம் என்ன?

உடலோடு சேர்ந்திருப்பது உயிர். உடல் வழியாக வினைப்பயன்களை அனுபவித்துத் தீர்க்கின்றது. உடல் ஒரு சடப் பொருள். அசித்துப் பொருள். உயிரோ சித்துப் பொருள். அறிவுப் பொருள். தான் ஒரு அறிவுப்பொருள் என்றும்,



### விபூதி திருமண்ணின் மகிமை

மண்ணை இட்டுக் கொள்வதும், திருநீற்றை இட்டுக் கொள்வதும் நமக்கு உயர்ந்த தத்துவத்தையே விளக்குகின்றன. மன்னனும் மாசறக் கற்றோனும் பிடி சாம்பலாகி விடுகிறார்கள். நாம் கடைசியில் சாம்பலாகத் தான் போகிறோம். இந்த வாழ்க்கை மாயமானது என்பதை விபூதி உணர்த்துகிறது. மண்ணிலே பிறந்த நாம், மண்ணிலேதான் மடிய போகிறோம். மண்ணிலே பிறந்த மரம் கடைசியில் மட்கி அதே மண்ணோடு மண்ணாகத்தானே ஆகிறது? நம்மை முடிவில் அடக்கிக் கொள்ளப் போகிற தத்துவம் அதுதான். இதை ஞாபகப்படுத்திக் கொள்ளவே, நம்மில் சிலர் திருமண் அணிகிறோம்.

உடல் ஒருசடப் பொருள் என்றும், உயிர் தெரிந்து கொள்வதில்லை. ஏன், தான் ஒரு அறிவுப் பொருள் என்றும் உயிரால் தெரிந்து கொள்ள இயலவில்லை.

உயிருக்கு அது ஒரு அறிவுப் பொருள் என்று அறிவித்து, இவை சித்து, இவை சடம் என்று உயிரைத் தெளிவுபடுத்தி, அவ்வழியே, உயிரைத் தூய்மை அடையச் செய்து, மும்மலங்களைத் துடைப்பதே இறைவனின் திருவிளையாடலின் நோக்கமாகும்என்கிறார் திருமூலர். இதுகாறும் மறைந்து பணியாற்றிய திரோதன சக்தி, அருட் சக்தியாக மாறுகிறது. மாறி, படிப்படியாக, உயிரை மேலும் பக்குவப்படுத்தி, மெய்யுணர்வைத் தந்து, மெய்ப்பொருளை அடைவிக்கச் செய்வதும் இறைவனேயாகும்.

உயிர் சடமாகிய உடலோடு சேர்ந்திருக்கும் போது நடப்பது முத்தொழில். உயிரைக் கடவுள் உணர்விலிருந்து பிரித்து, மெய்யுணர்வுக்கு அழைத்துச் செல்வது திரோதனம் என்னும் மறைத்தலும் அருளலும் ஆகும். ஒரு மந்திரத்தில் இத்துணையும் தெளிவாக்குகின்றார் திருமூலர் பெருமான்.

''அத்தன் அருளின் விளையாட்டிடம் சடம்
சித்தோடசித்துத் தெளிவித்துச் சீவனைச்
சுத்தலுமாக்கித் துடைத்து மலங்களைச்
சத்துடன் ஐங்கருமத்திருத்தும்தன்மையே''

*(திருமந்திரம் 2062)*

''மும்மலம் மாற்றி'' என்கிறார் திருமலர். மாற்றுதல் என்ற சொல், வேறுபடுத்துதல், கெடுத்தல், ஒடுக்குதல், ஒழிதல் என்ற பொருள்களைத் தரும். உயிரும், மலங்களும் ஒன்றையொன்று பற்றிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் இறைவன் உயிரைமலங்களிலிருந்து வேறுபடுத்துகிறார். ஆணவமோ, மூலகன்மம் என்கிற தன்மையோ, மாயையோ, ஒழிந்து விடவில்லை. ஆனால் இறைவன் திருவருள் பெற்ற உயிரைப் பொறுத்தவரை அவற்றின் ஆதிக்கம் கெடுகிறது.

ஆணவ இருள் மறைய, உள்ளத்தில் தன்னைப் பற்றியும், உலகத்தைப் பற்றியும், இறைவனைப் பற்றியும் தோன்றும் விளக்கம் ஒளிமயமான உணர்வை உண்டாக்குகிறது. அனுபூதிமான்கள் அந்த ஒளியை இறை ஒளியே ஆகும் என்று நமக்குச் சொல்லுகின்றனர். இறைவன் சூரியனாக வெளிப்பட்டு வருகிறான் என்பார் திருமூலர்.

''சுடர் விட்டுளன்'' என்றார் திருஞானசம்பந்தர். ''காதலால் காண்பார்கட்கு சோதியாய் தம்முளே தோன்றுமே'' என்கிறார் காரைக்கால் அம்மையார்.

''சோதியே, சுடரே, சூழொளி விளக்கே'' என்கிறார் மாணிக்கவாசகர். ''என்னுள் எழும் பரஞ்சோதி'' என்றும் சொல்லி மகிழ்வார். அதைக் காண வேண்டி, இறை அருள் நாடுகிறார்.

''மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்த அமுதே
ஊறி நின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காண வந்தருள்வாய்''.

*(திருவாசகம் - கோயில் திருப்பதிகம்)*

காணும் ஆற்றல் உயிருக்கே உண்டு. மலம் நீங்கித் தூய்மை பெற்ற உயிர் இந்த அனுபவத்தைப் பெறுகிறது. மலம் நீங்கி, தூய்மை பெற்ற உயிரே தன்னொளி பெற்று விளங்குகிறது. அப்போது, தன்னுள் இருக்கும் சோதியைக் காணும் வாய்ப்பைப் பெறுகிறது. பேரறிவில் அறிவு சேர்ந்து கொள்வது தான் அறிவின் தன்மையாகும்.

''சுத்த வெளியில் சுடரிற் சுடர் சேரும்'' என்பார் திருமூலர்.

திருவருள், உயிரின் மலத்தை நீக்க, தூய்மைப்படுத்த துணை புரிகிறது. ஆணவத்தில் அறியாமையாகிய இருளால் முடுக்கி வைக்கப்பட்டிருந்த உயிரானது விடுதலை பெறுகிறது. அப்போது, உள்ளத்தில் பரம் பொருள் கதிரவனைப் போல் நின்ற தன்மையை உணர்வு நிலையில் கண்டு அனுபவிக்கின்றார் மாணிக்க வாசகர். அது வாக்கும், மனமும் கடந்த இறை உணர்வுநிலை, அப்போது பரம்பொருளின் துணையன்றி, எந்தப் பொருளும் தனித்து நிற்க இயலாது என்கிற விளக்கமும் தோன்றுகிறது.

''இன்றெனக் கருளி இருள் கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை''

*(திருவாசகம் - கோயில் திருப்பதிகம்)*

அங்கே, பரம்பொருள் பேரறிவுப் பிழம்பாக மட்டும் தோன்றவில்லை. அவனுடைய பெருங்கருணை வெளிப்படுகிறது. கருணை வெள்ளமாக நின்று, இறைவன் உயிர்களுக்கு இன்பம் ஊட்டுகிறான். ''தயா என்னும் தோயம்'' என்கிறார் திருமூலர்.

இறைவன் உள்நின்று உணரப்பட வேண்டிய சோதி. அந்த சோதி உலகத்தை இயக்கும்போது அருள். அந்த அருளின் வெளிப்பாடு, எண்ணற்ற ஜீவராசிகளின் துன்பங்களைக் களைந்து, ஞானம் புகட்டி, இன்பம் துய்க்க வழி செய்யும் தனிப் பெரும் கருணை. வள்ளலார் இதை உணர்ந்து ''அருட்பெருஞ்சோதி, தனிப் பெருங்கருணை'' என்றார்.

திருநாவுக்கரசர் பெருமான், பல்லவ மன்னனாலும் சமணர்களாலும், கொடுமைகள் பல இழைக்கப்பட்டு, இறைவனுடைய பெருங்கருணையையே நினைந்து துன்பங்களை இன்பமாகக் கண்ட அருளாளர். இறைவன் பெருங்கருணையாளன் என்பது அவருக்கு அனுபவ பூர்வமான உண்மை. இறைவன் தயவை மூலதன்மமாகக் கொண்டவர் என்கிறார். தயையாகிய தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நயம் கொடுக்கும் நம்பி என்கிறார்.

''சலங்கெடுத்து தயா மூலதன்ம மென்னுந்
தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க்
கெல்லாம்
நலங் கொடுக்கும் நம்பி நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே''

(திருநாவுக்கரசர் - திருநள்ளாறு திருத்தாண்டகம்)

இதில் தாயை விடச் சிறந்தவன் என்கிறார் திருமூலர்.

தாயினும் நல்லன்தாழ்சடையோனே'' என்பதும் திருமூலர் வாக்கு.

''பால் நினைந்தூட்டுத்தாயினுஞ் சாலப்பரிந்து'' என்கிறார் மணிவாசகப் பெருமான்.

ஒருவருடைய வாழ்க்கையில் தாயினுடைய இடம் விலை மதிக்க முடியாதது. தாய்மை அன்பின் வெளிப்பாடு. தான் பெற்ற உயிரைப் பேணிக் காப்பது என்பது மட்டும் அவளுடைய பணியல்ல. அது அடிப்படைப் பொறுப்பு. ஆனால், நல்ல தாய் அதோடு நிற்பதில்லை. பெற்ற பிறவியில் உயிர் பக்குவமடைவதற்கு வித்திடுகிறாள். மலங்களைத் தீர்க்க வேண்டி குருவாய் தோன்றுவாள். அதற்கான துவக்கப்பணிகளைத் தானே மேற்கொள்பவள் பக்குவம் அடைந்த தாய். நற்றாயின் கைகளால் பண்படுத்தப்பட்ட உயிர், தாயை இறைவியாகக் கொள்கிறது. அப்பற்றே இறைவனைத் தாயாகவும்கொள்கிறது.

''ஈன்றாளும் ஆயெனக்கெந்தையுமாயுடன் தோன்றினராய்'' என்று புகழ்ந்து பாடினார் திருநாவுக்கரசர்.

''அபபன்நீஅம்மைநீஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ''
என்றும் சொல்வார்.

பிறப்பின் வழி தோன்றும் உறவுகளின் தன்மை மாறி எல்லாப் பிறப்புகளுக்கும் மூலகாரணனான பரம்பொருளோடு இணையும் போதும், உறவுகள் பேசப்படுகின்றன. அதற்கு அடிப்படையாக உள்ள உணர்வு அம்மை அப்பரே. உலகுக்கு அம்மை அப்பர் என்பதும், இறைவனும் இறைவியும் இன்றி பிற உறவுகள் தோன்ற இடமே இல்லை என்பது மாகும்.

''ஆகவே உலகத் தாயும், தந்தையுமாகிய சிவனிடமும் சக்தியிடமும் அன்பை நாடினேன். அவர்கள் என்மீது அன்பு காட்ட வேண்டும். கருணை வைக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் நான் பிறப்பதற்கு காரணமாக இருந்த தாயும், தந்தையும் என்ன செய்ய முடியும்! அம்மையப்பரே உண்மைத் தாயும், தந்தையும் ஆவர். நான் முயன்று, அவர்களோடு ஒன்றியிருந்தேன். அவர்களையே விரும்பி அவர்களிடம் நீங்காத, முடிவான அன்பு உடையவனாக இருந்தேன்''. இது திருமூலரின் தெளிந்த நிலை.

''அம்மையும் அத்தனும் அன்புற்றல்லது
அம்மையும் அத்தனும் ஆரறிவார் என்னை
அம்மை யொடத்தனும் யானும் உடனிருந்
தம்மையொடித்தனை யான் புரிந்தேனே''

(திருமந்திரம் 1254)

(தொடரும்)

**உல்லாசமாக உலகைச் சுற்றலாம்**



ஓர் ஊருக்குப்
புதிதாக வருபவன் - தன்
பெட்டிப் படுக்கையை
விடுதியொன்றில்
பத்திரமாய்
வைத்துவிட்டுத்தான்
உல்லாசமாக
ஊர்சுற்றப் போவான் - தனது
உடைமைகள் பற்றி மன
உளைச்சல் அற்றவன் ஆவான்.
அவனைப் போல்
அர்ச்சுனா!
உன்னை என்னிடத்தில்
ஒப்படைத்துவிட்டு
உலக உருண்டைக்குள் நீ
எங்கும் சுற்று - கவலை
எட்டுணையும் அற்று.
- கவிஞர் வாலி ''பகவத் கீதை'' நூலில்

# வெற்றியைத்தரும் வீரபத்திரர் வழிபாடு

முனைவர் த.அமிர்தலிங்கம்

ஆணவம் கொண்ட தக்கனின் யாகத்தை அழிக்க சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவரே வீரபத்திரர்.

சிவபெருமான் தன் சடையின் ஒரு பகுதியைத் தரையில் அடிக்க வீரபத்திரர் தோன்றினார் என அபிதான சிந்தாமணி, செவ்வை சூடுவார் பாகவதம் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன.

சிவபெருமான் தன் அம்சமாக வீரபத்திரரைத் தோற்றுவித்தார் என்று காஞ்சிப்புராணம் கூறுகின்றது.

சிவபெருமான் ருத்ரதாண்டவம் ஆட, அவர் உடலிலிருந்து கொட்டிய வியர்வையிலிருந்து வீரபத்திரர் தோன்றியதாகக் கன்னட நூல்கள் கூறுகின்றன.

'தான் என்ற ஆணவத்துடன் சிவபெருமானை மதியாது அவரை அவமதிக்கும் நோக்கில், கங்கைக் கரையில் ''கனகலம்'' என்னும் இடத்தில் வேள்விச்சாலை அமைத்துத் தக்கன் வேள்வி நடத்தினான்.

இறைவனை அவமதித்தால் அவர்கள் பெறும் தண்டனை இன்னது என்பதை உணர்த்தும் வகையில் சிவபெருமான் தக்கனைத் தமது அம்சமாகத் தோற்றுவித்தார்.

தாட்சாயிணியும் தம்பங்கிற்குக் காளியைத் தோற்றுவித்தார்.

ஆயிரம் தலைகளுடன் வீரபத்திரர் தோன்றியதாக விஷ்ணு புராணமும் கூறுகின்றது.

இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் பத்துத்தலைகளுடனும், இருபது கைகளுடனும் பல்வேறு ஆயுதங்களைத் தாங்கி வீராவேசவடிவினராக உள்ள வீரபத்திரர் திருவுருவம் சில ஆலயங்களில் ஓவியங்களில் தீட்டப்பட்டுள்ளன.

ஆணவம் கொண்ட தக்கனின் தலையை அறுத்து வீரபத்திரர் வேள்வித் தீயில் இட்டு அவனை அழித்தொழித்தார்.



தக்கனின் யாகத்தில் கலந்து கொண்ட தேவர்கள் பலரும் தண்டனைக்கு ஆளாயினர்.

வீரபத்திரரை வழிபட்டால் நமக்கு வரக்கூடிய தீமையை, அக்கிரமத்தை, அட்டூழியத்தை அழித்து நம்மைக் காத்து நன்மையை நிலைநாட்டுவார் என்று மக்கள் உறுதியாக நம்புகின்றனர்.

வெற்றியை வேண்டுவோர் வீரபத்திரரை வழிபட்டு அவருக்கு ''வெற்றிலை மாலை'' சாற்ற வேண்டும்.

வெற்றியைத் தரும் இலையே வெற்றிலை, வெற்றிலை மாலை சாற்றி வீரபத்திரரை வழிபட வெற்றி உண்டாவது நிச்சயம்.

செங்கை மாவட்டம், சிங்கப்பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ள அனுமந்தபுரத்தில் அமைந்துள்ள வீரபத்திர சுவாமிக்கு 12800 வெற்றிலைகளைக் கொண்டு ஆடிப்பூரத்தில் ''வெற்றிலைப் படல்'' சாற்றி சிறப்பான வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது.

# உயிர் ஒளி

முனைவர். அ. அறிவொளி

இப்போது உலகம் முழுதும் யோகத்தைப் பற்றி நிறைய பேசுகிறார்கள்.

பள்ளி, கல்லூரி, காவல் துறை, ராணுவம், முதலிய துறைகளிலும்இதைப் பழக்கப்படுத்து கிறார்கள்.

விஞ்ஞானிகள் இதுபற்றி நாள்தோறும் ஆய்வு செய்கிறார்கள்.

மருத்துவர்கள் யோகாவின் நற்பயன்களை உடல் நலம் பேணுவதில் சோதித்து முடிவு செய்கிறார்கள்.

மன நலம் உடல் நலம் தருவது யோகாவின் அரிச்சுவடிப் பயன்களே தவிர முழுமையான சித்தியல்ல.

'ஹரப்பா மொகஞ்சதாரோ' எனும் சிந்து சமவெளியின் அகழ்வு ஆராய்ச்சியில் ஒரு சிற்பம் எடுத்துள்ளனர்.

இது ஐயாயிரம் ஆண்டுகட்கு முந்தியது. திராவிட நாகரிகமே இப்பகுதியில் இருந்தது என்று மேலை நாட்டினர் நிலை நாட்டியுள்ளனர்.

இங்கு அகழ்ந்த சிற்பத்தில் ஒரு மனிதன் பத்மாசனத்தில் இருந்து தியானம் செய்கிறான்.

அவனை வட்டமாகச் சுற்றிப் பல உயிர்களும் அண்டங்களும் உள்ளன.

யோகி ஒருவன் பிரபஞ்சத்தோடு தியானத்தால் தொடர்பு கொள்கிறான் என்பதே இதன் விளக்கம்.

ஐயமில்லாமல் யோகத்தில் மிகுந்து ஈடுபட்டவனுக்கு அவன் அமர்ந்திருக்கும் பூமியை விட ஆகாயமே அருகில் உள்ளது என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

''ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து''

என்பதே திருக்குறள்.



யோகத்தால் மனநலம், உடல் நலம் பெறுவது முதல் கட்டப் பயன் மட்டும் தான்.



வேற்று உலக ஆய்வும் பிரபஞ்சப் பயணமும் - கடவுளை அடைதலும் - பெருவாழ்வு வாழ்தலும் யோகாவின் சிறந்த பலன்கள் ஆகும்.

1925 ஆம் ஆண்டு 'சிந்து சமவெளி' அகழ்வு ஆராய்ச்சி உலகிற்கு வெளியிடப்பட்டது.

ஆனால் எண்பத்தோராண்டுகளாக யோகத்தை அதன் தொடக்கப் பயன்களாக மட்டுமே கண்டு வருகிறது உலகம்.

மெய்ஞ்ஞானம் கடவுள் நிலை அடைதல் முதலிய ஆன்மீகப் பயன்களில் இந்த அறிவியல் உலகிற்கு நம்பிக்கை இல்லை.

ஆகவே யோகத்தின் சிறந்த பயன்கள் பற்றிக் கவலைப்படவுமில்லை, ஆய்வு மேற்கொள்ளவுமில்லை. மிகப் பழங்காலம் தொடங்கிப் போலிச் சாமியார்கள் இருந்து வருவதை திருக்குறள் முதலிய பழங்கால நூல்கள் மூலம் அறியலாம்.

இக்காலத்தில் போலிச் சாமியார்கள் பணம் பறிக்கவும், புகழ் பெறவும் ஆசைப்பட்டு ஆன்மீக நடவடிக்கைகளில் மிகுதியாக ஈடுபட்டுள்ளனர்.

அவர்களைப் போலவே யோகத்தைச் சொல்லித் தருவதாக நிறைய பேர் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் பரவி உள்ளார்கள்.

இவர்களின் நடவடிக்கையால் யோகத்தின் பெரும்பயனை நடுநிலையாளர்களும் நம்ப முடியாது உள்ளனர்.

சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம். அதில் உள்ள யோக வடிவம் அர்த்தசாஸ்திரத்துக்கு உரியது. யோகத்தைப் பற்றிய முதல் ஆசிரியராக விளங்கும் பதஞ்சலி முனிவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்.

சிதம்பரத்தில் நடராசர் ஆடல் கண்டவர்களில் பதஞ்சலியும் ஒருவர். அவரும் திருமூலரும் ஒரு சாலை மாணாக்கர் எனப்படுகின்றனர்.

இவர்கள் கூறிய அட்டாங்க யோகம் என்பது மிகவும் சிக்கலானது.

ஆழ்ந்த உணர்வுகளுக்கும் குரு முகமான பயிற்சிக்கும் உரியது.

முறையாக அவற்றைப் பயின்றால் பெரிய பயன் உண்டாகும். ஆகவே எளிதான ஒரு யோகப்பயிற்சியை அணுகுவதே இக்கட்டுரை யாக்கம்.

ஒளி என்பது பிரபஞ்சம் முழுதும் உள்ள ஒரு தனிப் பொருள்.

சூரிய ஒளி நட்சத்திர ஒளி முதலியவை இயற்கையானவை.

இயற்கையான இந்த ஒளிகளுக்கு ஆதாரமாக ஓர் ஒளி இருக்கத் தான் வேண்டும். அந்த பேரொளியைத்தான் 'சிவம்' என்று கூறுவார்கள். பிரம்மம் என்று வேதம் கூறுவதும் இதுவே. இந்த இயற்கை ஒளிக்கு ஆதாரமான தெய்வ ஒளி நமக்குள்ளும் உள்ளது.

இதை ஞானிகள் உணர்ந்தனர்.

நமக்குள்ளும் இந்த ஒளி இருப்பதால் கடவுள் அந்த ஒளிமயமாக நமக்குள் இருப்பதாகப் பெரியோர் கூறுகிறார்கள்.

யோகத்தில் முழுமையான முயற்சிகளில் ஒன்று, நமக்குள் உள்ள ஓர் ஒளியைக் காண்பது ஆகும்.

கட்டை விரல்களால் இருகாதுத் துளைகளைச் சாத்தி - சுட்டுவிரல்களால் கண்ணிமைகளை மூடி - நடு விரல்களால் இரு மூக்குத் துவாரத்தையும் அடைத்து- மீதமுள்ள விரல்களால் வாயையும் பொத்தி விட்டால், நமக்குள் இருள் இருப்பதை உணரலாம்.

இருளை அறிந்தபிறகே ஒளியை உணர முடியும்.

இருட்டறையில் கண்களை மூடி இருங்கள். சிறிது நேரம் சென்று மின்சார விளக்கை ஏற்றி விடுங்கள். இப்போதும் உங்கள் கண்கள் திறவாமல்தான் இருக்கும்.

ஆனால் விளக்கு எரிவதால் உடல்களின் மூடிய இமைகளில் ஒளி ஊடுருவிச் செல்லும். முன்பு கடுமையான இருட்டைப் பார்த்த நீங்கள் இருட்டிற்கும் ஒளிக்கும் இடைப்பட்ட ஓர் உணர்வை அனுபவிப்பீர்கள்.

இருட்டு என்ற சல்லடைக் கண்களில் ஒளி என்ற பொருள் நுழைந்திட முயல்வதை உணர்வீர்கள்.

இப்படிப் பத்து முறை மாறி மாறி இருளும் ஒளியுமாக உணர்ந்தால் உங்கள் உள்ளத்திலேயே மாறாத ஓர் ஒளிச்சிதறலை நீங்கள் உணரலாம்.

இந்த நினைவைக் கற்பனை செய்யுங்கள். இப்படி ஓர் ஒளித்துகள் உங்கள் உண்ணாக்கு நடுவில் உள்ள துளை வழியாக மண்டைக்குள் போவதாகக் கற்பனை செய்யுங்கள்.

இது உள்முகம் எனப்படும்.

பிறகு கண் இரண்டிற்குற்பட்ட நடுப் பகுதிக்கும், அதன் கீழே மூக்குப்பகுதிக்கும் இறங்குவதையும் கண்டு உணருங்கள்.

இருகாதுத்துளைகள் வழியாக முன்புபோல் ஓர் ஒளித்துகள் இருபக்கமும் ஊடுருவி மையத்திற்கு வருவதாக நினையுங்கள்.

காது, கண், மூக்கு மூன்றும் சேரும் ஒரு குழி இது. இதை யோகிகள் திரிவேணி சங்கமம் என்று பரியாயமாக அழைப்பார்கள்.

உண்ணாக்கு வழி, காது வழி இரண்டிலும் நுழைந்த ஒளித்துகள் இந்த மையத்தில் பரவும் ஓர் மேல் நோக்கிய முக்கோணமாக உயரும்.

இதைக் காலை அல்லது மாலைச் சூரியனின் சிவந்த நிறமாகக் காணுங்கள்.

முதல் நாள் பயிற்சியிலேயே இவை வந்து விட முடியாது.

அகல் விளக்கு, குத்து விளக்கு, கோயில் தீபாராதனை இவைகளைப் பார்க்கும் போது இந்த யோக முயற்சியையும் நினைத்துக் கொள்ளுங்கள்.

கடவுளாகிய ஒளி தீபாராதனை வழியாக நம் திரிவேணி சங்கமத்தில் இணைவதாக அடிக்கடி நினையுங்கள்.

இப்படி நினைத்துப் பழகப் பழக ஒருநாள் உள் ஒளியை உங்களுக்குள் நீங்கள் உறுதியாகப் பார்ப்பீர்கள்.

இதை அடிக்கடிக் கண்டு படி நிலையில் அட்டாங்க யோகத்தைப் பழகினால் பலன் உண்டாகும்.

## மலைக்கோயிலும் மனக்கோயிலும்



கருணாமூர்த்தியான முருகப்பெருமான் தன்மனமும் ஒரு கல் என்பதால், குன்றைவிரும்பும் குகன் தன் மனத்தையும் விரும்பிக் கோயில் கொண்டான் என நயம்படக் கூறுகின்றார் சிவப்பிரகாசசுவாமிகள்.

''ஒரு பெருங் கருணைமூர்த்தி களிமகிழ்
சிறந்து தான் வாழ் கற்களில் ஒரு கல் என்றோ
அளிய என் மனத்தினுள்ளும்
அகன்றிலன் இருக்குமன்றோ''

-திருக்காளத்திப் புராணம்



# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை 'போகர்'

முனைவர்.இரா.செல்வக்கணபதி

**ம**னவழிபாடு

சித்தத்தைச் சிவன் பால் வைத்து வாழ்ந்த ஞானிகளைப் பொதுவாகச் சித்தர்கள் என்பது மரபு. 'சித்தம் போக்குச் சிவம் போக்கு' என்பது பழமொழி. சடங்குகளுக்கு முதன்மை தாராது மனவழிபாட்டை இவர்கள் வற்புறுத்தினர்.

சித்தர் உலகம் பெரியது, நவநாத சித்தர்கள், பதினெண்சித்தர்கள் என்ற தொகைக் குறியீடுகள் முறைமைப்படுத்தப்பட்டதன்று. தமிழ் நாட்டில் ஆயிரம் ஆயிரம் சித்தர்கள் வாழ்ந்து மறைந்தனர். இன்றும் நம் கண்ணுக்கும் கருத்துக்கும் வாராத சித்தர் பலர் நம்மிடையே வாழ்ந்தும் வருகின்றனர். சித்தர் உலகம் தனித்தன்மை வாய்ந்தது. சித்தர்களை அடையாளம் கண்டுகொள்வதற்குச் சிவனருளும், தவமும், ஞானமும் கைவரப் பெறுதல் வேண்டும்.



பாரதியார் தாம் பாடிய 'பாரதி அறுபத்தாறு' என்ற தம் கவிதைத் தொகுப்பில்

''எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்''

என்று ஒரு பதிவை அமைத்துத் தன்னையும் ஒரு சித்தன் என்று கூறிக்கொள்கிறார்.

**போகர்**

தமிழ் நாட்டுச் சித்தர் பரம்பரையில் அகத்தியர், திருமூலர் முதலியோரைப் போன்று குறிக்கத்தக்க பெருஞ்சிறப்பும், தலைமையும் பெற்றிருந்தவர் போகர். இவரைப் பற்றிய வாழ்வியல் குறிப்புகள் நிறைய உள்ளன. இன்னது உண்மை, இன்னது பொய்மை என்று பிரித்தறிய இயலாத நிலை உள்ளது. கிடைத்திருக்கும் வரலாற்றுப் பதிவுகள் இங்கே முறைப்படுத்தி வழங்கப்படுகின்றன. உண்மை கண்டு தெளிதல் அறிஞர் கடனாகும்.

சித்தர் பரம்பரையில் குறிக்கத்தக்க ஒருவர் காலாங்கி நாதர். திருமூலரின் மாணாக்கர் எழுவருள் ஒருவர் இவர். இது பற்றிய பதிவு திருமந்திரத்தினும் உள்ளது. காலாங்கி நாதருக்கு மாணாக்கர் பலர். அவர்களுள் ஒருவராகப் போகர் குறிக்கப்படுகிறார்.

பல்வேறு நூல்களிலும் போகர் வாழ்வியல் குறித்த செய்திகள் பல காணப்படுகின்றன. அவற்றை இங்கே தொகுத்து வழங்குதல் போகரை அறியத்துணையாகும்.

**வரலாற்றில் பதிவுகள்**

தம் சித்தாடல் ஆற்றலால் ஏழு கடல்களையும் இவர் தாண்டிச் சென்று, செத்தாரைப் பிழைக்க வைக்கும் சஞ்சீவி மூலிகையைக் கண்டுபிடித்தார். அதை அவர் அகப்படுத்த முயலும் போது அம்மூலிகை இடம் விட்டு இடம் பெயர்ந்து இவர் கைக்குள் வசப்படாது போக்குக் காட்டியது. போகர் தாம் சிவனருளால் கற்றுத் தெளிந்திருந்த 'தம்பனா' மந்திரத்தை உச்சரித்துச் சஞ்சீவி மூலிகையை நிலைப்படுத்தித் தன்கைகளால் அவற்றைப் பற்றிக் கொண்டு வந்துள்ளார்.

ஒரு முறை போகர் இடம் விட்டு இடம் வான் வழி செல்லும் தன் ஆற்றலால் மேருமலையையும் கடந்து அப்பால் சென்று கிடைத்திற்கரிய தாது வகைகளைத் தமிழகத்துக்குக் கொண்டு வந்து நிலைப்படுத்தினார்.

**சிற்றுயிர்கள் பால் நேயம்**

தம்மை நாடி வந்தவர்களுக்கு உபதேசம் செய்து அன்னாரைத் திருவருள்பால் செலுத்துவது ஞானிகளின் இயல்பு. இச்சித்தர் பெருமகனார் மனித குலத்திற்கு மட்டுமல்லாது விலங்கினங்களுக்கும் ஞானத்தை உபதேசித்து அவற்றை நற்கதி அடைவித்தார் என்று ஒரு செய்தி அறிய வந்துள்ளது. கொடிய காட்டு விலங்குகளாகிய சிங்கமும்- புலியும் கூட இவரிடம் ஞானம் பெற்றுச் சிறந்தன. பூனை ஒன்றிற்கும் இப்பேறு வாய்த்தது.

சைவ சித்தாந்த சந்தானாசாரியர் நால்வருள் ஒருவர் தில்லை தீட்சிதர் மரபினரான உமாபதிசிவம். இவர் சிவபூசைசெய்யும்போது- அபிடேக நீர் சென்று விழும் இடத்தில் ஒரு முள்ளிச் செடி- அந்நீராதாரத்தால் வளர்ந்து வந்தது. அதன் மீது பரிவு கொண்டு உமாபதிசிவம் திருக்கண் பார்வை செலுத்தி அந்த முள்ளிச் செடிக்கும் முத்திப்பேறு அளித்தார் என்பது இங்கே நினைவு கூர்ந்து ஒப்பிடத்தக்கது.

சித்த மருத்துவத்தின் மூலப்பொருள்களுள் ஒன்று ரசம். இதற்கு மூலமாகத் திகழ்வது 'ஆதிரசம்' என்று கூறப்படும் ரசவாதம்- ரசவித்தை என்ற தொடர்கள் நம்நினைவுக்கு வரும். அத்தகு மூலமான ரசத்தை முதன்முதல் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்தவர் போகரே.

# கோயிலின் நிர்வாக அதிகாரி சண்டேஸ்வரர்



சோழர் ஆட்சியில் ஆலயச் சொத்துக்கள் சண்டேசர் பெயரால் வழங்கப்பட்டுக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ஆகவே கோயில் பொருட்களுக்குச் சண்டேசரே அதிகாரி ஆவார்.

**போகர் ஏழாயிரம்**

சிவமூர்த்தங்களுள் ஒன்று தென்முகக் கடவுள் என்று வழங்கப்படும் மூர்த்தம். இதனைத் தட்சிணாமூர்த்தி என்று வழங்குவது பெரு வழக்கு. ஒரு முறை சிவன் தட்சிணாமூர்த்தி வடிவில் எழுந்தருளியிருந்து, தம் திருவருள் சத்தியாகிய உமையம்மைக்கு ஞானத்தை ஏழுலட்சம் மந்திரங்களால் உபதேசித்து அருளினார்.

போகர் சிவன் உமைக்கு அருளிய ஏழுலட்சம் மந்திரங்களையும், தமிழ்ப்படுத்தி - ஏழு காண்டங்களாகப் பகுத்துத் தம் மாணாக்கர்களுக்கு உபதேசித்து வந்தார். சித்தர்கள் சிலர் சிவனிடம் சென்று, தாங்கள் உபதேசித்த மந்திரங்களைப் போகர் இவ்வாறு ஏழு காண்டங்களாக்கித் தம்மாணாக்கர்களுக்கு உபதேசித்து வருகிறார்! இது முறையா என்று திருச்செவி சாற்றி நின்றனர்.

சிவன் போகரைத் தவிர்த்து அவர் செய்த ஏழுகாண்டங்களைக் கூறுமாறு பணித்தார். போகரும் தம் நூலை விரித்துரைத்து வணங்கினார். அவற்றைச் செவிமடுத்துச் சிவன் மகிழ்வெய்தினார்.

குறைகூறிய இருடிகளையும், சித்தர்களையும் சிவன் அழைப்பித்து 'அவரவர் தத்தம் ஆற்றல்களால் புதுமை படைக்கும்போது - அதனை வரவேற்பதே முறை- போகர் முயற்சி பெரிது. இது பற்றி நீங்கள் கவலை கொள்வதில் நியாயம் இல்லை என்று அறிவுறுத்தி அனுப்பிவைத்தார். சிவன் செவிமடுத்து மகிழ்ந்த நூல் போகர் ஏழாயிரம் என்று வழங்கப் பெற்றது. முன்னர் குறைகூறிய சித்தர்களும், இருடிகளும் இதன் பின்னர் போகரிடம் போந்து குளிகைகள் பெற்றுச் செல்லலாயினர்.

போகர் செய்த 'தீட்சை' என்ற நூலை ஒருகால் சட்டைமுனி என்பார் கிழித்து எறிந்ததாக ஒரு செய்தி கேட்கப்படுகிறது.

**பழனி முருகன்**

போகரின் மாணாக்கர் பலர். அவருள் ஒருவர் புலிப்பாணி என்பவர். போகரும் புலிப்பாணியும் இன்றைய பழனி மலையின் அடிவாரத்தில் நெடுநாள் வாழ்ந்திருந்தனர். அவ்வூர் இன்று வைகாவூர் என்று வழங்கப்பட்டு வருவதாகக் கொங்கு மண்டல சதகம் என்ற நூலில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. பாண்டிய நாட்டில் உள்ள சதுரகிரி, சிவகிரி முதலிய ஊர்களிலும் போகர் சில காலம் வாழ்ந்திருந்ததைத் தெரிகிறது.

போகர் முருகனை உபாசனை மூர்த்தியாகக் கொண்டவர். நவபாடாணங்களால் பழனி தண்டாயுதபாணி திருமேனியை வடிவமைத்தவர் போகரே ஆவார். போகர் சிலை பழனியில் இன்றும் உள்ளது.

**போகர் நூல்கள்**

போகர் செய்த நூல்கள் பலவாகும். குறிக்கத்தக்கன சில. போகர் ஏழாயிரம், போகர் நிகண்டு, பதினேழாயிரம் சூத்திரங்களால் அமைந்த வேறு ஒரு நூல் போகர் யோகம் எழுநூறு.

போகர் முருகன் திருவருளால் சித்தி பெற்றவர்.

தஞ்சையில் சிவலிங்கப் பிரதிட்டையின் போது, அட்ட பந்தன மருந்து பதப்பட்டு வாராது போகவே, மன்னன் போகரிடம் விண்ணப்பித்தான். போகர் ஒரு காக்கையின் கழுத்தில் ஓலை ஒன்றைக் கட்டிவிட்டு அதனைக் கருவூர்த் தேவர்பால் சேர்ப்பிக்கச் செய்தார். கருவூர்த் தேவர் வந்து தஞ்சையில் மருந்து சாத்தினார் என்பது கருவூரார் வரலாற்றிலும் காணப்படுகின்றது.

**மாணாக்கர்கள்**

போகரின் மாணாக்கர் கொங்கணர், கருவூர்த்தேவர், சுந்தரானந்தர், மச்சமுனி, நந்தீசர், இடைக்காடர், கமலமுனி, சட்டைமுனி முதலியோராவர். இவரை அகத்தியர் மாணாக்கர் என்று ஆய்வாளர் சிலர் கூறுவர். இவர் காலாங்கி நாதர் மாணாக்கரே என்பது போகர் ஏழாயிரத்தால் உறுதியாகிறது.

போகர் நூல்கள் பற்றிய செய்திகளை அடுத்து வரும் இதழ்களில் பகிர்ந்து கொள்வோம்.

(தொடரும்)


**திருக்கோயில் திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ 1500/ |


(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.




## குறைதீர்க்கும் குணசீலன்
## மனக்கவலை தீர்க்கும் மாமருந்து
# ஸ்ரீ பிரஸன்ன வேங்கடாசலபதி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மறுநாள் மந்திரி பிரதனிகள் சூழ அரசர் பசுக்கள் மேயும் இடத்திற்கு வந்தார். யாதவர்கள் பயத்துடன் பாலைக்கறந்து குடங்களில் நிரப்பினார்கள். குடம் நிறைந்ததும் உடனே வெறும் குடங்கள் ஆயின. அரசரும் இதனைக் கண்டு திகைத்தார்.

அப்போது வயது முதிர்ந்த ஒரு பிராமணர் அங்கு வந்தார். எதிர்பாராது அங்கு வந்த அவரை அரசர் உபசரித்து நடந்த வரலாற்றை விளக்கினார்.

அதனை செவிகொடுத்துக்கேட்ட அந்த முதியவர், ''அரசே, உமக்கு நல்ல காலம் வரப்போகிறது. வைகுண்டவாசனாகிய எம்பெருமான் குணசீல மகரிஷியின் தவத்திற்காக பிரசன்ன வேங்கடவனாக உமது ஆளுகைக்குட்பட்ட இடத்தில் ஸ்வயம் மூர்த்தமாக எழுந்தருளியுள்ளார்.''

''அவர் இருக்கின்ற இடத்தில் ஒரு பெரிய புற்று வளர்ந்து விட்டது. புற்றுக்குள் எம்பெருமான் இருக்கிறார். அவர் செய்த மாயமே பால் குறைவு ஏற்படுவது''.

''அரண்மனைக்கு எடுத்துச் செல்லும் குடங்களில் பாலை நிரப்பாமல் மற்றக் குடங்களிலே பாலை நிரப்பி புற்றின் மீது குடம் குடமாகப் பாலை அபிஷேகம் செய், அப்பொழுது இந்த உண்மை தெரியும்'' என்றார் முதியவர்.

அந்தக்கணமே அரசன் யாதவர்களுக்கு உத்தரவிட்டார். தங்களுக்கு அரசரால் இனி ஆபத்து வராது என்று கருதியவர்கள் பசுக்களின் பாலைக் கறந்து குடம் குடமாகப் புற்றின் மீது அபிஷேகம் செய்தார்கள். புற்று மண்ணும் கரைந்தது.

புற்றின் நடுவில் தேவாதி தேவன், வைகுண்டவாசன், ஸ்ரீனிவாசன், பிரசன்ன வேங்கடேசன், அழகு என்று இருந்தால் அதன் எல்லை அவனேயாக, சங்கு, சக்கரம், சாட்டை தரித்தவனாக, மோகினியும் கண்டு மோகிக்கும் மோகனனாக, திருமகளை மார்பில் தரித்தவனாக, திவ்ய சொரூபனாக. ஞானவர்ம அரசனுக்குக் காட்சி தந்தார்.

மூர்த்தியின் சௌலப்யத்திலும் சௌசீல்யத்திலும் ஈடுபட்ட மன்னன் கனவில் பெருமாள் தோன்றி தான் இருந்த இடத்திலே தனக்கு ஒரு ஆலயம் அமைக்குமாறும், விகானஸர் என்னும் முனிவரால் கூறப்பட்ட வைகானஸ முறைப்படி தன்க்கு ஆராதனை நடத்திவருமாறும் தெரிவித்தார்.

கனவிலிருந்து விழித்தெழுந்த அரசன் பகவான் தான் கனவில் கூறியவற்றை நினைத்து நினைத்து மயிர்சிலிர்த்து ஆனந்தம் அடைந்தான். விடிந்ததும் ஆலயம் அமைக்க அரசன் ஆணையிட்டான். இரவு பகலாக ஆலயம் எழுப்பப்பட்டது. கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், பிரகாரம், மடப்பள்ளி முதலானவற்றை நிர்மாணம் செய்து முடித்தான்.

### குணசீல மகத்துவம்

எம்பெருமான் கட்டளையின்படி வைகானஸ பிராம்மணர்களை அழைத்து வந்து குடியமர்த்தி நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் மஹாசம்ரோக்ஷணமும் அரசர் ஞானவர்மா செய்து முடித்தார். அலங்காரப் பிரியனான ஸ்ரீனிவாசனுக்கு சகல ஆபரணாதிகளையும் செய்து அணிவித்து மகிழ்ந்தார். அர்ச்சகர்கள் பக்தி சிரத்தையோடு செய்யும் நித்ய பூஜா காலங்களில் ஆலயம் வந்து எம்பெருமானை வழிபட்டு வருவதை வழக்கமாகவும் கொண்டான் மன்னன் ஞானவர்மா.

குணசீலரின் தவமும்- ஞானவர்மாவின் பக்தியும் தமிழ் மக்களுக்கு ஒரு அற்புதமான பிரார்த்தனை ஸ்தலத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. குணம் சீலமானால் அங்கு ஞானம் தோன்றித்தானே ஆகவேண்டும் என்ற தத்துவம் இந்த வரலாற்றில் உண்மையாக்கப் பட்டிருக்கிறது.

ஒரு சனிக்கிழமை மன்னன் ஞானவர்மா தனியாக வந்து ஸ்ரீனிவாசனை உளம் நெகிழ்ந்து துதித்தான். அரசனின் உள்ளம் பரிபக்குவம் அடைந்ததை அறிந்த ஸ்ரீனிவாசன் குணசீலருக்கு பிரத்தியட்சம் ஆனது போன்று சர்வாபரண பூஷிதனாய், சௌந்தர்ய சீலனாய், பேசும் தெய்வமாய், பிரசன்னமாகும் தேவனாய் காட்சி தந்தார்.

எம்பெருமான் திவ்ய திருக்கோலத்தைக் கண்களால் கண்டு ஆனந்தப் பரவசமாகி எம்பெருமான் திவ்ய திருவடிகளிலே தனது முடியைத்தாழ்த்தி சரண் அடைந்தான் ஞானவர்மா.

''அரசே! உன்னுடைய பக்தியினால் நான் பிரசன்னமாகி இருக்கிறேன். எவனொருவன் என்னை சனிக்கிழமைகளில் பயபக்தியுடன் தரிசிக்கின்றானோ அவன் விரும்பிய பயனை

அடைவான்''.

''ஆணோ பெண்ணோ புத்திர லாபத்தை அடைய விரும்பி என் சன்னதியில் ஒரு மண்டலமோ, அரை மண்டலமோ, நியமத்துடன் உப்பில்லாமல் (கஞ்சி வடிக்காத அன்னத்தை) ஹவிஷ்யத்தை ஒருவேளை உண்டு, தங்கி வந்தால் அவர்களுக்கு புத்திரலாபம் முதலியன நிச்சயம் அளிக்கிறேன்''.

''சித்தப்பிரமையுடையவன் என் சந்நிதி வந்து முறைப்படி பக்தி செய்வானாகில் அவன் சித்தபிரமையைத் தீர்த்து வைக்கிறேன்''.

''திருமணத்திற்கு நல்ல கன்னிகை விரும்புபவன் என் சன்னதியில் தவமிருப்பின் நல்லவளும், அதிர்ஷ்டசாலியுமான கன்னிகையை நிச்சயம் அடைவான்''.

''ஊமையன் பேசுவான், கண் தெரியாதவர்களுக்குக் கண் தெரியும். தீராத வியாதிகள் தீரும். என்னை நம்பி வந்தவன் ஒருபோதும் துன்பமடையமாட்டான்''.

இவ்வாறு அருளிச் செய்து உலக மக்களுக்கு நல் உபாயங்களைக் காட்டி ஸ்ரீபிரன்ன வேங்கடேசன் காட்சியில் இருந்து மறைந்தார். இவ்வாறு அரசனுக்கு எம்பெருமான் திருவாக்கு அருளியதை அறிந்த பலபேர், ஸ்ரீபிரசன்ன வேங்கடேசப் பெருமான் சன்னதியில் பக்தி செய்து நற்பலனை பெற்றார்கள். தற்போதும் பெற்று வருகிறார்கள்.

திருப்பதி ஸ்தலத்தில் எம்பெருமான் காட்சி தருவது போன்றே குணசீலத்திலும் எம்பெருமான் காட்சி தருகிறார். தென் திருப்பதியென இத்தலம் போற்றப்படுகிறது.

திருப்பதிக்கு வேண்டுதல் செய்து கொண்டவர்கள் தங்கள் காணிக்கையை இங்கு செலுத்தி வேண்டுதலைப் பூர்த்தி செய்யலாம். இங்கு பிரார்த்தனை செய்து கொண்டவர்கள், வேறு இடங்களில் காணிக்கையைச் செலுத்த முடியாது. அப்படிச் செலுத்தினால், எம்பெருமான் தனக்கு வரவேண்டிய காணிக்கையை வசூலித்து விடுவார் என்று கர்ண பரம்பரையாகப் பேசப்பட்டு வருகிறது.

குணசீல க்ஷேத்திரம் மிகப் புனிதமான பிரார்த்தனைஸ்தலமாக விளங்குகின்றது.

எம்பெருமானுக்கு தினசரி அபிஷேகம் நடக்கும் திருத்தலம் இது. அலங்காரப் பிரியனான ஸ்ரீவேங்கடேசன் அபிஷேகப் பிரியனாகவும் விளங்கும் திருத்தலம் இது ஒன்றுதான்.

தீராத வினைகள் தீர்க்கும் தெய்வம் குடிகொண்ட திருக்கோயில் குணசீல க்ஷேத்திரமாகும். கலியுகத்தில் கண் கண்ட தெய்வம் ஸ்ரீவேங்கடேசனாக, வேண்டியவர்களுக்கு வேண்டியவர்கள் வேட்கை அறிந்து வேண்டிய வரங்களை அருளும் வேங்கடேசன் குணசீலத்தில் கொலுவமர்ந்து அருட்செங்கோலோச்சி வருகிறார்.

குணசீலத்தில் ஸ்ரீதேவிக்கு தனி சன்னதி யில்லை. அம்பிகையை தன் இருதய ஸ்தானத்தில் வைத்து இறைவன் சேவை சாதிக்கின்றார்.

எம்பெருமானைத் தரிசித்து வேண்டுதல் செய்வோருக்கு ஸ்ரீதேவியின் கிருபாகடாட்சமும் உடன் சேர்ந்து கிடைப்பது இத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.

குணசீல மகரிஷியின் கடுந்தவமும்-ஞானவர்மா அரசரின் பயபக்தியும், தமிழ் மக்களுக்கு ஒரு கற்பகத்தருவாக காமதேனுவாக குணசீல் க்ஷேத்திரம் திகழ்கின்றது.

சித்தம் தெளிவிக்கும் மருந்தாக, செய்த பிழையை நினைத்து வருந்துவோருக்கு அருமருந்தாக செய்வினைகள் தீர்க்கும் திருத்தலமாக, இறையருள் பாலிக்கும் திருக்கோயிலாக குணசீலம் ஸ்ரீபிரசன்ன வேங்கடேசப் பெருமாள் திருக்கோயில் விளங்குகின்றது.

எடுத்த பிறவி கடந்தேற, எம்பெருமாள் திருக்கண் திருநோக்குப் பெற, நேரம் ஒதுக்கி குணசீல க்ஷேத்திரத்திற்கு வந்து தரிசித்து ஆனந்தம் பெறும் பேற்றை அடையுங்கள். திருவரங்கத்திற்கு மேற்கே குணசீலத்தில் பெரிய பெருமாள் நின்றபடி சேவை சாதிக்கிறார். குடும்பத்தோடு வந்து தரிசித்து மகிழவாருங்கள்.

இத்திருக்கோயிலில் தினமும் ஐந்து கால பூஜைகளின்போது அருள்முக ஒளியுடன் ஸன்னதியில் ஸ்ரீபெருமாளை வேண்டி நிற்கும் சேவார்த்திகளின் முகத்தில் அபிஷேக ஆராதனை தீர்த்தத்தை முகத்தில் தெளிப்பார்கள். இந்தத் தீர்த்தம் முகத்தில் தெளிப்பதால் பல தோஷங்கள், பயந்த கோளாறுகள் பேய், பில்லி, சூன்யம் போன்ற சகலவிதமான உபத்திரவங்கள் நீங்கி நன்மை அடைந்து இருக்கிறார்கள்.


''தேடிக் கண்டுகொண்டேன் திருமால் வேங்கடவனாக குணசீல க்ஷேத்திரத்திலே திவ்யகொலு சாதிக்கின்றார்'' என்று தங்கள் சந்ததியினர்களுக்கு தாங்கள் வழிகாட்ட வேண்டாமா! வாருங்கள் குணசீலத்திற்கு வந்து எம்பெருமான் திருவருள் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு எல்லா நலத்துடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்.

## பஞ்சமுக ஆஞ்சநேயர்


ஸ்ரீ நாமக்கல் ஆஞ்சநேயர்

சிவபெருமானின் அம்சமான ஆஞ்சநேயருக்கும் ஐந்து முகங்கள் உண்டு. கிழக்குப் பக்கம் அனுமன் முகமும், மேற்கில் கருடனும், வடக்கில் வராக அவதாரமும், தெற்கில் நரசிம்மரும், மேல் நோக்கிக் குதிரைத்தலை ஹயக்ரீவர் முகமும் பஞ்சமுக ஆஞ்சநேயருக்கு அமைந்து விளங்குகின்றன.

# தென்திருப்பதி



காரைக்குடிக்கு அருகாக 4.கி.மீ. தொலைவில் இருப்பது அரியக்குடி

இங்கு புகழ்பெற்று விளங்கும் திருக்கோயில்தான் ''தென்திருப்பதி'' என வழங்கப்படும் திருவேங்கடமுடையான் திருக்கோயில் ஆகும்.

இவ்வூரில் வாழ்ந்திருந்த சேவுகன் செட்டியார் ஏழுமலையானின் தீவிர பக்தர்.

ஒவ்வொரு ஆண்டும் பக்தர்கள் செலுத்தும் காணிக்கையுடன் தன் காணிக்கையையும் உண்டியலில் செலுத்தி அதைத் திருப்பதி வெங்கடாசலபதிக்கு நடைப்பயணமாய்ச் சென்று சமர்ப்பிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சேவுகன் செட்டியாருக்கு முதுமை ஏற்பட்ட போதும் அவர்தம் வழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார்.

''திருப்பதிக்கு இனி ஏதேனும் வாகனத்தில் செல்லலாம்'' என உறவினர்கள் கூறியதை மறுத்துத் தம் தள்ளாத வயதிலும் தலைமேல் உண்டியலைச் சுமந்தபடி 500கி.மீ. நடந்து திருப்பதிக்கு வந்து சேர்ந்தார்.

திருப்பதி மலையேறத் தொடங்கியதும் மேற்கொண்டு மலையேற முடியாமல் கால்கள் தடுமாறி மயங்கி விழுந்தார் சேவுகன் செட்டியார். அப்போது வெங்கடாஜலபதி அவருக்குக் காட்சியளித்து, ''பக்தா! நீஇருக்கும் இடத்திற்கே நான் வருவேன். நீஊருக்குத் திரும்பிப்போ, உன் ஊரில் எந்த இடத்தில் நான்கு பக்கமும் முளை அடித்து நடுவில் உடைத்த தேங்காயும், குங்குமமும் இருக்கிறதோ அவ்விடத்தில் எனக்குக் கோயில்கட்டு'' என்று திருவருள் புரிந்தார்.

திருப்பதி வெங்கடாஜலபதியின் கட்டளைப்படி அரியக்குடி திரும்பிய சேவுகன் செட்டியார், இறைவன் சொன்ன அடையாள இடத்தைக் கண்டுபிடித்துக் கட்டிய அற்புத ஆலயம்தான். ''தென்திருப்பதி'' என வழங்கும் அரியக்குடி திருவேங்கடமுடையான் திருக்கோயில் ஆகும்.

திருப்பதிக்குச் செல்ல இயலாத பக்தர்கள் ''தென்திருப்பதி'' சென்று வழிபடலாம், காணிக்கை செலுத்தலாம்.

அரியக்குடி திருவேங்கடமுடையான் திருக்கோயிலைச் சேவுகன் செட்டியார் கட்டியபோது திருப்பதியிலிருந்து சடாரியும், திருவரங்கத்தில் இருந்து இராமானுஜரால் ஆராதிக்கப் பட்ட சிறப்பிற்குரிய நம்பெருமாள் விக்கிரகமும். திருமயத்திலிருந்து அக்கினியும் கொண்டு வரப்பட்டுத் திருக்கோயில் ஸ்தாபிக்கப் பட்டது ஆகவே அரியக்குடி திருத்தலத்தை வழிபடும் போது திருப்பதி, திருவரங்கம், திருமயம் திருத்தலங்களையும் வழிபட்ட பலன் உண்டு என்பது ஐதீகம்.

## பாற்கடலில் ஒரு அதிசயம்



சென்னை - பெங்களூர்ச் சாலையில் காவேரிப் பாக்கத்திலிருந்து 3கி.மீ. தொலைவில் உள்ள திருத்தலம் திருப்பாற்கடல்.

இத்திருத்தலத்தில் என்ன அதிசயம் என்றால் ஆவுடையார் மேல் பெருமாள் நின்று கொண்டிருக்கும் அதிசயத்தைத் தரிசிக்கலாம்.

புண்டரீக மகரிஷி மிகச் சிறந்த விஷ்ணு பக்தர், விஷ்ணுவைத் தரிசிக்காமல் அவர் உணவருந்துவது இல்லை.

இவர் இவ்வூருக்கு வந்தபோது, எல்லாம் சிவன் தலமாக இருக்கக் கண்டு விஷ்ணுவைத் தரிசிக்க இயலவில்லையே என்று வருத்தத்தோடு உணவருந்தாமல் இருந்தார்.

அப்போது மகாவிஷ்ணுவே ஒரு கிழவர் மாதிரி அவருக்கு முன்தோன்றி ''எதிரில் உள்ளது பெருமாள் கோயில்தான். அங்குப் போனால் விஷ்ணு தரிசனம் கிடைக்கும்'' என்று சொன்னார்.


''அது ஈஸ்வரன் கோயில். நான் பார்த்து விட்டு ஓடி வந்தேன்'' என்றார் புண்டரிகமகரிஷி.

புண்டரிக மகரிஷியைக் கட்டாயம் செய்து அழைத்துச் சென்ற பெரியவரான பெருமாள் ஆவுடையார் மேல், லிங்கம் இருக்கும் இடத்தில், தாமே நின்று தரிசனம் தந்த படியால், இன்றும் சிவலிங்க ஆவுடையார் மேல் பெருமாள் நின்று அருள்பாலிக்கும் அற்புதத்தைக் காணலாம்.

# மண்ணுலகை வாழ்விக்க வந்த விண்ணுலக விளக்கு

- ''தமிழாகரர்'' தெ.முருகசாமி

கடவுள் அளப்பிலா அருளாளன். துன்பப்படும் உயிர்களை ஈடேற்றித் துடிக்கும் பெருங்கருணையாளன். நாளும் துன்ப நெருப்பில் புழுவாய்த் துன்பமுறும் மாந்தரைக் காக்கும் மாக்கருணையால் ஒரு நாள் வைகுந்தவாசன், தன்னை எப்போதும் தாங்கிச் செல்லும் வாகனமாகிய கருடாழ்வாரையும் தனக்குப் பஞ்சணையாக உள்ள ஆதிசேடனாகிய பாம்பாம் ஆனந்தாழ்வாரையும் நோக்கி ''நீவிர் இருவரும் பூமியில் அவதரிப்பீர்களாக'' என வரம் ஈந்தான். அவ்வாறே கருடாழ்வார் திருக்கோளூரில் மதுரகவியாழ்வாராகவும் அனந்தாழ்வார் திருக்குருகூரில் உறங்காப்புளியாகவும் அவதாரம் செய்தனர்.



இந்நிலையில் நாராயணன் தன் அம்சமாக ஓர் ஆண் குழந்தையைக் காரிமாறன் - உடையநங்கை என்ற தம்பதியரின் வேண்டுகோளுக் குப் பரிசாகப் பிறக்கச் செய்தான். கதிரவன் ஒளிவீசும் திருமேனி கொண்ட அக்குழந்தை பிறந்தது முதல் கண்களைத் திறக்காமலும், பால் உண்ணவோ, அழவோ வாய்த்திறக்காமலும் அசைவற்றுக் கிடந்ததைக் கண்ட பெற்றோரும் பிறரும் வியப்பும் வேதனையும் அடைந்தனர். எம்பெருமானிடம் தம் வேதனையை விண்ணப்பித்த பெற்றோர்க்கு அருளைப் புரிந்த திருமாலின் ஆணைப்படித் தொட்டிலில் சலனமற்றிருந்த அக்குழந்தை சற்று அசையத் தொடங்கி, தவழ்ந்தபடியே சென்று அவ்வூர் ஆதிப்பிரான் சன்னதிக்கு வடபுறப் புளியமரத்தின் கீழ் பத்மாசனம் இட்டவாறு தவம் செய்யத் தொடங்கியது.

கண்டோர் யாவரும் பேராச்சரியம் கொண்டனர். இது ஒரு தெய்வீகக் குழந்தை என அதிசயித்த அளவில் பதினாறு ஆண்டுகள் அன்ன ஆகாரம் இன்றி யோக நித்திரையில் இருந்தது அக்குழந்தை.

பிறந்த குழந்தை பிற குழந்தையைப் போலில்லாமல் மாறாக இருந்ததால், மாறன் எனப்பெயர் பெற்றது. பிறந்த நிலையில் உடம்பிலுள்ள மூக்கின் வழியாக மூச்சைஇழுத்து வாழும் நிலையை வெறுத்து யோக நித்திரையில் சடமாகக் காணப்பட்டதால் சடகோபன் என்ற பெயரையும் பெற்றது.

திருக்கோளூரில் அவதரித்த மதுரகவியாழ்வார் திவ்விய திருத்தலப் பயணமாக வடநாடு சென்று அயோத்தியில் இருந்தபோது ஒரு நாள் மாலையில் ஏற்பட்ட அதிசய ஒளியைக் கண்டு வியந்து, அவ்வொளி தெரிந்த பக்கம் செல்லச் செல்ல தென்திசைவந்து சேர்ந்தார். கண்ணுக்குப் புலப்பட்ட அப்பேரொளியானது திருக்குருகூர்த்திருப்புளியின் கீழே யோகநித்திரையிலிருந்த சடகோபரிடம் அடங்கிற்று. இதுகண்ட மதுரகவியாழ்வாருக்குப் புதியதோர் ஞானம் பிறந்தது.

அஞ்ஞான இருள் நீக்கும் மெய்ஞ்ஞானம் ஒளி வீசும் பாலசூரியனாகத் தென்பட்ட சடகோபரின் யோக நித்திரையைக் கலைத்து மெய்ஞ்ஞான போதம் பெற விரும்பினார், இந்த உணர்ச்சி மேலீட்டால் தவமிருந்த தயாபரரிடம்,

செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால்
எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?

என்றதொரு தத்துவ வினாவைக் கேட்டார். இதுவரை மௌன ஞானியாக இருந்த சடகோபர், ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' எனத் திருவாய் மலர்ந்தார்.

செத்துச் செத்துப் பிறக்கும் மானுட ஜென்மத்தில் கண்ணுக்குப் புலனாகாத சின்ன உயிரானது எப்படித் தொடர்ந்து வாழ்கிறது? என்பது வினா. பற்றாகிய உணவை ஒவ்வொரு ஜென்மத்திலும் தின்று பிழைத்து வாழும் என்பது விடை. அத்து என்றால் தொடர்பு, பற்று, ஆசைஎன்றெல்லாம் பொருள்படும். ஆசையே பிறவிக்குக் காரணம் என்ற புத்தரின் கொள்கைப்படி உயிர் தான் கொண்ட - விடுபட முடியாத ஆசையில் அடுத்தடுத்துப் பிறவி எடுக்கும் என்பதைத்தான் சடகோபர் வினாவிற்குரிய பதிலாகச் சொன்னார்.

தான் கேட்டதற்குச் சரியான விடைபகர்ந்த இவ்வித்தகர் சாமானியர் அல்லர், மண்ணுலக



# திருமங்கையாழ்வார் கண்ட கல்கி அவதாரம்

திருமால் கலியுகத்தின் முடிவில் எடுக்கவுள்ள பத்தாவது அவதாரம் கல்கி அவதாரம் ஆகும்.

திருமங்கையாழ்வார் மாமல்லை தல சயனப் பெருமாள் ஆலயத்தை வழிபட்டபோது அப்பெருமாள் அவருக்குக் கல்கிஅவதாரக் காட்சியைக் காட்டியுள்ளார்.

''கடும்பரிமேல் கல்கியை
நான் கண்டு கொண்டேன்
கடிபொழில் சூழ் கடல் மல்லைத்
தல சயனத்தே''

என்று பாடியுள்ளார் திருமங்கையாழ்வார்.

மாந்தரை உய்விக்க வந்த விண்ணுலக விளக்கு என உணர்ந்து வான் மழைக்கு ஏங்கும் பயிர்போல மேலும் திருவாய் மலரக் காத்திருந்தார். இந்த நல்ல வேளையில் பதினாறு ஆண்டுக்காலம் யோக நித்திரையில் பாலசூரியனாயிருந்த சடகோபரின் பக்தனைச் சோதிக்க விரும்பாத பரந்தாமன் கருட வாகனத்தில் வந்து காட்சி தந்ததோடு சடகோபருக்கு மயர்வற மதிநலம் அருளியதால் அவர் பரமபதத்திற்கு உயிர்களை உய்விக்கும் பொருட்டாக உயர்வற உயர்நலம் உடைய திருவாய் மொழியை அருளினார். பரந்தாமன் பறவையாகிய கருடன்மீதேறிப் பறந்து வந்து சடகோபருக்குக் காட்சி தந்த ஊராதலால் உறங்காப்புளியுள்ள அவ்வூர் குருகூர் எனப்பட்டது. (குருகு-பறவை) இதனால் சடகோபர் குருகூர்ச் சடகோபன் எனப்பட்டார் என்பதற்கு அவர்தம் அருளிச் செயலான ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியிலும் ''குருகூர்ச் சடகோபன் சொன்ன'' என தம்மைக் கூறிக் கொள்வதையே சான்றாகக் கூறலாம். பன்னிரண்டு ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் யாவும் ஆராஅமுதமாயினும் நம்மாழ்வாரின் அருளிச் செயலான திருவாய்மொழியை அனைத்திலும் உயர்ந்ததாக வியாக்கியான கர்த்தாக்கள் போற்றுவர். நாலாயிரத்தில் நம்மாழ்வாரின் ஆயிரமும் உயர்ந்தது. அவ்வாயிரத்தில் முதல் முந்நூறும், அம்முந்நூற்றில் முதல் நூறும், அந்நூற்றில் முதல் பத்தும், அப்பத்தில் முதல் பாடலும், அப்பாடலில் முதல் வரியும், அவ்வரியில் உயர்வற என்ற முதற்சீரும் உயர்ந்ததாகும். நம்மாழ்வார் பாடல்களைக் கொழித்தெடுத்து அனுபவிக்கும்போது தெய்வமும் தமிழும் ஒன்றே என்பது வியாக்கியான கர்த்தாக்களால் உணர்த்தப்படும் உண்மையாகும். இவ் ''உயர்வற'' என்ற ஒரு சீருக்குள் நாலாயிரமும் அடக்கம் என்பது கருத்து.

பரந்தாமனைத் தேடும்நிலையில் வேதங்களும் உபநிடதங்களும யோகிகளும் அர்ச்சாசொரூபிகளும் பரிவப்பட்டுப் பின்னடையுமாறு (வெட்கப்பட்டுப் பின் நிற்க) இவ்வுயர்வற என்ற ஆரா அமுதத் தமிழே அவனை முழுவதுமாய் உணர்த்தியதாக வைணவர்கள் நம்மாழ்வார் திருவாய்மொழிக்கு ஏற்றங்கூறுவர். இதனால் சடகோபர் மற்றெல்லாரினும் எம்பெருமான் வைபவத்தில் மிகவும் ஆழ்ந்தவராகக் காணப்பட்டதால் எம்பெருமானே பெரிதும் உகந்ததான திருப்பெயரை - நம்மாழ்வாராகப் பெற்றார். இவ்வாறு ஆராஅமுதனுக்கு இணையாக நம்மாழ்வார் ஆகிவிட்டதால் மதுரகவியாழ்வார் ''தேவுமற்றறியேன்'' எனக் குருகூர் நம்பியையே (சடகோபராம் நம்மாழ்வாரையே) ஆண்டவனாகத் தொழுது உய்தார். இவ்வாறாகக் குருகூர்ச் சடகோபராக அவதாரம் செய்தவர் நம் நம்மாழ்வார்.

# ஈ வடிவில் அகத்தியர் வழிபட்ட திருஈங்கோய்மலை





அகத்தியர் திருஈங்கோய்மலை வரும்போது சந்நிதானம் மூடப்பட்டு விட்டது. ''நான் செய்தபிழை என்ன?'' என்று அகத்தியர் வருந்த வானில் அசரீரி ஒன்று தோன்றிற்று.

''சர்ப்பநதியில் நீராடினால் நீஈஉருவம் அடைவாய்.

ஈவடிவில் வந்து எம்மை வழிபாடு செய். பிறகு நிஜ உருவம் அதே நதியில் நீராடிப் பெறலாம்''

சர்ப்பநதியில் நீராடி, ஈ வடிவம் கொண்டு அகத்தியர் வழிபட்ட திருத்தலமே திரு ஈங்கோய்மலை ஆகும்.

திருச்சியிலிருந்து முசிறி சென்றால் அங்கிருந்து 4.கி.மீ. தொலைவில் உள்ளது திரு ஈங்கோய்மலை அருள்மிகு மரகதாசலேஸ்வரர் ஆலயம்.

# விநாயகர் 108 போற்றி




**அருள்வேண்டுதல் - சங்கற்பம்**

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன்னாளில்............ அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும் சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம் வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும் உமது திருவடிகளில் மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

**அருள்மிகு விநாயகர் 8 போற்றிகள்**

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
3. ஓம் ஆனை முகத்தனே போற்றி
4. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
5. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
6. ஓம் கற்பக விநாயகா போற்றி
7. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
8. ஓம் வைத்த மாநிதியே போற்றி


**அருள்மிகு விநாயகர் 16 போற்றிகள்**

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் ஆதார கணபதி போற்றி
3. ஓம் ஆரண முதலே போற்றி
4. ஓம் ஆனை முகத்தனே போற்றி
5. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
6. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
7. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
8. ஓம் ஓமெனும் பொருளே போற்றி
9. ஓம் கற்பக விநாயகா போற்றி
10. ஓம் சங்கத் தமிழ் தருவாய் போற்றி
11. ஓம் சித்தி விநாயகா போற்றி
12. ஓம் தத்துவ முதலே போற்றி
13. ஓம் பரம தயாளா போற்றி
14. ஓம் முக்கட் கரும்பே போற்றி
15. ஓம் வெற்றித் திருவே போற்றி
16. ஓம் வைத்த மாநிதியே போற்றி

**அருள்மிகு விநாயகர் 108 போற்றிகள்**

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அங்குசக் கரத்தாய் போற்றி
3. ஓம் அடியார்க் கெளியாய் போற்றி
4. ஓம் அமரர்கள் நாதா போற்றி
5. ஓம் அறக் கருணையாய் போற்றி
6. ஓம் அறிவானந்த உருவே போற்றி
7. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
8. ஓம் ஆதார கணபதி போற்றி
9. ஓம் ஆரண முதலே போற்றி
10. ஓம் ஆனை முகத்தனே போற்றி
11. ஓம் இடர்தனைக் களைவாய் போற்றி
12. ஓம் இடும்பை கெடுப்பாய் போற்றி
13. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
14. ஓம் இமயச் செல்வியின் சேயே போற்றி
15. ஓம் இளம்பிறை போலும் எயிற்றினாய் போற்றி
16. ஓம் ஈசனார் மகனே போற்றி
17. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
18. ஓம் உத்தமி புதல்வா போற்றி
19. ஓம் உயிரினுக்குயிரே போற்றி
20. ஓம் உய்வருள் பெருமான் போற்றி
21. ஓம் உலகெலாம் ஆனாய் போற்றி
22. ஓம் உலவாத இன்பமே போற்றி
23. ஓம் உலைவிலாக் களிறே போற்றி
24. ஓம் உள்ளமுயர்த்துவாய் போற்றி
25. ஓம் உள்ளத்தறியில் உள்ளாய் போற்றி
26. ஓம் உள்நிறை ஒளியே போற்றி
27. ஓம் எண்டோளன் செல்வா போற்றி
28. ஓம் எண்ணிய ஈவாய் போற்றி
29. ஓம் எழில் வளர் சோதி போற்றி
30. ஓம் என்னுயிர்க் கமுதே போற்றி
31. ஓம் ஏழைக்கிரங்குவாய் போற்றி
32. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
33. ஓம் ஒளிபெற அருள்வாய் போற்றி
34. ஓம் ஒற்றைக் கொம்பனே போற்றி
35. ஓம் ஓமெனும்பொருளே போற்றி
36. ஓம் கங்கை வேணியா போற்றி
37. ஓம் கணநாத கற்பகா போற்றி
38. ஓம் கணபதிக் களிறே போற்றி
39. ஓம் கயமுகற் கடிந்தோய் போற்றி
40. ஓம் கருவிலும் காப்பாய் போற்றி
41. ஓம் கற்றோர் கருத்தே போற்றி
42. ஓம் கற்பகவிநாயகா போற்றி

43. ஓம் காங்கேயன் தமையா போற்றி
44. ஓம் காலங்கடந்தோய் போற்றி
45. ஓம் காவிரிதரு சீரோய் போற்றி
46. ஓம் கிளரொளி வடிவே போற்றி
47. ஓம் குஞ்சரக் குரிசில் போற்றி
48. ஓம் கூவிள மாலையாய் போற்றி
49. ஓம் கைப் போதகமே போற்றி
50. ஓம் சக்கரந் தரித்தோய் போற்றி
51. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
52. ஓம் சந்திர சேகரா போற்றி
53. ஓம் சித்தத் தேனே போற்றி
54. ஓம் சித்தி விநாயகா போற்றி
55. ஓம் சித்தி புத்திமணாளா போற்றி
56. ஓம் சிவகணபதியே போற்றி
57. ஓம் சீர்பெறஅருள்வோய் போற்றி
58. ஓம் செல்வக் கணேசாபோற்றி
59. ஓம் செல்வமருள்வாய் போற்றி
60. ஓம் செல்வ நீறு தருவாய் போற்றி
61. ஓம் சேமம் தருவோய் போற்றி
62. ஓம் ஞானக் கொழுந்தே போற்றி
63. ஓம் தத்துவ முதலே போற்றி
64. ஓம் தத்துவப் பேறுதருவாய் போற்றி
65. ஓம் தந்தி முகனே போற்றி
66. ஓம் தந்தையாக் காப்பாய் போற்றி
67. ஓம் தழைத்திட வருவாய் போற்றி
68. ஓம் தற்பர விநாயகா போற்றி
69. ஓம் தாரக மறையே போற்றி
70. ஓம் துப்பார் மேனியனே போற்றி
71. ஓம் தொண்டர்தம் துணையே போற்றி
72. ஓம் நச்சினார்க்கினியோய் போற்றி
73. ஓம் நந்திமகனே போற்றி
74. ஓம் நாத முடிவே போற்றி
75. ஓம் நாவமர் பாட்டே போற்றி
76. ஓம் நான்ற வாயினை போற்றி
77. ஓம் நிறைவாழ்வருள்வாய் போற்றி
78. ஓம் நூற்பொருள் அளிப்பாய் போற்றி
79. ஓம் நெஞ்சநோய் தீர்ப்பாய் போற்றி
80. ஓம் பகையினைக் களைவாய் போற்றி
81. ஓம் பண்ணிடைத் தமிழே போற்றி
82. ஓம் பண்பிலார்க்கு அரியாய் போற்றி
83. ஓம் பரம தயாளா போற்றி
84. ஓம் பரிதிபோல் மதிதருவாய் போற்றி
85. ஓம் பாதிமதி சூடி போற்றி
86. ஓம் பிணிகள் களைவாய் போற்றி
87. ஓம் பிரணவக் களிறே போற்றி
88. ஓம் பிள்ளைகள் தலைவா போற்றி
89. ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி
90. ஓம் பேழை வயிற்றினாய் போற்றி
91. ஓம் பையரவசைத்தாய் போற்றி
92. ஓம் போக நாயகா போற்றி
93. ஓம் போத வடிவே போற்றி
94. ஓம் மணிநீல கண்டா போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி




திருச்சியில் உச்சிப்பிள்ளையார் எழுந்தருளி யுள்ள மலையின் அமைப்பு, யானை தலை மற்றும் துதிக்கையைப் போல் அமைந்துள்ள அற்புதம் கண்டு மகிழலாம்.

96. ஓம் மாசிலா மணியே போற்றி
97. ஓம் முக்கட் கரும்பே போற்றி
98. ஓம் முடியா முதலே போற்றி
99. ஓம் முத்தமிழ் முதல்வா போற்றி
100. ஓம் மெய்ப்பொருள் நீயே போற்றி
101. ஓம் மோதகக் கையினாய் போற்றி
102. ஓம் யாவு மானாய் போற்றி
103. ஓம் யோகியர் தலைவா போற்றி
104. ஓம் வல்லமை வல்லவா போற்றி
105. ஓம் விகடசக்கர விநாயகா போற்றி
106. ஓம் விண்மழை தருவாய் போற்றி
105. ஓம் வெற்றித் திருவே போற்றி
106. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி

**பாடல் : விநாயகர்**

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

**வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்**


அருள்மிகு விநாயகப் பெருமான் அருள் முழுமையாக உங்களுகக்குக் கிடைப்பதாகும் உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக, மங்களம் உண்டாகுக.

## கல்யாண விநாயகரை வழிபட கல்யாணம் கைகூடும்




திருச்சியில் அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள மலைக்கோட்டை அடிவாரத்தில் அருள்மிகு கல்யாண விநாயகர் யானை மண்டபத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். திருமணத்தடை, திருமண தாமதம் ஏற்படுபவர்கள் அருள்மிகு கல்யாண விநாயகரை வழிபட்டால் தடை நீங்கித் திருமணம் உடனே கைகூடும்.

# அரங்கர் கலைக்கூடம்



வழிபாட்டில் இல்லாத பண்டைய பல கலைப் பொருள்கள் திருவரங்கர் திருக்கோயிலில் இருக்கின்றன. அவற்றைப் பொதுமக்கள் பார்க்கும் வாய்ப்பு அளிக்கவே ''அரங்கர் கலைக்கூடம்'' அமைக்கப்பட்டுள்ளது,

அரங்கர் கலைக்கூடத்தில் உலகப்புகழ் பெற்ற தந்தச் சிற்பங்கள், தெய்வீகச் செப்புத் திருமேனிகள், முத்துத்திரை, பண்டைய பெரும்பூட்டுக்கள், பண்டைய காசுகள், வரலாறு கூறும் செப்பேடுகள், கற்சிலைகள் ஆகிய அனைத்தும் இடம் பெற்றுள்ளன.

கலைக்கூடத்தில் காட்சியில் முதலிடம் பெறுபவை தந்தச் சிற்பங்கள். கி.பி. 17-ம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் இச்சிற்பங்கள் செய்தளிக்கப்பட்டவை. இவற்றின் கலையழகையும், தொழில் நுணுக்கத்தையும் உலகமே வியக்கிறது.

இச்சிற்பங்களில் தெய்வீக உருவங்களும், நாயக்க மன்னர்களின் உருவங்களும் ஆக இருவகை உண்டு. தெய்வ உருவங்களில் திருமாலின் பல உருவங்களும் சிவபெருமானின் பல உருவங்களும் உள்ளன. நாயக்க மன்னர்கள் தங்கள் தேவியருடன் இணைந்து நிற்பதை மற்ற சிற்பங்கள் காட்டுகின்றன.

தெய்வீக உருவங்களைச் செப்புத் திருமேனிகளாக வார்த்து, விழாக்காலங்களில் வீதி உலாவாக எடுத்துவரும் நம் மரபை உலகம் போற்றுகிறது. தமிழகச் செப்புத் திருவுருவங்களுக்கு உலகில் பெரும் மதிப்பு உள்ளது தெரிந்ததே. அவற்றில் சில உருவங்கள் திருஅரங்கம் கலைக்கூடத்தில் உள்ளதைக் காணலாம். இங்குள்ள மதுரை நாயக்கர், தஞ்சையை ஆண்ட மராட்டியர் காலங்களில் செய்த பாவை விளக்குகள் அக்கால உடைகளையும் அணிகளையும் விளக்குகின்றன.

நல்முத்தாலான நல்லதொரு திரையில் நடராஜ உருவைக் காணலாம். பண்டு கோயில்களில் இருந்த பெரும் பூட்டுகளும் இங்கு இடம் பெற்றுள்ளன. ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள் (உலாந்தாக்காரர்கள்) முதலியோர் வெளியிட்ட பண்டைய நாணயங்களையும், திருவாங்கூர், ஹைதராபாத், குவாலியர் முதலிய சமஸ்தானங்கள் வெளியிட்ட காசுகளும் இங்குக் காட்சியில் உள்ளன.

இங்குப் பல செப்பேடுகள் உள்ளன. இவை பெரும்பாலும் விஜயநகர மன்னர்கள் காலத்தவை. இரண்டாம் தேவராயர், ஹரிஹரன், கிருஷ்ண தேவராயர், மல்லிகார்ச்சுனன் முதலிய மன்னர்கள்

## பண்பில் சிறந்த பரதன்

திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமித் திருக்கோயில் திருவாய்மொழி மண்டபத்தில் ''பண்பில் சிறந்த பரதன்'' எனும் தலைப்பில் இசைக் கொண்டல் பேராசிரியர் திருமிகு சத்தியமூர்த்தி அவர்களின் சமயச்சொற்பொழிவு நடைபெற்றது. நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.





அளித்தவை இங்குள்ளன. கிருஷ்ணதேவராயர் அளித்த இரண்டு செப்புப் பட்டயங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் சமஸ்கிருத மொழியிலும், தெலுங்கு எழுத்துக்களிலும் உள்ளன. ராணி மங்கம்மாள், சொக்கநாத நாயக்கர் முதலிய மதுரை மன்னர்கள் காலத்திய செப்பேடுகளும் உள்ளன. இது தவிர பழங்கால ஓலைச்சுவடிகளும் இடம் பெற்றுள்ளன.

சில அழகிய கற்சிலைகளையும் கலைக்கூடத்தில் காணலாம். இவற்றில் ஒரு கல்லாலான கோயிலின் மாதிரி உருவம் உள்ளது. பெருங்கோயில்கள் எழுப்புவதன் முன், இது போன்ற மாதிரி உருவங்கள் செய்வதும் நம் மரபு. அவ்வாறு சமைக்கப்பட்டதே இக்கோயில்.

இது தவிர வரலாற்றுச் சிறப்பு மிக்க இன்னும் பல பொருள்களும் காட்சியில் இடம் பெற்றுள்ளன. பக்தர்கள் அரங்கர் கலைக் கூடம் அவசியம் கண்டு பயன்பெற வேண்டும்.

## கொடைக்கு நிகர் வேறு இல்லை



வளம் இருக்கும்; கோடி கோடியாகக் குவித்து வைத்திருக்கலாம். ஒரு சுனாமி வந்து அடித்துக் கொண்டு போனால் எல்லா கோடிகளும் போய்விடும். அவைகளை வாரி இறைத்து வள்ளல் தன்மையோடு வழங்கி வைத்திருந்தால் ஒரு இடத்திலே குவித்த பொருளைச் சுனாமி அடித்தாலும் நாம் இறைத்த பொருள் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

வழங்குவதில் கொடை உள்ளம் - அந்தக் கொடை உள்ளத்திற்கு நிகரான உள்ளம் வேறு இல்லை.

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர்
கலைஞர் அவர்கள்

## திருக்குறளைப் பதிப்பித்த ஆங்கிலேயர்

கி.பி 1819இல் தமிழ்நாட்டில் வாழ்ந்து மறைந்த ஆங்கிலேயரான எப்.டபிள்யூ.எல்லீஸ் திருக்குறளுக்கு 340 பக்கங்கள் விளக்கம் எழுதிச் ''சங்ககாலத் திருக்குறள்'' என்ற பெயரில் வெளியிட்டார்.

இந்த 'எல்லீஸ்' என்ற ஆங்கிலேயரின் பெயரில் தான் அண்ணாசிலைக் கெதிரே தொடங்கி ஜாம்பஜார் வரை செல்லும் ஒரு குறுகிய சாலை ''எல்லீஸ்'' சாலை என வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த 'எல்லீஸ்' என்பவர் இராயப்பேட்டையில் ஒரு கிணறு தோண்டி அதன் கல்லில் இவ்வாறு வாசகமும் பொறித்துள்ளார்.

''சென்னைப் பட்டணத் தெல்லீசன்என்பான்
பண்டார காரிய பாரஞ் சுமக்கையிற்
புலவர்கள் பெருமான் மயிலையம் பதியான்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர்
திருக்குறள் தன்னிற் திருவுளம் பற்றி
.............................. புனலும்



வல்லரணு நாட்டிற் குறிப்பு''


(சென்னை தமிழகத் தொல்பொருள் துறை கண்டுபிடித்த கல்வெட்டு)

ஆதாரம் : வெ.நாராயணசாமி அவர்களின் சிறப்பு மிக்க கோயில்கள்'' நூல்
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை - 1

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

சிவமயம்

# அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்



[ஸ்ரீ இராகுஸ்தலம்]

திருநாகேஸ்வரம் – 612 204.

Website : www. thirunageswaramraghu.org.

email : sriraaghutemple@sancharnet.in

## இராகுப் பெயர்ச்சி விழா

### நாள் : 21-9-2006 வியாழக்கிழமை காலை 7.49 மணி

அருள்மிகு இராகு பகவான் மீன ராசியிலிருந்து கும்ப ராசிக்குப் பிரவேசிக்கிறார். இத்திருநாளை முன்னிட்டு சிறப்பு ஹோமங்கள், அபிஷேக ஆராதனை, இலட்சார்ச்சனை, தயிர் பள்ளயம், சந்தனக்காப்பு அலங்காரம், அன்னதானம் மற்றும் இன்னிசைநிகழ்ச்சிகளும் வெகு சிறப்பாக நடைபெற உள்ளன.

தோஷ பரிகாரம் செய்யவேண்டிய ராசிகள் :

**ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம்**

**இலட்சார்ச்சனை கட்டணம் ரூ, 125/-**

அருள்மிகு இராகுபகவான் உருவம் பொறித்த 2 கிராம் வெள்ளி டாலர் இலட்சார்ச்சனை பிரசாதத்துடன் வழங்கப்படும்.

இலட்சார்ச்சனை நடைபெறும் நாட்கள் (17-9-2006 முதல் 19-9-2006 மற்றும் 25-9-2006 முதல் 29-9-2006 வரை)

தோஷ பரிகாரம் செய்யவேண்டிய அன்பர்கள் ரூ. 125/- தொகையினை நேரிலோ பணவிடை அல்லது வரைவோலை (M.O. or D.D.) மூலமாகவோ திருக்கோயில் முகவரிக்கு அனுப்பி இலட்சார்ச்சனையில் பங்கு கொள்ள வேண்டுகிறோம். நேரில் வரஇயலாத அன்பர்களுக்கு இராகுப்பெயர்ச்சி விழாப் பிரசாதம் அஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

திருக்கோயில் முகவரி : **செயல் அலுவலர்**

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்
(ஸ்ரீ இராகுஸ்தலம்) திருநாகேஸ்வரம் - 612 204.
கும்பகோணம் வட்டம், தஞ்சைமாவட்டம்.

இங்ஙனம்

**ஜி. தென்னரசு, B.A. B.L,**
செயல் அலுவலர்.

**மா. சுப்ரமணியன், M.A.,**
தக்கார்/உதவி ஆணையர்

மற்றும்
திருக்கோயில் பணியாளர்கள்.

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08

உ
சிவமயம்

**மயிலையே கயிலை !**
**தென்னாடுடைய சிவனே போற்றி !**

**கயிலையே மயிலை !**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!**



# அருள்மிகு கற்பகாம்பாள்

## நவராத்திரி விழா

திருமயிலை அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயிலில் அருள்மிகு கற்பகாம்பாள் நவராத்திரி விழா 23.09.2006 முதல் 01.10.2006 வரை சிறப்பாக நடைபெறும். நிகழ்ச்சியில் கண்டுள்ளவாறுஅருள்மிகு கற்பகாம்பாளுக்கு நவராத்திரி மண்டபத்தில் அலங்காரமும், தீபாராதனையும் நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் இன்னிசைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. அன்பர்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு அருள்மிகு கற்பகாம்பாள் திருவருள் பெற வேண்டுகிறோம்.

### நவராத்திரி விழா 2006

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 23.09.2006 | - சனிக்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் அன்ன வாகனத்தில் கொலுமண்டபம் எழுந்தருளல் |
| 24.09.2006 | - ஞாயிற்றுக்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் காமதேனு வாகனத்தில் கௌரி அலங்காரம் |
| 25.09.2006 | - திங்கட்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் சரஸ்வதி அலங்காரம் |
| 26.09.2006 | - செவ்வாய்க்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் நாக வாகனத்தில் பத்மாசினி அலங்காரம் |
| 27.09.2006 | - புதன்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் ரிஷப வாகனத்தில் மகேஸ்வரி அலங்காரம் |
| 28.09.2006 | - வியாழக்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் இராஜராஜேஸ்வரி அலங்காரம் |
| 29.09.2006 | - வெள்ளிக்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் குதிரை வாகனத்தில் மீனாட்சி அலங்காரம் |
| 30.09.2006 | - சனிக்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் மகிஷாசுரமர்த்தினி அலங்காரம் |
| 1.10.2006 | - ஞாயிற்றுக்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் சிவ பூஜைக் காட்சி - காமாட்சி அலங்காரம் |
| 2.10.2006 | - திங்கட்கிழமை | அருள்மிகு கற்பகாம்பாள் குதிரை வாகனத்தில் பார் வேட்டை திருவீதி விழா |

இங்ஙனம்

**திருமதி. ந. திருமகள், பி.எஸ்ஸி., எம்.எல்.,**
துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

**திரு. தி- ஜெயராமன், பி.ஏ.பி.எல்.,**
தக்கார் / இணை ஆணையர்